572

சக்தி

மாத வெளியீடு

2583

9-6

சுபானு ௵
பங்குனி ௴

-/8

கதைகள்

சிங்காரி
மர யானை
சுதந்த்ர ஆடு
மாயப் பென்ஸில்
அத்தி பூத்தது
பேசும் விரல்

✲

கட்டுரைகள்

பொது ஜனம்
கவிதை மோகம்
பாசிஸமும்-
நாஜிஸமும்
அவல்

✲

வரலாறுகள்

கர்ம வீரன்-
லெனின்
வீர விஜய-
ரகுநாதன்

✲

பாடல்கள்

பிரிவு
நாட்டியக் கலை
ஓடிப்போன-
மனிதன்

✲

குறிப்புகள்

யுத்தமும்-
நாடகமும்
புத்தக உலகம்
காலச்சுழல்

தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
88844
சென்னை-600 008

ஸ்ரீமத் எம். எஸ். சுப்புலக்ஷ்மியின்

இன்னிசை களஞ்சியம்

HIS MASTER'S VOICE

செந்தமிழ் நாட்டுச் சங்கீதத்தை தெற்கே சிங்களத்திலும் வடக்கே பம்பாயிலும் தனது இன்னிசையால்
— ஒலிக்கச் செய்த —

இசைவாணி கோகிலகான
ஸ்ரீமதி எம். எஸ்.

சுப்புலக்ஷ்மியின்

"எச். எம். வி."
ரிகார்டு சங்கீதம்

✲

எல்லா "எச். எம். வி." கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்

N. 18218	கண்ணெடுத்தாகிலும் —சிம்மேந்திரமத்திமம்
N. 18208	மாதயை —வஸந்த
N. 18205	கண்டதுண்டோ வானத்தின் மீது
N. 18100	நீ இரங்காயெனில் —அடாணா வண்டினமுரலும் —தோடி
N. 18685	ஸரகுணபாலிம்ப —கேதாரகௌளம்
N. 18680	என்னகானு ராமபஜன —பந்துவராளி

சிறந்த சங்கீதம்

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

சீரிய ஒலிப்பதிவு

'ஹை பிடலிடி' ஊசிகள்
ஒரு ஊசியினால் பல ரிகார்டுகள் பாடிவைக்கலாம்
10 ஊசிகள் பாக்கெட் 1க்கு ரூ 2/4/.



ஜெயிக்கப்பட்ட நாட்டிற்கு மூன்று வெகுமதிகள்

கைப்பற்றிய நாடுகளில் ஜப்பானியர் புரியும் கொடுமைகளைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இதோ ஒரு உண்மையான நிகழ்ச்சி. வட சீனாவிலுள்ள ஹாரபினில் ஒரு சிறிய குற்றத்துக்காக மூன்று சீனாக்காரர்கள் இழுத்துவரப்பட்டு தூக்கிவிடப்பட்டார்கள். உடல்களைத் துண்டித்துவிட்டு தலைகள் மாத்திரம் தொங்கிக் கொண்டிருக்க விடப்பட்டன. ஜப்பானியரின் அன்புக்கும், நல்ல குணத்திற்கும் இது ஒரு அத்தாட்சியல்லவா!

இது ஆயிரத்தில் ஒரு உதாரணம். உணர்ச்சி வேகத்திலேற்பட்ட கொடுமையல்ல இது. ஜப்பானியர் மனப்பான்மையை இது தெளிவாகக் காட்டுகிறது. இக் கொடியோருக்கும் தந்திரத்தைக் கையாளத் தெரியாமலில்லை. ஜப்பானியரின் வாக்குறுதிகளையும் இன்பமான வார்த்தைகளையும் கேட்டு மோந்துவிடாதீர்கள்! இக் கொலைபாதகர்களை அவர்கள் சொல்வதைக் கொள்ளாமல் அவர்களுடைய நடத்தையைக் கொண்டே மதிப்பிடுங்கள். ஏன்? இந்தக் காட்டு மிராண்டிகள் நேர்மையற்றவர்கள், மிருக குணம் படைத்தவர்கள். மற்றையோரை அடக்கி, துன்புறுத்தி, ஆளப்பிறந்த உயர் பிறப்பினர் தாங்களே என்று நம்பியிருக்கிறார்கள் இப்பாதகர்கள்.

இத்தகைய நாட்டுடன் இந்தியா எவ்வுறவையும் வைத்துக் கொள்ளக்கூடாது. அவர்களை ஒரே வழியில்தான் நடத்த வேண்டும், அதாவது அவர்களை நசுக்கவேண்டும். இக் கொடுமையினின்று இந்தியாவும், மற்ற நாடுகளும் தப்ப வேண்டுமாயின் ஜப்பானியர் நிபந்தனையற்ற சரணாகதியடைய வேண்டும். அதற்குக் குறைந்து நாம் எதிர்பார்க்கக் கூடாது.

AAA.574.TM.

கதாமணி

முதற் புத்தகம் விலை ரூ. 1-0-0

(தபால் செலவு அணு மூன்று)

வருஷ முடிவுக்குள் சராசரி மாதம் ஒன்று வீதம் வெளியாகும் பத்து புத்தகங்களுக்கும் விலை ரூ. 10-0-0

(முன்பணம் அனுப்பினால் தபால் செலவு கிடையாது)

கதாமணி பிரசுராலயம்
21, மஹாலக்ஷ்மி தெரு,
தியாகராயநகர், சென்னை

சிறு வித்திலிருந்து தோன்றியது ஆலமரம், ஆனால், அது எண்ணற்றவர்களுக்கு நிழலைக் கொடுக்கிறது. அதைப் போல, ஏழை, எளிய வர்கள் முதல் பணக்காரர் வரை எல்லோரும் வாங்கி ஆனந்திக்கும் முறையில் 'அசோகா' குறைந்த விலையில் கிடைக்கிறது.

எம். கே. கிருஷ்ண செட்டி

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்

மதராஸ் விற்பனையாளர்கள் :

வி. கனகய்ய செட்டி & கம்பெனி

நைனியப்ப நாய்க்கன் தெரு

சுபானு
மலர் 9

சக்தி

பங்குனி
இதழ் 6

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

யுத்தமும் நாடகமும்

கடைசியாக, இந்திய எல்லைக்குள்ளும் ஜப்பானியன் நுழைந்து விட்டான்; மணிப்பூர் சமஸ்தானத்தில் அவன் பிரவேசித்து விட்டான்! பிரிட்டிஷ் – அமெரிக்க – சீனத் துருப்புகள் ஒருபுறம் பர்மாவுக்குள் நுழைந்ததைப் பார்த்து, ஜப்பானியன் இன்னெரு பக்கமாக இங்கே புகுந்திருக்கிறனம். எதற்காக? ஐக்கிய தேசங்களின் முன்னணிப் படைகளுக்கு, உணவு முதலிய தளவாடங்கள் போகும் பாதைகளை மடக்கி விட்டால், அவைகள் பின் வாங்க நேருமல்லவா? அதுதான் ஜப்பானியனின் நோக்கமாம். இது, இந்திய சேனதிபதி ஆச்சின்லெக் துரையின் கருத்து. ஆனல், ஒரு சீன ராணுவ நிபுணர் மற்றெரு காரணம் சொல்கிருர்: "மணிப்பூரிலே ஜப்பானியன் புகுந்தது, ராணுவ நோக்கம் கொண்டதல்ல; அரசியல் நோக்கமாகும். கலவரத்தைக் கிளப்பிவிடவே அவன் எண்ணுகிருன்" என்கிருர் அந்தச் சீன நிபுணர். ஜப்பானியனின் நோக்கம் என்ன வானலும் சரி; அவன் உள்ளே நுழைந்து விட்டான். ஒன்றிரண்டு இடங்களில் சிறிது சிறிது முன்னேறியும் வருகிருன். அது மட்டில் சந்தோஷச் செய்தியல்ல.

நாடு பிடிக்கும் வெறி கொண்ட ஜப்பானியன், இந்திய மண்ணிலே–பாரத பூமியிலே – படையுடன் கால் வைத்து விட்டான். இந்த நேரத்தில், இந்தியா எந்த நிலையில் இருக்கிறது? இங்கே என்ன நடக்கிறது? இந்த நவீன கால யுத்தத்தில், எந்த நாட்டிலும் முழு ஜனங்களுமே போரிட வேண்டும்; ஜனங்களோடு ஜனங்களாக ஒன்று பட்ட அரசாங்கமே போரிடவேண்டும். அப்படிச் செய்தால்தான், வெற்றி காண முடியும். இந்தியா அந்த நிலையில் இருக்கிறதா?

ஜப்பானியன் இந்திய எல்லைக்குள்ளே வந்திருக்கிருன். இந்த நிலைமையில், உலகின் வேறெந்த நாட்டிலும் நடக்காத – நடக்க முடியாத – புதுமை யொன்று, இங்கே நடக்கிறது. அதுதான் சட்டசபை நாடகம். இந்தியச் சட்டசபை என்று ஒன்று எதற்காக இருக்கிறது என்றே நமக்குப் புரிய வில்லை. ஜனப்பிரதிநிதிகளுக்குப் பொறுப்பில்லாத ஓர் அரசாங்கம் இங்கே ஆளுகிறது. அந்தச் சர்க்கார், தன் நிர்வாக சபைக்கு மான்யம் கோருகிறது. அதை நிராகரித்து, அதனிடம் தனக்கு நம்பிக்கையில்லை என்று இந்தியச் சட்டசபை தெரிவிக்கிறது. சர்க்கார் ஒரு நிதி மசோதாவைக் கொண்டு வருகிறது. அதையும் நிராகரித்து, மீண்டும் தனக்கு அதனிடம் நம்பிக்கையில்லை என்று தெரிவிக்கிறது சட்டசபை. வைஸிராயின் விசேஷ அதிகாரத்தால், சர்க்காரின் திட்டப்படியே எல்லாம் நடத்தப்பட்டு விடும். ஆனலும், ஜனங்களும் சர்க்காரும் ஒன்றுபட் டிருக்கவில்லை, ஜனங்களின் சர்க்கார் இங்கே நடக்க வில்லை என்ற விளம்பரம் உலகறிய வெளியாகிறது! இது வேறு எந்த நாட்டிலேனும் நடக்குமா?

ஜப்பானியன், எல்லையிலே நிற்கிறன். இந்திய அசெம்பிளியிலே, தேசத்தின் மகத்தான தேசிய ஸ்தாபனமான காங்கிரஸ், முஸ்லீம்களின் பிரபல ஸ்தாபனமான லீக் இரண்டின் பிரதிநிதிகளும் உள்பட — முக்கால் டஜன் ஆநாமதேயங்களைத் தவிர மற்ற ஜனப் பிரதிநிதிகள் அனைவருமே, 'எங்களுக்குப் பொறுப்பில்லாத சர்க்காருக்கு, எங்கள் ஒத்துழைப்பைத் தரமாட்டோம்' என்று வீராவேசமாய் எதிர்த்துப் பேசுகிருர்கள். உலகத்திலே எங்கேயாவது இந்த விந்தை நிகழுமா? பிரிட்டனையே எடுத்துக் கொள்ளுவோம். அது இந்தப் போரிலே முதன்மை தாங்கும் நாடு. அங்கே சர்ச்சில் சர்க்கார் ஆள்கிறது. பிரிட்டனைப் படையெடுக்க, ஹிட்லர் வருவதாக வைத்துக்கொள்ளுவோம். அப்போது பார்லிமெண்டிலே இப்படி வாதங்கள் நடக்குமா? நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள்தான் நிறைவேறுமா? பிரிட்டனிலே எதிரி படையெடுக்க, முஸ்தீப்புக்கூடச் செய்யவில்லை. சொல்லப்போனல், எதிரிமீது பிரம்மாண்டமாய்ப் படையெடுக்க, பிரிட்டனே முஸ்தீப்புச் செய்திருப்பதாய்க்கூடத் தொனிக்கிறது சர்ச்சிலின் பேச்சு. இங்கிலேயிலே, சில பார்லிமெண்ட் அங்கத்தினர்கள், அட்லாண்டிக் சாசனத்தைப் பற்றி வாதிக்க வேண்டுமென்ருர்கள். 'இது நம்பிக்கையில்லாத் தீர்மானம் போல் இருக்கிறது. சட்டப்படி வேண்டிய அளவு கையெழுத்துக்கள் வாங்கினுல்தான் இதை வாதிக்கலாம்' என்ருர் சர்ச்சில். அந்த அங்கத்தினர்கள் ஓய்ந்து உட்கார்ந்துவிட்டார்கள். ஏன்? நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பார்லிமெண்டிலே வாதிக்க அல்ல, கொண்டு வரக்கூட அங்கே ஆள் இருப்பதாய்த் தெரியவில்லை. காரணம் என்ன? போர் நடக்கும் போது, ஜனங்களும் சர்க்காரும் ஐக்கியமாய் இருப்பது அவசியமாகும். போர் நடக்கும் நாடுகளிலே, மிகப் பெரிய நெருக்கடி வந்தால் ஒழிய, ஜனங்களின் சர்க்கார் மாறுவதில்லை; மாற்ற யாரும் துணிவதுமில்லை. அது ஜனங்களின் சர்க்கார் நடக்கும் நாடுகளில். இங்கேயோ, ஜனங்களுக்கும் சர்க்காருக்கும் சம்பந்தமே இல்லா திருக்கிறது. உன்னத அரசியல் தத்துவங்களெல்லாம் வாய் அள்ளிலே நிற்கின்றன. என்ன விபரீதம்!

எல்லையிலே ஜப்பானியன் வந்து நிற்கும்போது, இந்தியாவிலே அரசியல் நாடகமா நடப்பது? ஜனங்களுக்கும் சர்க்காருக்கும் ஸ்நானப் பிராப்தி கூட இல்லை என்ற விளம்பரமா பிரகடனமாவது? இந்திய மக்களுக்கு 'அடிமை' என்ற உணர்ச்சி போக வேண்டும்; அவர்களின் ஏக்கம் தீர வேண்டும்; சுதந்தர மக்கள் என்ற உற்சாகம் அவர்களிடம் பொங்க வேண்டும்; அவர்களுடைய மதிப்பரிய மாணிக்கம் போன்ற தலைவர்கள் சிறையிலே வாடலாகாது; 'எங்களுக்கிருப்பது எங்கள் சர்க்கார்; அது பணிப்பதையெல்லாம் நாங்கள் செய்வோம்; அது கேட்கும் தியாகத்தையெல்லாம் நாங்கள் புரிவோம்; அதுவும் நாங்களும் ஒன்று' என்று மக்கள் பெருமிதத்தோடு சொல்லிக் கொள்ளக்கூடிய ஒரு தேசிய சர்க்கார் அவர்களுக்கு வேண்டும் — இதற்கெல்லாம் வழி என்ன? ஆண்டவனே! நீதான் காட்டவேண்டும்.

✲

சிவாஜியின் சிறப்பு: மகாராஷ்டிரத்திலே கோல்வாடி மீது சிவாஜி படையெடுத்துச் சென்று அதைக் கைப்பற்றிக் கொண்டார். சமஸ்தான அதிபதியையும் அவருடைய மருமகளையும் கைது செய்து கொண்டுவந்து சிவாஜியின் முன்பு நிறுத்தினர்கள் மகாராஷ்டிர வீரர்கள். அந்தப் பெண் மிக்க அழகி. சிவாஜி நினைத்திருந்தால், அவளை மறு நிமிஷமே தமது அந்தப்புரத்துக்கு அனுப்பி யிருக்கலாம். ஆனல், மனதில் களங்க மில்லாது அவர் அந்தப் பெண்ணின் அழகைப் புகழ்ந்ததுமல்லாமல், "இந்த யுவதியின் வயிற்றில் நான் பிறந்திருந்தால் எவ்வளவு நன்ருயிருக்கும்!" என்ருர். அந்தப் பெண்ணுக்கு ஏராளமான பரிசுகளை வழங்கி, பத்திரமாகக் கணவன் வீட்டுக்கும் அனுப்பிவைத்தார்.

காலச்சுழல்

கஸ்தூரி ஞாபகச் சின்னம்: மகாத்மா காந்தியின் உத்தம மனைவி கஸ்தூரி பாயின் ஞாபகார்த்தமாக, பெண்களுக்கு நாடெங்கும் கல்வி புகட்ட 75லட்ச ரூபாய் நிதி ஒன்றைத் திரட்டி, அடுத்த அக்டோபர்மீ 2உ காந்திஜியின் 75-ஆவது ஜயந்தியின் போது அவரிடம் சமர்ப்பிப்பது என்று பண்டித மாளவியாஜி தலைமையில் 40 பிரபல தலைவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்கள். கஸ்தூரி பாய், தேசத்தின் தாய்போல மதிக்கப்படுப வர்; திட்டமோ உத்தமமான திட்டம். தேச முழுவதும் இந்த நிதிக்குப் பேருற் சாகத்துடன், நன்கொடை உதவ வேண்டும்; உதவுவார்கள். மகாத்மாஜி யும் அதற்குள் விடுதலை யடைந்து, தேசத்தின் பேரன்பு நிறைந்த காணிக் கையை நேரே தம் கையால் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது நம் ஆசை யும் நம்பிக்கையுமாகும்.

காலந் தள்ளும் பட்ஜெட்: சென்னை சர்க்காரின் பட்ஜெட், வெளியாகி யிருக்கிறது. வரிகள் ஒன்றும் குறைவுபடவில்லை. யுத்தம் முடியும் வரையில் அந்த ஆசையே வேண்டாம் என்று, சர்க்கார் அறிக்கை கருராய்ச் சொல்லிவிட்டது. 1944–45-ஆம் வருஷத்துக்கு வரு மானம் 30 கோடியே 20 லட்ச ரூபாய். செலவு 23 கோடியே 75 லட்ச ரூபாய். இப்படிக் கோடிக் கணக்கில் நடக்கும் வரவு செலவில், புதிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு, 32 லட்சத்துச் சொச்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட் டிருக்கிறது. மிச்சம் விழும் பணத்தையெல்லாம் சேர்த்து வைத்து, யுத்தத்துக்குப் பிறகு அபி விருத்தி வேலை செய்யப்போகிறார்க ளாம்! விவசாயம், கல்வி முதலியவை களில்,யுத்தம் கழிந்துதான் முன்னேற வேண்டும் என்று காத்திருக்க வேண் டியதில்லை. ஆனாலும், 'காலத்தைத் தள்ளுவோம்; அதற்கான பட்ஜெட் தான் இது' என்கிறார் சர்க்கார் அதி காரி. காலத்தையே தள்ளிக்கொண் டிருந்தால் விடிவது எப்போது?



தமிழ்ப்பணி செய்த வங்காளி: சுவாமி சாசுவதானந்தர், ராம கிருஷ்ண மடத்தைச் சேர்ந்தவர். மௌனமாகச் சேவை செய்யும் பெரி யார். சென்ற பதின்மூன்று வருஷங்க ளாக, ராமகிருஷ்ண மடத்தின் சென்னைக் கிளையின் மூலம், இவர் தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் செய் திருக்கும் சேவை பாராட்டுக்கு உரிய தாகும். வேதாந்த சம்பந்தமான நூல் களை, அழகிய முறையில் தமிழில் வெளியிட்ட பெருமை இவரைச் சாரும். இவர் வெளியிட் டிருக்கும் பல அருமையான நூல்களில்,திரு அருள் மொழி குறிப்பிடத்தக்கதாகும். தமி ழகத்தின் பல சமயத்தாரின் பலவகை யான பக்திப் பாடல்களை ஒன்று திரட்டி, புத்தக வடிவாக வெளியிட இவர் எடுத்துக் கொண்ட சிரமம் கொஞ்ச நஞ்சமல்ல. ராமகிருஷ்ண மடத்துக்கும், அதன் பிரசுரங்களுக் கும் தமிழ நாட்டில் ஏற்பட் டிருக்கும் மதிப்புக்கு இவரே ஒரு முக்கிய காரண மாவார். பல வருஷகாலம் சலியாமல் உழைத்த பிறகு, இவர் வட நாடு செல்லுகிறார். தமிழரின் மனப்பூர்வ

மான நன்றி, அவருக்கு என்றும் உரிய தாகும். அவர் யாத்திரை இனிது நடைபெற வாழ்த்தி விடை கொடுக்கிறோம்.

புதிய வரிகள்: இந்திய சர்க்காரின் 1944–45-ஆம் வருஷ பட்ஜெட், இந்திய அசெம்பிளியில் விவாதித்து நிராகரிக்கப்பட்டது. என்ன செய்தால் என்ன? வைஸிராயின் விசேஷாதிகார முத்திரையோடு, அதுதான் அமுலுக்கு வரப்போகிறது. தேயிலை, காப்பி, பாக்கு ஆகியவைகளுக்கு, பவுண்டுக்கு இரண்டணு விகிதம் புதிய சுங்கத் தீர்வை விதிக்கப்போகிறார்கள். இதனல் 23 கோடியே 50 லட்ச ரூபாய் அதிக வருமானம் கிடைக்குமாம். புகையிலை உபரி வரியும் சிறிது கூட்டப்படுமாம். இந்த வரிகளெல்லாம் முக்கால்வாசியும் ஏழைகளின் தலையில்தான் சுமரும். வருமானவரி முதலிய வரிகளையும் சர்க்கார் அதிகரித்திருக்கிறது. எந்த வரியா யிருந்தால் என்ன? செலவிலே அதிகாரமில்லாத பொதுஜனங்களுக்கு – தங்கள் பிரதிநிதிகள் அடங்கிய சர்க்காரைப் பெற்றிராத ஜனங்களுக்கு, வரிகள் உயர உயர மனக் கசப்புத்தான் அதிகமாகும். அயல்நாடுகளி லிருந்தெல்லாம் வந்த துருப்புகளுக்கும், வெளிநாட்டுச் சரக்குகளை வாங்குவதற்குமாகச் செலவாகிறது ஏராளமான பணம்; ஆகையால், சாதாரண காலத்தில் 426 கோடியாக இருந்த ராணுவச் செலவு, இப்போது 1004 கோடி ரூபாய்க்கு மேல் உயர்ந்திருக்கிறது. இத்தகைய செலவுகளால் தேசத்துக்கு நஷ்டமே யாகும். கேட்டால், 'ஓ! யுத்தமல்லவா நடக்கிறது?' என்பார்கள். யுத்தம் நடக்கும் நாடு எதிலும்கூட, வங்காளம் மாதிரி பஞ்சத்தால் ஜனங்கள் சாகவில்லையே! இந்தியாவைத்தானு யுத்தத்தின் சகல பீடைகளும் பீடிக்கவேண்டும்?

சர்ச்சில் தோல்வி: பிரிட்டனில் சர்ச்சில் மந்திரி சபை ஏற்பட்டது முதல், பார்லிமெண்டில் அவருடைய சர்க்காருக்குத் தோல்வி ஏற்பட்டதேயில்லை. இப்போதுதான் முதன் முதலாக ஒரு தோல்வி வந்திருக்கிறது. புதிய கல்வி மசோதா சம்பந்தமான ஒரு விவாதத்தின்போதுதான் இந்தத் தோல்வி. முதலில் இந்த மசோதாவின் முக்கியத்தைப்பற்றி நண்பர்கள் அறியவேண்டும். இந்தியாவில், இந்த மாதிரி ஒரு மசோதாவைத் தற்போது கனவில்கூடக் காணமுடியாது. பிரிட்டனின் புனர்நிர்மாண முயற்சியில் மிக அடிப்படையான ஒரு திட்டம் என்று, இந்தக் கல்வி மசோதா மதிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் இரண்டு வயதிலிருந்து 18 வயது வரையில், அதாவது கல்லூரிப் படிப்பு வரையில், முற்றிலும் இலவசக் கல்வி அளிக்க இந்த மசோதா வசதி செய்கிறது. இரண்டு வயது முதல் 15 வயதுவரை பிரிட்டிஷ் குழந்தை ஒவ்வொன்றும் கட்டாயமாய்க் கல்வி பயின்றாகவேண்டும். பதினைந்து வயதுக்குப் பிறகுதான் பள்ளிக்கூடத்தை விடலாம். பள்ளிக்கூடம் விடும்வயதை, கூடிய சீக்கிரத்தில் 16 வயதாக உயர்த்தவும் போகிறார்களாம். அதற்கு ஏராளமாய் உபாத்தியாயர்கள் வேண்டுமல்லவா? யுத்தம் முடிந்ததும், வீட்டுக்குத் திரும்பும் ஸோல்ஜர்கள் பலருக்கு உபாத்திமைப் பயிற்சி அளிக்கவும், இந்த மசோதாவில் திட்டம் போடப் பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் கல்வி மந்திரியான பட்லர், நீண்ட காலம் சிரமப்பட்டு இந்த மசோதாவைத் தயாரித்திருக்கிறார். இந்த அபூர்வமான மசோதாவில், ஆண், பெண் இரு வகை உபாத்தியாயர்களுக்கும் சரி சமமாய்ச் சம்பளம் கொடுக்கும் விஷயமாய்த்தான், சர்ச்சில் சர்க்காருக்குத் தோல்வி. அதாவது, ஆண்களுக்குச் சற்று அதிகச் சம்பளம் இருக்கவேண்டு மென்று, சர்க்கார் விரும்பியது; அதைப் பார்லிமெண்டு எதிர்த்து, ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமாய்ச் சம்பளம் கொடுக்கவேண்டும் என்ற திருத்தத்தை நிறைவேற்றியிருக்கிறது. என்னதான் இருந்தாலும், சர்ச்சில் பழம் பசலிக் கருத்துகளுடைய ஒரு பெருச்சாளி தான். ஆகையால், அவருடைய சர்க்கார், எந்தப் புரட்சிகரமான மாறுதல்களிலும், ஓர் இடுக்கு வைக்காமல் போகாது. மெல்ல ஒரு தோல்வி ஆரம்பித்திருக்கிறது. போகப் போக எப்படி முடியுமோ?

கவிதை மோகம்

எம். எல். சபரிராஜன்

கவிதை, கவிதை, கவிதை! எதற்கெடுத்தாலும் இன்று தமிழ் நாட்டில் ஒரே கவிதை மயமாயிருக்கிறது. புதிதாய்க் கிளம்பும் எழுத்தாளர்கள் எல்லோரும் கவிகளாகவே கிளம்புகிறார்கள். பண்டிதர்களைப் பார்த்துப் பயந்த காலம் போய், புதிய கவிகளைப் பார்த்துப் பயப்பட வேண்டியதாயிருக்கிறது. தமிழ் நாட்டில் கவிதை பெருகிவரும் வேகத்தைப் பார்த்தால், வசனம் அடியோடு மறைந்து, கவிதையிலேயே பேசவும் எழுதவும் ஆரம்பித்து விடுவோமோ என்ற அச்சம்கூட உண்டாகிறது. உண்மையான கவிதை தான் எது? அதை நாம் சிந்திக்க வேண்டாமா?

தமிழ் மறுமலர்ச்சி யுகம் தோன்றிப் பல ஆண்டுகளாகின்றன. ஆனால், பாரதியாருக்குப் பின், குறிப்பிடத்தக்க எழுத்தாளர்கள் யாருமே தோன்றவில்லையென்று சிலர் அங்கலாய்க்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை, அவர்களைப் போல அதைரியப்படவோ, அதிருப்தியடையவோ நான் தயாராக இல்லை. என்னுடைய கருத்து இது: இன்று, தமிழ் மறுமலர்ச்சி உன்னத நிலைமையில் விளங்குகிறது. அது பாரதியின் காலத்தில் இருந்ததைக்காட்டிலும், இன்று பத்து மடங்கு, இருபது மடங்கு—என், எல்லையற்ற அளவு புத்துயிரும் புதிய ஊக்கமும் அடைந்திருக்கிறது. அந்தக் காலத்தில், கேவலம் ஒரே ஒரு கவி. அவரைச் சுற்றிச் சுற்றிப் புகழ்ந்தார்கள் நம் பெரியோர்கள். இன்று அத்தகைய குறை எதுவும் இல்லை. இப்போது கவிகளுக்குப் பஞ்சமே இல்லை. ஏனெனில், இன்று புதிதாக எழுதப் புறப்பட்டிருப்பவர்கள் அனைவரும் கவிகள்!

இது விநோதமாகத் தோன்றலாம். ஆனால், உண்மை. பத்திரிகையுலகில் இருப்பவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். வெளியில் இருப்பவர்களுக்கு ஒருவேளை தெரியாதிருக்கலாம்.

என்ன இருந்தாலும், கவி என்றால், அதற்கு ஒரு தனி மதிப்பு இருக்கிறதல்லவா? வறட்டு வறட்டென்று நாற்பது பக்கத்திலோ ஐம்பது பக்கத்திலோ, அற்புதமான கதையையோ கட்டுரையையோ நீங்கள் எழுதினாலும் அது வெறும் கதையாகவோ, கட்டுரையாகவோதான் இருக்குமே யொழிய, கவிதையாகி விடுமா? கவி என்றால், அது வானமும் பூமியுமாய் வளர்ந்து நிற்கும் பெருமையுடையது. கவியை அரசர் முதல் ஆண்டிவரை எல்லோரும் புகழ்கிறார்கள். நிகழ் கால உலகம் மட்டுமா, எதிர் கால உலகமும் இறந்த கால உலகமும் அவர்களைப் புகழ்கிறது. இள

மங்கையர்கள் குழந்தைகள் உள்பட, எல்லோரும் கவியின் பாடல்களைப் பாடிப் பாடிக் கண்ணீர் பெருக்குகிருர்கள். கவி என்றதும், நம் மனத்தில் அசாதாரணமான ஒரு பக்தியும் உணர்ச்சியும் தோன்றுகிறது. அவனைப் பூலோகத்து மனிதனுகவே நாம் நினைப்பதில்லை. கடவுளும் கவியும் அண்ணன் தம்பிகளைப் போல என்று நினைக்கிருேம். அவர் ஓர் உலகத்தைப் படைக்கிருர்; இவன் ஓர் உலகத்தைப் படைக்கிருன். அது கண்முன் காட்டவேண்டிய உலகம். ஆகையால், அதைப் படைப்பது கடினம். ஆனுல், கவியோ, எட்ட முடியாத கற்பனை ஏணியில் ஏறி, யாருக்கும் புலனுகாத ஓர் உலகத்தைப் படைக்கிருன். அப்படி இருக்கும்போது, கேவலம் இந்தக் கதையையும் கட்டுரையையுமா எழுதிக்கொண்டிருப்பது?

ஒரு கவி எழுதிவிட்டால் போதும், கம்பர் வால்மீகி ஷேக்ஸ்பியர் கூட்டத்தோடு சேர்ந்து விடலாம். இரண்டாவது கவி எழுதியானதும், அவர்களுடைய கவிகளுடன் தன் கவியை ஒத்துப் பார்த்து, அவர்களின் குறைகளையும் தன்னுடைய நிறைகளையும் நன்கு ஆராயலாம். மூன்ருவது கவி எழுதியானதும், உலக மகா கவியாகிவிடலாம். நான்காவது கவி எழுதியானதும், பாழும் இந்தத் தமிழ்நாட்டாரின் பராமுகத்தை எண்ணிக் கவலைப்பட்டுக்கொண்டே, பிராணனை விட்டு விடலாம். அப்படிப் பிராணனை விடும்போது அதிலும் ஓர் இன்பம், குதூகலம் இருக்கிறது. இந்த நிகழ்கால உலகம் கவனிக்காவிடினும் எதிர்கால உலகம் அவனை விட்டுவிடுமா? அவனுக்கு எத்தனை விழாக்கள், ஜயந்தி தினங்கள் கொண்டாடுவார்கள்!

இதைத் தமிழ் எழுத்தாளர்கள் நன்கு உணர்ந்திருக்கிருர்கள். ஆகையால், அவர்கள் கிளம்பும் போதே, ஒரு கையில் எழுதுகோலுடனும் மற்ருெரு கையில் கவியுடனும் கிளம்புகிருர்கள். எதைப்பற்றி வேண்டுமானுலும் கவி எழுத, அவர்கள் தயாராயிருக்கிருர்கள். ஆனுல், பெரும்பாலும் காதலைப் பற்றியும் கவிதைக் கன்னியைப் பற்றியுமே கவிதை கிளம்பும். இந்த இரண்டும் தப்பினுல் தென்றல், ஆறு, கடல், சந்திரன் போன்றவையே அவர்கள் கையில் அகப்பட்டுத் திண்டாடும். நாலு நாலு வரிகளில் பெரிய பெரிய விஷயங்களை அடக்கிவிடுகிருர்கள். எதுகைகளையும் மோனைகளையும் அவர்கள் அடுக்கும் திறமையைப் பார்த்து, கொத்தர்களும் வெட்கித் தலைகுனிய வேண்டும். வேறு சில சாமர்த்தியமான கவிஞர்களும் இருக்கிருர்கள். அவர்கள் குறைந்தபட்ச சிரமம் எடுத்துக் கொள்ளக்கூடத் தயாராயில்லை. பாரதி பாட்டில் இரண்டடி, தேசிகவிநாயகம் பிள்ளை பாட்டில் இரண்டடி, பாரதிதாசன் பாட்டில் இரண்டடி, நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை பாட்டில் இரண்டடி—இந்த விதமாக எல்லாவற்றையும் ஒருங்கே சேர்த்து, கதம்பக் கவிதை புனைந்து தமிழன்னையை அலங்கரிப்பார்கள்.

கவிதை என்ருல் என்னவென்பதைப்பற்றிப் பலர் பலவிதமாகக் கூறியிருக்கலாம். பல பேராசிரியர்கள், இதைத் துருவித் துருவி ஆராய்ந்து, கணக்கற்ற புத்தகங்கள் பல எழுதியிருக்கலாம். அவைகளில் எதுவும் மனதுக்குப் பிடிக்கவில்லை. அது பகுத்தறிவுக்கு ஒவ்வாததாய் இருக்கிறது. சில கவிதைகளைப் படித்தே இந்த முடிவுக்கு வர நேர்ந்திருக்

கிறது. கவிதையின் லட்சணத்தைப்பற்றி இரண்டே வார்த்தையில் சொல்லிவிடலாம்: 'கவிதை என்ருல் யாருக்கும் புரியாது. புரியும்படி எழுதுபவன் கவியல்ல.'

பிரௌனிங், ஆங்கிலத்தில் பெரிய கவிஞர். அவருடைய காலத்தில், எலிஸபெத் அரசி பிரிட்டனில் ஆட்சிபுரிந்து வந்தாள். அவளுக்கு, பிரௌனிங் எழுதிய கவிதைகள்மீது அளவற்ற காதல். ஒருநாள் அவனுடைய கவிதைகளை அவள் வாசித்துக்கொண்டிருந்தாள். ஓரிடத்தில் பொருள் விளங்கவில்லை. மிக முயன்று பார்த்தும், பொருள் தெரிய வழியில்லை. அவள், பிரௌனிங்கை அழைத்து, குறிப்பிட்ட கவிதையைக் காட்டி, "இதற்குப் பொருள் என்ன?" என்று வினவினுள். பிரௌனிங் அதை வாசித்துப் பார்த்தார். சிந்தித்துப் பார்த்தார். கவி இதயமெல்லாம் ருர். கடைசியில் விளக்க முயன்புகுந்து பொருள் அவர் சொன்ஞர்: "மகாராணி, கவிஞன் கவிதை எழுதும்போது, அதன் பொருள் இரண்டுபேருக்கு மாத்திரமே தெரியும். அவர்களில் ஒருவன், அந்தக் கவிதையை எழுதிய கவி; மற்ருெருவர் கடவுள். இப்போது, கவி பொருளை மறந்துவிட்டான். கடவுள் ஒருவருக்கே பொருள் தெரியும். அவர்தான் நமக்கு விளக்கவேண்டும்."

தமிழ்நாட்டில் பல வருஷமாகப் பாட்டு எழுதி வருபவரும், ஆனுல், துர்ப்பாக்கியவசமாக, இந்த நன்றிகெட்ட தமிழர்களால் கவி என்று ஒப்புக்கொள்ளப் படாதவருமான ஒரு 'சிறந்த' கவிஞர் (அவருடைய ஆன்மா சாந்தி அடைவதாக) ஒரு பத்திரிகையில் தம் திறமையைக் காட்டியிருந்தார். நான்கு பாட்டுக்கள். நண்பரும் நானும் வாசித்துப் பார்த்தோம். முதல் மூன்று பாட்டுக்களுக்கு, ஒருவாறு சிரமப்பட்டுப் பொருள் விளங்கிக்கொண்டோம். நாலாவது பாட்டுக்கு வந்தபோது, எங்கள் திறமை அதனிடம் பலிக்கவில்லை. எவ்வளவோ முயன்று பார்த்தும், அதன் பொருள், 'வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாது நிற்கும்' பரப்பிரம்மத்தை ஒத்திருந்தது. எங்கள் அறிவுக் குறைவை நினைத்து வருந்தி, எங்களை நாங்களே சலித்துக்கொண்டு, அதை ஒருவாறு நிறுத்தினேம்.

பிரௌனிங்கு கூறிய வாசகம், அந்தக் கவிக்கு மிகவும் பொருந்துகிறது. மற்றவர்களுக்குப் புரிவது கவிதையல்ல; அப்படிப் புரிந்துகொள்ள இயலாமற்போனுலும், படிப்பவனுக்கு ரசிகத் தன்மை இல்லை—என்ருகிறது.

கவி எழுதும் மோகம் நம் இளைஞர்களிடமிருந்து நீங்கவேண்டும். கவி என்ற பெயரில், எதை எழுதினுலும் கவியாகி விடலாம் என்ற வீண் பிரமையிலிருந்து அவர்கள் விடுபடவேண்டும். கவிகளிலும் ஆயிரக்கணக்கான சின்னஞ் சிறிய கவிகள் இருக்கிருர்கள். அதற்கும் அதிர்ஷ்டம் வேண்டும் அல்லவா? சந்திர சூரியர் போல, ஒரு சிலர்தான் கவிதாலோகத்தின் பேரரசர்களாக விளங்க முடியும். மற்றவர்கள், மின்மினிபோல, கண்ணை மூடி மூடித்திறக்க வேண்டியதே.

"தம்பீ, உனக்கு வசனம் நன்ருக எழுத வருமானுல், பாட்டு ஏன் எழுதுகிருய்?" என்று ஒருவர் கேட்கிருர். மண்டையில் அடித்தாற்போல நல்ல கேள்வி.

கவி பிறக்கிருன். உண்டாவதில்லை. ஆகையால், அதற்கு

அனுயாசமான திறமையும் இயற்கைச் சக்தியும் வேண்டும். ஆனால், வசனம் அத்தகையதல்ல. கட்டுப்பாடோ, இதர வரையறைகளோ அற்றது. நம்முடைய சிந்தனைகளையும் லட்சியங்களையும், வானவெளியில் திரியும் குருவியைப் போலச் சுதந்தரமாகப் பரப்பலாம். சில விஷயங்களில் பார்க்கப்போனால், கவிதையைக் காட்டிலும் வசனத்திற்கே பல சிறப்புக்கள் இருக்கின்றன. அப்படி இருக்கும்போது, தென்றலையும் காற்றையும் பற்றி, மற்றவர்கள் பாடியதையே திருப்பித்திருப்பிக் கிளிப் பிள்ளைகளைப்போல ஏன் பாடிக்கொண்டு இருக்க வேண்டும்?

கவியின் வாக்கு இதயத்திலிருந்து பிறக்கிறது. ஆகையால், வெறும் புத்தகப்படிப்பின் மூலம் அத்தகைய சக்தியை அடைந்துவிட முடியாது. படிப்பது வேறு, எழுதுவது வேறு. ரசிகர்கள் ரசிக்கத்தான் முடியுமேயொழிய, ரசித்ததைப்போல எழுதுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அவர்கள் தங்கள் படிப்பின் திறமையால், அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில அழகிய வார்த்தைகளைக் கோத்து, கவி புனைய முயலலாம். அது காதுக்கு ஓரளவு இனிமையாகவும் இருக்கலாம். ஆனால், அது கவியாகாது. ஏனெனில், அதில் உயிர் இராது. அது நம் இதயத்தைத் தொடாது. அந்த அலங்கார வார்த்தைகள், பிணத்துக்குச் சூட்டும் அணிகளைப் போன்றிருக்கும்.

இந்திய நாட்டுக் கவிஞராகிய தாகூர், கவிதையைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்:

"கவி என்றால் ரசம் மிக்க வாக்கியம் அல்லது வாக்கியங்கள். அவை, உள்ளக் கிளர்ச்சி எனும் ரசத்தைத் தூண்டுகின்றன. அது, உணர்ச்சிகளால் வலுவடைந்த கருத்துக்களை நமக்கு அளிக்கிறது. கருத்துக்களைப் பற்றிய மொட்டை உண்மைகள் இலக்கியமல்ல. சூரியன் உருண்டையாயிருக்கிறது, தண்ணீர் திரவமயமானது, நெருப்புச் சூடாயிருக்கும் என்பன போன்ற விஷயங்களைத் திருப்பித் திருப்பிச் சொல்லுவது சகிக்க முடியாத விஷயமாகும். ஆனால், சூரியோதயத்தின் அழகைப் பற்றிய வருணனை, நமக்கு என்றும் இன்பத்தை அளிக்கும். ஏனெனில், அதில் சூரியோதயத்தைப் பற்றிய விஷயம் மட்டும் அடங்கியிருக்கவில்லை. அதற்கும் நமக்கும் உள்ள சம்பந்தமும் அதிலிருந்து வெளியாகிறது."

✲

பாதிரியார் ஞானோதயம்: டீன் இஞ்ஜு என்பவர் பிரபல பாதிரியார். நகைச்சுவையோடு விறு விறுப்பாய், அவர் எழுதியுள்ள கட்டுரைகளும் நூல்களும் பிரசித்தமாகும். அவர் ஒரு முறை, "இந்தக் கறுப்பு ஜாதியாரை யெல்லாம், நாசூக்கான வழிகளால் உலகத்திலிருந்தே ஒழித்து விட வேண்டும்" என்று எழுதியவர். அதே ஆசாமிக்கு, இன்று திடீரென்று இந்திய கீதோபதேசத்தில் மோகம் வந்திருக்கிறது. 'ஆத்மா பிறப்பதில்லை; இறப்பதுமில்லை. பிறப்பும் திரிபும் மரணமும் அற்று, சாசுவதமாயிருப்பது' என்ற வாக்கியத்தை அவர் பாராட்டுகிறார். புனர் ஜன்மத்திலும், ஞான மார்க்கத்திலும் அவருக்கு நம்பிக்கை வந்திருக்கிறது. ஞானம் வந்து விட்டால்மட்டிலும் போதாது; மனிதனுக்கு ராகத் துவேஷங்கள் போக வேண்டும் என்பதுதான் இந்திய வேதாந்தத்தில் மிக முக்கிய தத்துவமாகும். பாதிரியார் சுவாமிக்குக் கறுப்பு ஜாதியாரிடம் துவேஷம் இருந்ததே, அது போயிற்றா? அந்த விஷயம்தான் தெரியவில்லை.

காலம் மாறிவிட்டது

கி. பி. முதல் நூற்ருண்டு

கடியாரங்கள்

TIMES HAVE CHANGED

20வது நூற்ருண்டு

ஆதிகாலத்தில் காலத்தினைக் காட்ட ஜலமானிகளை உபயோகித்து வந்தார்கள். அதைவிட சரியான காலங் காட்டக்கூடிய மணல்மானிகளை ரோமர்கள் காலத்திலும் அதற்கு முன்னுலும் உபயோகித்து வந்தார்கள். 20-ம் நூற்ருண்டிலோ சாஸ்திரீயமான, அடக்கமான, நம்பகமான வசீகரமான ஒரு கடியாரம் அவசியம், இந்த அவசியத்தை பல ரகங்களில் விற்கப்படும் 'வெஸ்ட் எண்ட்' கடியாரங்கள் சரிவர பூர்த்தி செய்கின்றன. இலவச காட்லாக்கிற்கு எழுதவும்.

வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ.

பம்பாய் :: கல்கத்தா



பிஜோ ஸெமி தின்—11 சைஸ்
பேடன்ட் எவர்பிரைட் ஸ்டீல் ரூ. 50
18 காரட் முழுத் தங்கம் ரூ. 365



பிஜோ ஸெலக்ட்: பேடன்ட் எவர் பிரைட் ஸ்டீல் ரூ. 175. 18 காரட் முழுத் தங்கம் ரூ. 475

சாமான்கள் சரிவர வராததினுல் விளம்பரப்படுத்திய மாடல்களை சப்ளை செய்ய இயலாது. ஸ்டாக் உள்ளவரை சப்ளை செய்வோம்.

WEST END WATCH Co.

Bombay - Calcutta



நல்ல காரியம்

செய்வதில் சந்தோஷம்

உங்கள் குடும்பத்திற்கு நீங்கள் செய்யவேண்டிய கடமைகளை — இன்ஷ்யூர் செய்துகொண்டு அவர்கள் ஒருவித பணக் கஷ்டமும் இல்லாமலிருக்கச் செய்வதில் பரம திருப்தி. குடும்பத்திலேயே விலை மதிக்க முடியாத ஒரு அமைதியும் சந்தோஷமும் நிலவும்.

உங்கள் இன்ஷ்யூரன்ஸ், உலகத்திலே எல்லாவித சொத்து போல் கிடைக்க வேண்டிய சொத்து.

யுனைடெட் இந்தியா லைப்

அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்

எஸ்ப்ளனேட் : : மதராஸ்

இந்தியா பூராவும் பிராஞ்சுகளும் ஏஜன்ஸிகளும் உண்டு

சிங்காரி

மஞ்சேரி எஸ். ஈசுவரன்

தூங்குமுன் அலிபாபா கதையின் ஆச்சர்யக் குகையாயிருந்த ரயில் வண்டி, விழிக்கும் போது, கிளியோபாட்ராவின் அந்தப்புரமாக மாறி விடுகிறது. எல்லார்க்கும் நட்ட நடுவிலே, அவளது சிங்காரம் நடைபெறுகிறது. அதிலே ஏதாவது ரகசியமுண்டா? அது தான் என்னவோ?

கல்கத்தா மெயில், வழக்கத்தை விட அன்றிரவு அதிகக் கூட்டமாயிருந்தது. மூன்று வருஷங்களாய், நான் திரும்பத் திரும்பக் கோடித்துக் கொண்டிருந்த பிரயாணம் அது. கடைசியில், மூன்றே நாழிகையில் தீர்மானித்து, புறப்பட்டு விட்டேன். அதிக மூட்டை முடிச்சுகள் இல்லை; ஒரு ஸ்டீல் டிரங், என் படுக்கையும் தலையணைகளும் அடங்கிய ஒரு ஹோல்டால், ஒரு தெர்மாஸ் பிளாஸ்க், ஒரு பழக் கூடை இவைதான் என் சாமான்கள். சென்னையிலிருந்து கல்கத்தாவுக்குப் போய்ச்சேர, முப்பத்தாறு மணி நேரம் ஆகுமே; இடையில் சில வேளைக்காவது உண்ணத் தேவையான தின்பண்டங்களை அந்தக் கூடையிலே வைத்துக் கொண்டேன்.

மூன்றும் வகுப்பு டிக்கட் கொடுக்கும் ஜன்னல் அண்டையில், ஒரு பெரிய புரட்சி நடந்தது. ஆயுதச் சட்டத்துக்குப் பயந்தோ என்னவோ, யாரும் ரத்தம் சிந்தாததுதான் குறை; மற்றப்படி, அந்த ஆயுதங்கள் செய்யக் கூடிய காரியத்தை, குத்து விடும் முஷ்டிகளும், மோதித் தள்ளும் முழங்கைகளும், போதாக் குறைக்குக் கூர்மையான நகங்களும், ஓரளவு செய்து தீர்த்தன. சகல விதத்திலும் ஆடு மாடுகள் மாதிரியேதான், ஜனங்கள் மோதியடித்து நெருக்கிக் கொண்டிருந்தார்கள்; அவைகளின் கனைப்பும் கத்தலும்கூட, இவர்களிடமிருந்து புறப்பட்டது.

எஞ்சின், முதல் முறை ஊதி விட்டது; இன்னும் அஞ்சே நிமிஷத்தில், வண்டி புறப்பட்டு விடும். இந்த அல்ப இடை நேரத்தில், அந்த விலங்கு உலகத்

துக்குள்ளே நானும் ஒருவனாய்ப் புகுந்து புறப்பட்டேன். வியர்வையால் நனைந்து அப்பளமான டிக்கட்டு ஒரு கையிலே; உராய்ந்து சூடேறி ஆவி யெழுப்பிக்கொண்டிருந்த சில்லறை மறு கையிலே—இந்தக் கோலத்தோடுதான், நான் பின்வாங்கினேன். என் மூட்டை முடிச்சுகளைத் தாங்கிய போர்ட்டர் பின் தொடர, நாலு கால் பாய்ச்சலில் பிளாட்பாரத்துக்குள் நுழைந்தேன். 'கேட்டு'க்கு அருகே இருந்த ஒரு வண்டிக்குள்ளே, புளி அடைவதுபோல், போய் அடைந்து கொண்டேன்.

ஜன்னல் வழியாய் போர்ட்டர் என் சாமான்களை உள்ளே தள்ளினான். டிரங்கை வாங்கி, எப்படியோ என் கால் அடியில் வைத்துக் கொண்டேனோ இல்லையோ, பக்கத்தி லிருந்த பிரயாணிகள் ஏதோ முணு முணுக்கத் தொடங்கினார்கள்; ஹோல்டாலை நான் லாகவமாய் வாங்கி, டிரங்கின்மேல் வைத்த உடனே, அந்த முணு முணுப்பு, கொஞ்சம் உரத்துக் கேட்டது; தெர்மாஸ் பிளாஸ்கையும் பழக் கூடையையும் வாங்கிக் கொண்டு, வண்டியை நான் வட்டமாய் ஒரு கண்ணோட்டம் விட்டபோதோ, அது உச்சஸ்தாயியை அடைந்து விட்டது. இதே சமயம், வண்டியும் ஜிலு ஜிலு என்று, ஸ்டேஷனை விட்டு நகரத் தொடங்கியது.

சகோதரப் பிரயாணிகள் என்னைப்பற்றி என்ன நினைத்தார்களோ! அதைக்குறித்து நான் லட்சியமே செய்யவில்லை. வாய் விட்டு அவர்கள் பொழிந்த வசவு மாரியின் வேகம் தணிந்து, அவர்கள் பாட்டுக்குத் தங்களுக்குத் தாங்களே 'கச மிச' என்று ஏதோ முறு முறுத்துக் கொண்டார்கள். நான் சிந்தனையில் ஆழ்ந்தேன். சுற்றிலும் காணும் பொருள்களைக் குறித்துச் சிந்திக்கும்போது, தன்னை மறந்து புற உலகக் காட்சியைப் பார்க்கும்போது, தன்னுடைய இருப்பிடம் மிகக் குறுகினால் என்ன, விரிந்திருந்தால்தான் என்ன; ஒருவனுக்கு எத்தகைய ஆனந்தம் உண்டாகிறது! ஒவ்வொரு சிறு சிந்தனையும், நம் மனதைப் புதுமைப் படுத்தி, அதற்கு ஜீவன் கொடுக்கிறது; நம் உள்ளத்தினுள்ளே உறையும் கருணைக்கு மணங் கொடுக்கிறது; சிருஷ்டியிலே பிரகாசமாயுள்ள களிப்பையெல்லாம், வாழ்க்கையின் நானாவகையான அழகுகளையெல்லாம், நமக்கு வெளிப்படுத்துகிறது. புற உலகைப்பற்றிச் சிந்தனை செய்வதே பேரின்பம்; ஆனால், ஆத்மத் தியானமோ துன்பமாகும். ஏனெனில், ஆத்மத் தியானம் செய்பவன், மனோதத்துவச் சுழலிலே அடியோடு புகலடைந்து விடுகிறான்; தன் மனதைத் தானே சேதித்துக் கொள்ளுகிறான்; எல்லையற்ற அகண்டத்தை விட்டு, தன்னிலே தானே முடங்கிவிடுகிறான்; சாந்தியும் ஒளியும் இலங்கும் பெருந்தடாகத்தை விட்டு, இருள் சூழ்ந்து சேறும் சகதியுமான ஒரு சிறு குழியிலே மூழ்கி விடுகிறான்!

ஆகையால், நான் நிற்கும் நிலையின் சூழலைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கினேன்: ஒரு மூன்றும் வகுப்பு வண்டி. அதிலே, கொள்ளக்கூடியதை விட மூன்று மடங்கு மனிதர்கள், மூச்சு முட்ட அடைந் திருக்கிறார்கள். அவர்கள் போதாதென்று, சின்னஞ் சிறு துணி மூட்டைகள் முதல் பெரிய பெரிய கள்ளியம் பெட்டிகள் வரையில், பற்பல விதமான தட்டுமுட்டுச் சாமான்கள், வண்டியிலே ஓர் அங்குலம்

கூட விடாமல், பெஞ்சிகளுக்கு நடுவேயும் பாதையிலும், அலங்கோலமாய், சத்துரு உள்ளே வராதபடி தடுக்கும் கோட்டை கொத்தளங்கள் மாதிரி, அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

இந்தக் காட்சியைப் பற்றி, வர்ண விசித்திரமான பற்பல உவமானங்கள், என் மனதிலே தோன்றின. அவை எல்லாவற்றிலும் மிக முக்கியமாய் ஒன்றைத்தான் சொல்ல வேண்டும்: அரபிக் கதையில் வரும் நாற்பது திருடர்களின் குகையே, எனக்கு அப்போது அதிகமாய் ஞாபகம் வந்தது. மார்ஜியானா என்ற பெண்ணின் வாசனைகூட அங்கே வீசியது. வெறும் கற்பனை அல்ல; தூரத்தில், மூலையில் இருந்த ஒரு பெஞ்சியில், ஓர் இளம் கன்னிகை இருந்தாள். கறுத்த உடம்பு. அவளது உடையலங்காரத்தைக் கொஞ்சம் மாற்றிவிட வேண்டியதுதான் – மின்னுகிற முட்டாக்குக்குள் புகுந்து, மெல்லிய பட்டுச் சராயும் ஜிகினுப் பொட்டிழைத்து ஜரிகையிட்ட ரவிக்கையும் அணிந்து, காலிலே சதங்கை ஒலிக்க, கையிலே கஞ்சிரா முழங்க, மார்பிலே கட்டாரி ஒன்று ஒளித்துக் கிடக்க, அவள் வந்து நின்ருளானல் போதும்; தத்ரூபம் அலிபாபா வீட்டு நாட்டியக்காரியான அடிமைப் பெண் ஆகிவிடுவாள்.

அரபிக் கதைகள்...நாற்பது திருடர்...மார்ஜியானா....அலிபாபா...திற ஸெஸாமி – என் சிந்தனை வெள்ளம் இவ்விதம் பொங்கிக்கொண்டே போகையில், திடீரென்று ஒரு குரல் அதைக் குலைத்தது:

"ஒக்காருங்கோ, ஸார்."

கடைசி நிமிஷத்தில் நான் வண்டிக்குள் புகுந்தேனே, அப்போது மிகப் பலமாய் முணுமுணுத்த மகானுபாவர்களில் ஒருவர்தான் இப்படிச் சொன்னர்.

தமக் கருகே துளியூண்டு காலி இருந்த ஓர் இடுக்கைக் காட்டி, "இங்கே ஒக்காருங்கோ" என்று மீண்டும் அவர் வெகு உபசாரமாய்க் கூறினர்.

நான் உட்கார்ந்தேன்.

"எவ்வளவு தூரம் பிரயாணமோ?" என்று அவர் கேட்டார்.

"கல்கத்தாவுக்கு" என்று, இதற்குமேல் பேச எனக்கு இஷ்டமில்லை என்று தொனிக்கும்படி ஒரு தினுசான குரலில்; நான் பதில் அளித்தேன்.

"கல்கத்தாவுக்கா! அவ்வளவு தூரமும் நின்னுண்டேயா போகப் போறேள்?"

பச்சாதாபப்பட்டுத்தான் சொன்னரோ; அல்லது இரக்கப்பட்டுத் தானே? நான் மௌனமாகவே, சம்பிரதாயப் புன்சிரிப்போடு, அதைக் கேட்டுக்டுக் கொண்டேன். எப்படியிருந்தாலும், அது எனக்குக் கொஞ்சம் விசிராந்தியாய்த்தான் இருந்தது. கூடையிலிருந்து சிறிது பலகாரத்தை எடுத்து உண்டு, தெர்மாஸ் பிளாஸ்கைத் திறந்து காப்பியைக் குடித்து, சற்றுச் சிரமபரிகாரம் செய்து கொண்டேன். சூடான காப்பியைக் குடித்ததும், என் சிந்தனை கொஞ்சம் உற்சாக மாகவே ஓடியது.

"நீங்க படுத்துக்க விரும்பினு, அதுக்கும் ஒரு யோசனை சொல்றேன். பெஜவாடா போறவரையிலும், கூட்டம் இப்படியே 'திமி

திமி' என்றுதான் இருக்கும்'' என்றார் சகோதரப் பிரயாணி.

உண்மையிலே எனக்கு ஒத்தாசை செய்யத்தான் அவர் முயன்றார்.

வண்டியின் மத்தியில் இருந்த சுமைதாங்கியை நிமிர்ந்து பார்த்துக் கொண்டே, "என் சாமான்களை ஒரு தினுசாப் பங்கிடு பண்ணி, இடம் ஒழிச்சுத் தரேன்'' என்றார். உடனே, இதை அங்கே தள்ளி அதை இங்கே இழுத்து, பரபர என்று வேலை செய்யத் தொடங்கினார். ஒரு சிறிய ஸூட்கேஸை, டிரங்கின்மேல் வைத்தார். ஒரு டிபன் ஸெட்டை மேலே இருந்து எடுத்து, பெஞ்சிக்குக் கீழே பதுக்கினார். மொத்தத்தில் தம் சாமான்களையெல்லாம் கச்சிதமாய், எவ்வளவு சுருக்கமான இடத்தில் அடக்க முடியுமோ அவ்வளவு சுருக்கமாய், அடக்கி வைத்தார். என்னுடைய ஸ்டீல் டிரங்கை, நானும் பெஞ்சிக்கடியில் தள்ளினேன். ஹோல்டாலை அவிழ்த்து, என் ரஜாய் மெத்தையையும் ஒரு தலையணையையும் வெளியே எடுத்து, மேலே தொங்கிய சுமைதாங்கியில் போட்டு, ஒரு விதமாய் எனக்குப் படுக்கை சித்தம் செய்து கொண்டேன். பின்பு, என் சகோதரப் பிரயாணியின் கருணைக்காக அவருக்கு வந்தனம் செலுத்திவிட்டு, மேலே தொற்றினேன்.

சற்று நேரம் அப்படியே உட்கார்ந்து கொண்டு, வண்டிக்குள்ளே இருந்த பண்டங்களும் மனிதர்களும் எனது ஆகாசப்பார்வையில் எத்தகைய காட்சி அளிக்கிறார்கள் என்று காண, ஒரு கண்ணோட்டம் விட்டேன். அந்தப் பண்டங்களும் மனிதர்களும், சுருட்டு, சிகரெட், பீடி வகையறாக்களின் புகை மண்டலத்துக்குள்ளே மூடியிருக்கக் கண்டேன். காற்றெல்லாம் ஒரே நாற்றம். பின்பு, அதோ அந்தக் கோடியிலே இருந்த கறுத்த பெண்ணை—என் மார்ஜியானாவை—கடைசியாகப் பார்த்து விட்டு, படுத்துக் கண்ணை மூடப் போனேன். ஆனால், மார்ஜியானா கடைசிக் காட்சியாக இருக்க முடியவில்லை. வண்டிச் சுவரிலே, கொட்டை எழுத்துக்கள் பதித்திருந்த ஒரு போர்டு, கண்கள் மூடும் தருணத்தில், என் பார்வையை இழுத்தது. அதில், "இந்த வண்டியில் 20 பிரிட்டிஷ் துருப்புகள் அல்லது 60 இந்திய சிப்பாய்கள் உட்காரலாம்'' என்று ஆங்கிலத்தில் எழுதியிருந்தது. இப்போது தெரிகிறது வண்டி என் இவ்வளவு ஜனநெருக்கமாயிருக்கிறது என்ற காரணம். ஒவ்வொரு சாமான்ய மனிதனுமே ஒரு சிப்பாயாகக் கிளம்பக்கூடியவன்தான் என்று வைத்துக் கொண்டாலும், பிரிட்டிஷாருக்காக இந்திய உடல்கூறுகளை இப்படிக் காயகல்பம் செய்யச் செய்வது சற்றும் சகிக்க முடியாத விஷயம்தான். ஒருவேளை, கல்கத்தா இருட்டறைச் சித்திரவதைக்குப் பழி வாங்குவதற்காகத்தான், இந்த மூன்றாம் வகுப்பு ரயில்வண்டி ஏற்பட்டிருக்குமோ! கல்கத்தா இருட்டறை, வெறும் கட்டுக்கதையே என்று இப்போது நிரூபணமாகி விட்டது. என்றாலும், அதன் தூண்டுகோல் நிலைத்துவிட்ட தாக்கும்!

கல்கத்தா இருட்டறை...கட்டுக்கதை...நான் எவ்வளவு நேரம் தூங்கினேனோ, தெரியாது. ஆனால், என் கண்களைத் திறந்தபோது, வண்டியிலே கொஞ்சம் இடம் விலத்தியாயிருப்பதுபோல் என்னவோ ஓர் உணர்ச்சி எனக்கு உண்டாயிற்று. நான்

நன்றாய்க்கண்ணை விழித்தெழுந்து உட்கார்ந்தேன். வண்டியிலிருந்த கும்பல், பெரிதும் குறைந்திருந்ததுதான், முதல் முதலில் என் கண்ணிலே பட்டது. அவர்களைச் சூழ்ந்திருந்த புகை மண்டலமும் விலகித் தெளிந்திருந்தது. ஜன்னல் வழியாய்க் குளிர்ந்த காற்று வீசியது. வண்டியிலே எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். சில பேர் குறட்டை விட்டு, அந்த நிசப்தத்தைக் குலைத்துக் கொண்டிருந்தார்கள்; அவர்கள் வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும், விதம் விதமான குளவிகள்போல் புறப்பட்ட சப்த ஜாலங்கள், அற்புத பாண்டு வாத்திய கோஷம் மாதிரி முழங்கின. என் பாதாள உலகத்திலே என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்காக, கீழே குனிந்து நோக்கினேன். அங்கே ஒரு சிறு நாடகம் நடக்கக் கண்டேன்: எங்கும் காணக்கிடைக்காத, கண் குளிரச்செய்யும் நாடகம். அதிலே அதிசயமான ஒரு காவிய ரசனையும் பொதிந்திருந்தது. என்ன தான் நடக்கிறது என்று பார்க்க, அது என் ஆவலைத் தூண்டியது.

முன்னிரவு நேரத்தில் அங்கே இருந்த என் மார்ஜியானாவைக் காணோம். அவள் இருந்த இடத்தில், இப்போது ஒரு வாலிப மங்கை உட்கார்ந்திருந்தாள். இருபது வயதுக்குமேல் இராது. புது மலர்போல், அவள் இளமை கொழித்திருந்தாள். பளிச்சென்ற கண்கள்; விசாலமான கன்னம்; கடைந்தெடுத்ததுபோல், வலமும் இடமும் ஒத்த உடம்பு—இதையெல்லாம் பார்க்கும்போது, அவள் எந்த நாட்டுக்காரி என்று ஸ்பஷ்டமாய் விளங்கியது. அவள் ஓர் ஆந்திர தேசத்துப் பெண். ஓர் அஜந்தாச் சிற்பமே உயிர்பெற்று வந்ததுபோல், அவள் தோன்றினாள். அந்தக் கடினமான கருங் கல்லே மிருதுவான சதையாய் மாறி, கதகதப்பான ரத்தம் பாய்ந்து மினுமினுத்த காட்சி, உள்ளம் புளகமுறச் செய்தது. அதைவிட, அழகும் வேண்டுமா?

கண் குளிரச் செய்தது அவள் சாயல். சூரம்மா என்று அவளுக்கு நான் நாமகரணம் செய்தேன். கோகில வாணி என்றோ, லலிதகுமாரி என்றோ பெயரிடவில்லை; அதெல்லாம் கூலிக்கு மாரடிக்கும் ஸினிமாக்காரிகளின் வேலை அல்லவா? சூரம்மாவின் வனப்பிலும் வசீகரத்திலும் நூற்றில் ஒரு பங்கு கூட இல்லாத அவர்கள், தங்களை நட்சத்திரங்கள் என்று வேறு சொல்லிக் கொண்டு விடுகிறார்கள்!

சூரம்மா, தன்னைச் சிங்காரித்துக் கொள்ளும் வேலையில் ஈடுபட்டிருந்தாள். அவளுடைய அலங்கார சாமான்களெல்லாம், அவள் எதிரே ஒரு பெட்டியின் மேல் மூடியில், பரப்பிக் கிடந்தன. என் பார்வை முதல் முதலாக அவள்மீது விழுந்தபோது, தன் கூந்தலை வாரி முறுக்கியிருந்தாள். பளபள என்று மின்னும் கரு நாகம் போல் இருந்த அதை, கால் வாங்கி, தள்ளியும் இழுத்தும், வளைத்துச் சுழற்றியும் எடுத்துக்கட்டாக முடிந்து கொண்டாள். அவள் ரவிக்கையின் கைகள் காற்றடைத்த சின்னஞ் சிறு பலூன்களைப்போல, எற்கெனவே அவளது தோள் பட்டையின் விசாலத்தை மிகைபடுத்திக் காட்டிக் கொண்டிருந்தன; அவள் வாரி முடித்தபோது, அந்தக் கைகள் மேலும் அகன்ற பலூன்களாய் உப்பிவிட்டன. வாரி முடித்தாயிற்று. உடனே, பக்கததி லிருந்த ஒரு நபரைப் பார்த்து, "இப்ப மணி என்ன?" என்று அவள் கேட்டாள். மணி

யோசை மாதிரி கணீர் என்றிருந்தது அவள் குரல்.

அவளுடைய நடவடிக்கைகளையெல்லாம் ஆழ்ந்து கவனித்துக்கொண்டிருந்த நான், மணி என்ன என்று அவளுக்குச் சொல்லியிருப்பேன்; என்னையறியாமலே, என் கைக்கடிகாரத்தைக் கூடப் பார்த்துவிட்டேன். ஆனால், நல்ல வேளையாக, மரியாதை உணர்ச்சி குறுக்கிட்டு, நான் வரம்புமீறி விடாதபடி என்னைக் காப்பாற்றியது. அவள் யாருடன் பேசினளோ, அந்த மனிதர் யார் என்று பார்த்தேன்.

அவர் வயது நாற்பதைத் தாண்டிச் சில வருஷங்கள் இருக்கும். பெரும்படியான சரீரம். ப்ருமனுக்கேற்ற உயரம். தலையை ஒட்ட, கிராப் செய்திருந்தார்- தலைமண்டை ஆரம்ப வழுக்கை போல் மினுமினுக்கும்படி அவ்வளவு ஒட்ட. பஞ்ச கச்ச மோஸ்தரில், முரட்டுப் பழுப்புக் கதர் உடுத்தியிருந்தார். அதற்குத்தான் ஆந்திரர்கள் பேர்போனவர்களாயிற்றே! அதே கதரில் நீண்டு தொங்கிய ஒரு ஜிப்பா அணிந்திருந்தார். வடக்கே போனல், இதைப் பஞ்சாபி என்று சொல்வார்கள்.

அவர் தூங்கிக்கொண்டிருந்தார். இந்த வாலிபப் பெண், தம்மை அழைத்தபோது, அவர் கண் விழித்துவிட்டார்; ஆனல், அவளைச் சட்டைபண்ணிப் பதில் சொல்லவில்லை. அலட்டிப்போனவர்போல, 'ஆ' என்று ஒரு கொட்டாவி விட்டார். அப்போது, அவர் பல்வரிசையின் நடுவிலே விழுந்திருந்த ஒருபொக்கை எனக்கு நன்ருய்த் தெரிந்தது.

சூரம்மா அவருடைய கன்னத்தை விளையாட்டாய்த் தடவினள்: "என்ன; நான் கேட்டது உங்க காதிலே விழலையா?" என்று வினவினள்.

"கேட்டுது, கேட்டுது" என்று, அந்த நபர் முனகினர். அவளுடைய குமரிக் குறும்பு, அவருக்குச் சலிப்பூட்டியது போல் தொனித்தது அவர் குரல்.

இப்போதுதான் என் சந்தேகங்கள் எல்லாம் தீர்ந்தன. ஏனெனில், இத்தனை நேரமும் அவர்களுடைய உறவு என்னவாயிருக்கலாம் என்று பலவிதமாய் மண்டையைக் குழப்பிக் கொண்டிருந்தேன். தந்தையும் மகளுமா? இல்லை. அண்ணனும் தங்கையுமா? இல்லவேயில்லை. மாமனும் மருகியுமா? ஒருகாலும் இராது. இப்படிச் சரசமும் விளையாட்டுமாய் அவருடைய கன்னத்தை அவள் தடவினளே, அதுபோதும் அவர்களின் உறவைக் கண்டுபிடிக்க. அவர் சபலமுள்ள ஒரு கிழக் கணவன்; அவளோ வாலிப மிடுக்கும் வசீகரமும் நிறைந்த இரண்டாம் தாரம்.

சூரம்மா தன் அலங்காரத்தைக் கொஞ்சம் நிறுத்திக்கொண்டு, செப்படு வித்தைக்காரன் தருவிப்பதைப்போல், ஓர் ஆரஞ்சுப் பழத்தை லாகவமாய்க் கையில் எடுத்து, அதை உரிக்கத்தொடங்கினள். அதிலிருந்து ஒரு சுளையைப் பிய்த்து, அந்த நபரின் வாயருகே ஆசை காட்டுவதுபோல் நீட்டினள்.

"சே! சே! என்ன காரியம் பண்ணறே நீ? யாராவது பார்த்துண்டிருக்கப் போரு" என்று மீண்டும் சலிப்போடு முனகினர் அவர்.

"யார் பார்த்தால் எனக்கென்ன? சமத்தாய் வாயைத் திறவுங்கோ."

"மாட்டேன். காலை வேளையில் ஆரஞ்சு சாப்பிடறதாமே! விசித்திரமாய்த்தான் இருக்கு! என்ன பெண் நீ!'' என்று சொல்லிய அவர், வாயைக் கெட்டியாய் மூடிக் கொண்டார்.

"காலை வேளையில் வெத்திலை மாத்திரம்போட்டுக்கலாமோ? அது போட்டுக்கலாமானு, ஆரஞ்சும் நன்னுத் தின்னலாம்.''

"அடேடே! இப்பத்தான் எனக்கு ஞாபகம் வந்துது...'' என்று சொல்லி, புன் சிரிப்புடன், அவர் தமது வெற்றிலைப் பெட்டியை எடுத்தார்.

"காலையிலே ஆரஞ்சு சாப்பிடறது விசித்தரமாமே! அப்ப இது எதுக்கு?'' என்று கூறிக் கொண்டே, சூரம்மா அந்த ஆரஞ்சை ஜன்னல் வழியாய் வெளியே வீசி எறிந்து விட்டு, மீண்டும் தன் அலங்காரத்தில் ஈடுபட்டாள்.

இந்த மாதிரி துஷ்டத்தனங்களைச் சர்வ சகஜமாய் அனுபவித்திருப்பவர் போல், அவர் வாய்க்குள்ளேயே சிரித்துக் கொண்டு, வெற்றிலைக்குச் சுண்ணும்பு தடவினர். தம் வாலிப மனைவிக்காக, குஷாலாய் இருப்பதுபோல் அவர் வேஷம் போட முயன்றார். ஆனல், ஓர் ஏக்க உணர்ச்சி, ஆசையை அமுங்கிவிடச் செய்யும் ஓர் உள்ளக் குறுகுறுப்பு, அவர் முகத்திலே தேங்கிக் கிடந்தது.

சூரம்மாவின் துறு துறுப்பைக் கண்டு, எனக்கு அவளிடம் ஒரு பிரமை உண்டாயிற்று. குழந்தை மாதிரிதான் அவள் குறும்பு செய்தாள். அவளைப் பற்றி என்னென்னவோ சிந்தனைகளிலும் கற்பனைகளிலும், நான் மூழ்கி விட்டேன். வலிவும் வனப்பும் பெற்ற அவள் வயிற்றிலே பிறக்கும் குழந்தைகள், ஆரோக்கியம் நிறைந்த வாலிபர்களாய் வளர்ந்து, முரட்டுப் பழுப்புக் கதர் உடுத்து, நம் நாட்டின் விடுதலைப் போரை நிச்சயம் நடத்துவார்கள் என்றெல்லாம் எண்ணினேன். ஆனல், அவள் பக்கத்திலே இருக்கும் மனிதர், இத்தகைய புத்திர பாக்கியத்துக்குத் தகுதியானவரா? இதை எண்ணியபோது, சூரம்மாவிடம் எனக்குப் பரிதாபம் உண்டாயிற்று.

அவள் புருஷன், வெற்றிலையை மென்று கொண்டு, ஊமை போல் உட்கார்ந்திருந்தார். தமக்கு இவ்வளவு அழகான மனைவி வாய்த்திருப்பது எவ்வளவு பெரிய பாக்கியம் என்பதை, அவர் துளியும் உணர்ந்தவராகத் தோன்றவில்லை. நன்ருய் மென்று விழுங்கும் பாக்குத் தம்பலத்துக்கும் சூரம்மாவுக்கும் எவ்வித வேற்றுமையும் ஒரு வேளை அவருக்குத் தோன்றவில்லையோ என்னவோ!

மீண்டும் என் சிந்தனை ஓடியது: நகைக் கடையின் ஜன்னலில் பல வைரமணிகள் ஜொலித்தால், ஒரே ஒரு வைர நிபுணனுக்குத்தான் அதிலே ருசி தட்டும்; ஆனல், மூன்ரும் வகுப்பு ரயில் வண்டி என்ற குப்பைத் தொட்டியிலே, எதிர்பாராதபடி ஒரு வைர மணியைக் கண்டால், அது ஆச்சர்யமல்லவா? மனது சொக்கும் காட்சி யல்லவா?...

முக வசீகரப் பவுடரின் மென்மையான சுகந்தம் காற்றிலே வீசியது. பவுடர் டப்பாவை, சூரம்மா ஒரு பக்கமாய் வைக்கக் கண்டேன்.

ஓர் இருமல். பிறகு, ஒரு கொட்டாவிச் சத்தம். மீண்டும்

இருமல்கள், கொட்டாவிகள். வண்டியி லிருந்த பிரயாணிகள் எல்லாரும், ஒவ்வொருவ ராகத் தங்கள் உறக்கத்தி லிருந்து விழித் தெழுந்தார்கள். ஜன்னல் கதவு கள் திறந்தன. அவைகளின் வழியே பார்க்க, வானம் வெளி றிட்டிருந்தது.

சற்று நேரத்தில், என்னுடைய ஒரு ஜோடி கண்கள் மட்டிலும் அல்ல, அநேகம் ஜோடி கண்கள், சூரம்மாவின் அலங்கார சிங்கா ரத்தைக் கவனிக்கத் தொடங்கி விட்டன என்று கண்டுகொண் டேன். அவளோடு, அவர்களை யும் சேர்த்து, எல்லாரையுமே சர்வ வியாபகமாய், நான் பார்க் கத் தொடங்கினேன்.

கூறுக்கல் வெளுத்த காலை நேரம் மனோரம்யமா யிருந்தது. வண் டிக்குள்ளே யிருந்த சூரம்மா, அதைவிட மனோரம்யமா யிருந் தாள். அவள் சுறு சுறுப்பாய் வேலைசெய்துகொண் டிருந்தாள். அவளுடைய குறும்புத்தனமும் குழந்தை விளையாட்டுக்களும் ஒரு புற மிருக்க, தன்னைச் சூழ இருந்த வர்களை யெல்லாம் மிக மென்மை யாய், அதி சூட்சுமமாய், மந்திரத் தால் கட்டுண்டவரைப் போல் மெய் மறக்கச் செய்து, அற்புதக் கனவுகளை அவர்களின் மனதி லெல்லாம் அவள் எழுப்பிவிட் டாள். கூடியுள்ள ஜனங்களை லட்சியமே செய்யாமல், ஜன நெருக்கமான ஒரு மூன்றும் வகுப்பு வண்டியை, தன்னுடைய ஏகாந்தமான அலங்கார அறை யாகப் பாவித்துக் கொள்ளும் துணிவு ஒரு பெண்ணுக்கு உண் டானது ஓர் அதிசயம்தான். துளிக்கூடக் களங்க மில்லாத வெள்ளை உள்ளமும் பேதைமை யும் அவளுக்கு இருந்ததால்தான், இந்த அற்புதம் சாத்தியமாயிற்று.

புருஷனுக்கா ஆத்திரம் ஆத் திரமாய் வருகிறது. வண்டியில் இருப்பவர்க ளெல்லாம் இப்படி வெறித்து வெறித்துப் பார்க்கும் படி, தம்முடைய மனைவி காட்சி யளித்துக் கொண்டிருப்பது, அவ ருக்குப் பிடிக்க வில்லை. ஆனா லும், நாக்கினால் செய்ய முடி யாத கண்டனத்தை, அவருடைய கண்கள் மட்டிலும் வெளியிட்டுக் கொண் டிருந்தன. எத்தனை பரு மனா யிருந்தென்ன? வாட்ட சாட் டமாய் வளர்ந்திருந் தென்ன? அவளைக் கண்டிக்கச் சக்தி இல் லாததால், கூனிக் குறுகிப் பரி தாபமாய்த் தோன்றினார்.

சூரம்மாவோ, ஜகஜ்ஜோதி யாய்ப் பூரித்துக் கொண் டிருந் தாள். நெற்றியிலே குங்குமப் பொட்டணிந்து, நிலைக் கண்ணாடி யிலே முகம்பார்த்துக் கொண் டாள். திருப்தி யடைந்தவளாய்ப் புன்சிரிப்புப் பூத்தாள். பின்பு, அலங்கார தளவாடங்களை, அப் பால் வைத்தாள். தன் பெட்டி யைத் திறந்தாள். ஒரு சிப்பம் வெளியே வந்தது. அதைப் பிரித் தாள். கரும்பச்சை ரவிக்கை ஒன் றையும், நட்சத்திரம் போட்ட ஒரு நீலப் புடவையையும் வெளியே எடுத்தாள். பிரயாணி களுக் கெல்லாம் ஒரே பரபரப்பு. அவர்கள் மூச்சுவிடாமல் கவனிக் கத் தொடங்கினார்கள். புருஷனோ மூர்ச்சை போட்டு விடுவார்போல் இருந்தது.

பின்பு, எல்லாரும் இப்படித் திக்பிரமையுடன் நிசப்தமாய்ப் பார்த்துக் கொண்டே யிருக்கை யில், அவள் மின்னலைப்போல் விர் என்று பாய்ந்து, வண்டியிலே அத்தனை பேருக்கும் பொதுவாக மிகவும் ஒதுக்கான ஒரு சிற்றறை உண்டே அதற்குள் புகுந்து மறைந்தாள். ஆவல் நிறைந்த கண்

வருகிறது!
M.U.A.C's
மானசம்ரக்ஷணம்
டைரக்ஷன் — K. சுப்ரமணியம், B.A., B.L., & C.S.V. அய்யர்
S.D. சுப்புலக்ஷ்மி
காளி N. ரத்னம்
T.R. ராமச்சந்திரன்
C.T. ராஜகாந்தம்
S.I.P
ரிலீஸ்
PUBLICITIES

சிவாஜி

தையல் நூல்

✲

எந்த மாதிரியான
தையல் வேலைக்கும்
நூல் தேவையான
பொழுது சிவாஜி
தையல் நூலையே
- வாங்குங்கள் -

✲

இந்தியாவில் தயாரிக்கப்பட்டது:

ஆக்மி த்ரெட் கோ, லிமிடெட்.

பாங்க் ஆப் பரோடா பில்டிங்
அப்பாலோ தெரு, பம்பாய்.

டோங்ரே

பாலாம்ருதம்

குழந்தைகளுக்கு
பிரசித்தி பெற்ற டானிக்

பற்கள் வளர
உதவி செய்கிறது

சக்தி

வருட சந்தா ரூ.		6/-
தனிப் பிரதி		0/8

கீழ்கண்ட ஊர்களுக்கு டிபாசிட்
கட்டகூடிய ஏஜண்டுகள் தேவை

சீயாழி, கல்லல்
ஸ்ரீரங்கம், திண்டுக்கல்
பழனி, பொள்ளாச்சி
மேட்டுப்பாளையம்

விவரங்களுக்கு எழுதவும்:

மானேஜர்:

சக்தி

115-இ, மோபரீஸ் ரோட்

ராயப்பேட்டை

கண்கள் ஏங்கி நிற்கும்படி, அந்த அறையின் கதவுகள் மூடி விட்டன. சில நிமிஷங் கழித்து, பூவும் மலரும் கூடியதுபோல் பச்சையும் நீலமுமாய் உடுத்து, பார்க்கும் கண்களெல்லாம் சொக்கி மயங்கும்படி வெளியே வந்தாள். பிறகு, ஈரத்துணிக்குள்ளே வெகு ஜாக்கிரதையாய்ச் சுற்றி வைத்திருந்த ஒரு புஷ்ப சரத்தை எடுத்து, தன் கூந்தல் முடிச்சிலே சுற்றிச் செருகினாள். அவளது சிங்காரம் பூர்த்தி யாயிற்று.

தேவ கன்னிகையைப் போல் தன் புருஷனை நோக்கி, அவள் புன் முறுவல் பூத்தாள். ஆனால், அவரோ, அசடுதட்ட, அலட்சியமாக, தன் ஆத்திரத்தை யெல்லாம் வாய்க்குள்ளேயே விழுங்கிக் கொண்டு, பேசாமல் உட்கார்ந் திருந்தார். மாற்றிழந்து மண்ணிலே மக்கிய பழம் தங்கம், தகத்தகாயமாய் எரிந்துகொண்டு தன்னை உருக்க வரும் ஜ்வாலையைப் பார்த்து நடுங்கியது போல், அவர் தோன்றினார். அவர் தயங்கித் தள்ளாடி எழுந்திருந்து, தங்கள் சாமான்களை யெல்லாம் ஒவ்வொன்றாய் எடுத்து, கதவருகிலே கச்சிதமாய் வைத்தார். அடுத்த ஸ்டேஷன் தான் அவர்கள் இறங்க வேண்டிய இடம்போல் இருக்கிறது.

வண்டி மெதுப்பட்டுக் கடைசியில் நின்றது. அந்த ஸ்டேஷனில் 'ஜே! ஜே!' என்று ஜனங்கள் நடமாடிக்கொண் டிருந்தார்கள். ஸ்டேஷனே மிக உற்சாகமாய்க் காணப்பட்டது. தாடே பள்ளிகூடம் என்பது தான் அதன் பெயர்.

சூரம்மா, பாய்ந்து கொண்டு, பிளாட்பாரத்திலே இறங்கினாள். அவள் வெகு ஆவலோடு யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தது எனக்குப் புலப்பட்டது. நானும் என் உச்சஸ்தானத்தி லிருந்து, கீழே உள்ள பெஞ்சிமீது குதித்தேன்; ஜன்னல் வழியாய் வெளியே நோக்கினேன். அவள் சில கஜ தூரம் நடந்து விட்டதால், அவளது முகம் எனக்குத் தெரிய வில்லை. ஆனால், யாரையோ அழைப்பது போல் அவளுடைய கைகள் தூக்கி யிருந்தன. ஒரு வாலிபன், அவளை நோக்கி விரைந்து வந்து கொண் டிருந்தான். அவனைப் பார்த்தால், முற்றிய வாலிபமாய்ச் சொல்ல முடியாது. அவன் முகத்திலே அங்கு மிங்குமாய் ஒன்றிரண்டு உரோமங்கள் தான் மீசை அரும்பி யிருந்தது. வாய் நிறைந்த களிப்போடு, அவள் ஒரு பெயரைச் சொல்லிக் கூப்பிட்டாள். அது, அவர்களை ஸ்டேஷனிலே சந்திக்க வந்த அந்த வாலிபனின் பெயராய்த்தான் இருக்க வேண்டும். அந்தப் பெயர் என் காதில் விழவில்லை. அவர்கள் இருவரும் – அநேகமாய்க் கையோடு கை கோத்துக் கொண்டு என்று சொல்லலாம் – திரும்பவும் வண்டிக் கதவடிக்கு நடந்து வந்தார்கள். அவர்கள் ஒருவரை யொருவர் கட்டிக்கூடத் தழுவிக்கொண் டிருப்பார்கள்; சனியன் பிடித்த மரியாதைக்குப் பயந்துதான் அப்படிச் செய்ய வில்லையோ என்று எனக்குத் தோன்றியது.

வேறு பிரயாணிகளும் தான் வண்டியை விட்டு இறங்கிக் கொண் டிருந்தார்கள். ஆனால், நான் சூரம்மாவின் மீது வைத்த கண்ணை எடுக்கவில்லை. புதிய சாந்தியும் மகிழ்ச்சியும் நிறைந்த ஒளி யொன்று, அவள் கண்ணிலே களிதுள்ளிக் கொண்டிருந்தது. தன் பக்கத்திலே உள்ள அந்த வாலிபனின் முகத்தைக் கண்டு மலர்ந்த தாமரை

போல, அவள் முகம் அலர்ந்து விரிந்தது.

புருஷன், சாமான்களை யெல்லாம் வெளியே எடுத்து வைத்துக் கொண்டிருந்தார்.

"அன்னையா, பிரயாணம் எப்படி யிருந்தது?" என்று கேட்டுக் கொண்டே, அந்த வாலிபன், அவர் கையி லிருந்த பெட்டியை வாங்கிக் கீழே வைத்தான்.

அவர் தலையைத் தூக்கி, மங்கலான ஒரு சிரிப்புச் சிரித்தார். அடுத்த விநாடி, தம் உடலின் ரத்த மெல்லாம், உள்ளுக்குள்ளே வறண்டுபோன ஓர் இடத்திலே போய்ச் சுவரியதுபோல, அவர் முகம் வெளிறிட்டது.

அவர்களை அவர் முகம் கொடுத்துப் பாராமலே, "நீங்க ரெண்டு பேரும் முன்னாலே வண்டியின் கிட்டப் போய் இருங்கோ" என்று அவர்களிடம் சொன்னார்.

அவர்கள் நடந்தார்கள். அவர்கள் நடந்தார்கள்: கனியொன்றைத் திடீரென்று கவிந்து கொண்ட மலர்போல, அவள் கரத்தைப் பற்றியவனாய், அவன் நடந்தான்; அவள் பூர்த்தி பெற்றுப் பூரித்தாள்.

புருஷன், மூட்டை முடிச்சுகளைக் காத்துக்கொண்டு நின்றார். ஒரு கூலியாள் அவரிடம் வந்தான். சாமான்களை அவர் அவன் தலையிலே ஏற்றினார். அவர் முகத்தை, நான் கூர்ந்து ஆராய்ந்தேன். அவர் பத்து வருஷம் கிழண்டுவிட்டார். அவர் தாடைகள் நீண்டு, கண்கள் பஞ்சடைந்து குழிந்துவிட்டன. கூலியாள் போன பிறகுகூட, அவர் அங்கேயே, வெறிச் சென்று, வேறு உலகத்திலிருந்து வந்த யாரோ அந்நியர் போல, துணையற்றுத் தன்னந் தனியராய், நின்றுகொண் டிருந்தார். அந்தக் கோலம், "ஏ, என் தலைவிதியே! இன்றோ நாளோ, இன்னும் சொற்ப காலம்தான் என் வாழ்வு; அதுவரையில் கொஞ்சம் கருணை காட்ட மாட்டாயா?" என்று அவர் கெஞ்சுவதுபோல் இருந்தது.

உயிரோடு தகனம்

உயிரோடு தகனம் என்றதும், ஆச்சரியமாய் இருக்கிறது அல்லவா? ஒரு வகையில் பார்க்கப் போனால், அது உண்மையாகவே தோன்றுகிறது. இன்று ஐந்தில் இருவர் உயிரோடேயே புதைக்கப் படுகிறார்களாம். நோயாளிகளுக்கு உயிர் இருக்கும்போதே, அவர்கள் இறந்துவிட்டதாக நினைத்து அவர்களைப் புதைத்து விடுகிறோம் என்று, ஓர் அமெரிக்க டாக்டர் குறை சொல்லுகிறார்.

அவர் மேலும் கூறுவதாவது: "மூச்சு நின்று, அவயவங்கள் செயலற்ற நிலைமையை அடைந்ததைப் பார்த்ததும், அதைச் சாவுக்கு அறிகுறியாக, நாம் நினைத்துவிடக் கூடாது. இன்புளுயன்ஸா, காலரா, நிமோனியா முதலிய பல நோய்கள், முதலில் சாவுக்குரிய அடையாளங்களைக் காட்டியே பின்பு உயிரளிக்கும். பிரேதத்தைத் தூக்கிக்கொண்டுபோய்ப் புதைப்பதற்குமுன், அதற்கு உயிர் இருக்கிறதா இல்லையா என்பதை ஜாக்கிரதையாகப் பரிசீலனை செய்யவேண்டும். இல்லாவிட்டால் நாம் நோயாளிகளுக்குப் பெருத்த அநீதி செய்பவர்களாவோம். இந்தப் பரிசீலனையைக் கட்டாயம் செய்யவேண்டு மென்று, சர்க்கார் ஒரு சட்டம் செய்து விடுவது கூட நலம்."

நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

●

பரதம் எனப்பெயர் பகர்வார் என்னினும்
சரதம் நாட்டியம் தமிழன் வளர்த்தது.

வடவரை முதலாய்க் கன்னி வரையிலும்
நடைபெறக் காணும் நாட்டிய வகையில்

நந்தமிழ் நாட்டின் நட்டுவக் கலையே
நிந்தையில்லாத கலைச் சுவை நிறைந்தது.

அந்நிய நாட்டார் ஆடல் அனைத்தும்
நன்னயம் இசையா நடப்பும் குதிப்புமே.

பாடலின் கருத்துகள் பண்ணொடும் பொருந்த
ஆடலின் அபிநயம் அறிவுடன் அமையும்

அருமைத் தமிழின் ஆடற் கலையின்
பெருமை முற்றிலும் பேசவும் எளிதோ!

ஆண்டுகள் ஆயிரம் ஆயிர முன்னே
பாண்டிய மன்னர் பார்வையில் வளர்ந்து

வளங்கள் மிகுந்து வரிசையில் வாழ்ந்து
இளங்கோ அடிகள் இசைமொழி பெற்றுச்

சேர நாட்டிலும் சிலநாள் திரிந்து
தீர முழுவதும் தெய்விகம் திகழ

பூ விரி சோலையும் வயல்களும் பொலியும்
காவிரி யாற்றின் கரைகளில் நடந்து

கலைகளை எல்லாம் கட்டியே காத்து
நிலைகொளச் செய்த நெறிமுறை அரசுடை

சோழநாட்டைச் சுக மெனக் கண்டு
வாழும் வீட்டை அங்கே வகுத்து

சீரும் சிறப்புடன் செழித்துக் களித்துப்
பேரும் புகழும் பெருமையும் பெற்று

வந்திடும் அந்நியர் வாழ்த்தி வணங்க
இந்திய நாட்டின் புகழுக் கிடமாய்

நெடுநாள் உலகில் புகழுடன் நின்றபின்
கெடுநாள் எதற்கும் கிட்டிடும் இயல்பால்

சோழ மன்னர்கள் சுருங்கிய பின்னர்
ஏழ்மையில் பட்டே இலக்கணம் கெட்டுத்

தஞ்சையை ஆண்ட மராட்டியர் தயவால்
கொஞ்சநாள் மீண்டும் குறைவிலா திருந்து

அந்நிய ஆட்சியில் அடிமைகள் ஆனபின்
தன்னுடைக் கலையெனத் தாங்கிடத் தக்க

அரசாங் கத்தார் ஆதர வின்றி
விரசே எல்லா வீழ்ச்சியும் விரவத்

தாசியம் செய்தே கோவிலில் தங்கி
வேசியர் வீட்டின் வேலை யாளாகிக்

கலையின் பெருமை கடுகள வறியா
விலையில் வாங்கி விருந்தெனக் காட்டும்

பணக்காரர் வீட்டுக் கலியாணப் பகட்டாய்க்
குணக் கேடுள்ளவர் கூட்டத்தில் ஆடும்

சோற்றுக் கானதோர் தொழிலாய்ப் போனபின்
ஏற்றம் குறைந்து இருந்திட நேர்ந்தும்

ஜீவசக்திகள் சிறந் திருந் ததனல்
தீவிர மாகத் திரும்பவும் தளிர்த்துச்

சொந்தக் கலைகளைத் துலங்க வைத்திட்
இந்திய மக்களின் எழுச்சியொ டெழுந்து

சுதந்தர உணர்ச்சியில் தோன்றிய துணிவுடன்
இதந்தர வந்துள இயக்கங் களினல்

புத்துயிர் பெற்றுப் புதுமணம் வீசி
இத்தினம் உலகினில் எவரும் விரும்பிடும்

தமிழன் நட்டுவம் தனிப்புகழ் கொண்டது
நம தெனும் பெருமை நாமுறல் வேண்டும்.

✲

பொதுஜனம்

வெ. இராமசாமி

நம் முன்னோர்கள் காலத்தை நான்கு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள்—கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்று. எந்தக் கணக்கை ஆதாரமாகக் கொண்டு இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்களென்று தெரியவில்லை. ஆனால், தெரியாத விஷயத்தைத் தெரியவில்லை யென்று சொல்வது ஆபத்து. 'நம் முன்னோர்கள்—திரிகாலத்தையும் ஞானதிருஷ்டியால் உணர்ந்த நம் முன்னோர்கள்—செய்த காரியத்துக்குக் காரணம் கேட்கிறான், ஸார்; சுத்த நாஸ்திகன்!' என்று இப்போது இருக்கும் பெரியோர்கள் சொல்ல ஆரம்பித்துவிடுவார்கள். ஆதலால், இந்த விஷயத்தைத் தெரிந்தது போல் பாவித்துக் கொண்டு, மேலே செல்லுவோம்.

இந்த நான்கு யுகங்களில் நாம் இருக்கும் யுகம் கலியுகம். மிருகத்தோடு மிருகமாகத் திரிந்த மனிதன், இன்று அறிவிலும் ஆற்றலிலும் வியக்கத்தக்க அளவு வளர்ந்திருக்கிறான்; இனி மேலும் வளர்ந்து கொண்டே போவான் என்பது தற்கால விஞ்ஞானிகளின் கருத்து. ஆனால், நம் முன்னோர்கள் வேறு மாதிரியாக எண்ணினார்கள். 'மனிதன் காலப் போக்கில் வீழ்ச்சி யடைந்து கொண்டு போகிறான்; கிரேதா யுக மனிதனைவிடத் திரேதாயுக மனிதன் அறிவு வளர்ச்சியிலும் இதர வளர்ச்சிகளிலும் குறைபாடுடையவனாக இருக்கிறான்; திரேதாயுகத்தை விடத் துவாபர யுகத்தில் அபிவிருத்தி குறைவு; கலியுகத்தில் இன்னும் அந்த அபிவிருத்தி குறைந்து, தீமை மலிகிறது'—இது தான் அவர்கள் கருத்து. அவர்கள் ஏன் இப்படிக் கருதினார்கள் என்று விளங்கவில்லை. இதையும், மேலே காட்டிய காரணத்துக்காக, விளங்கியதாகப் பாவித்துக் கொண்டு, இன்னும் மேலே செல்லுவோம்.

இந்த நான்கு பிரிவுகளில், மற்ற மூன்று பிரிவுகளைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. அவைகளைப் பற்றிய பேச்சும் இங்கே இல்லை. நான்காவதாகிய கலியுகம்தான் நமது கவனத்தைக் கவர்கிறது. இந்தக் கலியுகம் முடிந்து ஒரு புது யுகம் தோன்றப் போகிறது என்று தெரிகிறது. ஒரு குழந்தை பிறக்கும்போது, தாய் படுகிற பிரசவ வேதனை கொஞ்ச நஞ்சமல்ல. அப்படியானால், ஒரு புது யுகமே பிறக்கும் போது, உலகத் தாய்க்கு ஏற்படுகிற பிரசவ வேதனையைச் சொல்லவும் வேண்டுமா? அந்தப் பிரசவவேதனைதான் இன்று நடக்கும் போர். நம் முன்னோர்களின் ஆணையைக் கடந்து தோன்றுவதற்கு இந்தப் புது யுகத்துக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்று கேட்கலாம். நன்னூல் சூத்திரத்தின் அதிகாரத்தோடுதான், அது தோன்றுகிறது: 'பழையன கழிதலும் புதி

பொது ஜனத்தின்மீது கருணை பூத்திருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் பலர், அந்தப் பொது ஜனத்தின் கண்ணிலே மண்ணைத் தூவ ஓயாது முயற்சித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் கபட நாட்கம் எத்தனை நாள் நடக்கும்? பொதுஜனம், தம் சாந்தத்தை விட்டு ஒரு நாள் குமுறி எழத்தான் போகிறார். அப்போது இவர்கள் கதி என்னாகும்? அது இவர்களுக்குத் தெரியுமா?

யன புகுதலும் வழுவல' என்று நன்னூல் சொல்லவில்லையா?

புதிய யுகம் தோன்றுவதாகவே வைத்துக் கொள்வோம். அதற்கு ஒரு பெயர் வேண்டாமா? பேஷாக வேண்டும். பொதுஜன யுகம் என்றுதான் அதற்குப் பெயர்.

பொதுஜனம் என்ற வார்த்தைக்கு, இப்போது ஒரு சக்தி ஏற்பட்டு விட்டது. 'ராஜாவிடம் சொல்லித் தண்டிப்பேன், அதிகாரியிடம் சொல்லித் தண்டிப்பேன்' என்று சொன்ன காலமெல்லாம் போய், 'பொதுஜன அபிப்பிராயத்தால் தண்டிப்பேன்' என்று சொல்லுகிற காலம் வந்திருக்கிறது. 'இது நல்லதுக்கா?' என்று கேட்கிறார் ஹிட்லர் வம்சத்தைச் சேர்ந்த ஓர் ஆசாமி. 'பொது ஜனத்துக்கு என்ன தெரியும்? மிருகம்!' என்று அவர் பொது ஜனத்தை வாழ்த்துகிறார். அவருடைய கொள்கைப்படி, பொது ஜனத்தை எப்படி வேண்டுமானாலும் ஆட்டி வைக்கலாம். அவர்களுக்காக ஒரு புத்தி, அறிவு என்பது ஒன்றும் இல்லை. அரசியல் தலைவர்கள் பிறப்பிக்கும் உத்தரவுகளைச் சிரமேல் தாங்கி நிறைவேற்றுவதற்கும், தொழில் தலைவர்களுக்காக உழைத்து உயிரை விடுவதற்கும் தோன்றிய ஜன்மங்களே பொதுஜனங்கள் என்பது அவர் கருத்து.

ஆனால், பொதுஜனத்தின் பெயரை எடுத்ததற்கெல்லாம் உபயோகிக்கும் மக்கள் யார்? பொதுஜனங்களோடு சேராமல் தனியாக நின்று கொண்டு, அவர்களைத் தங்களுடைய விரோதியாகக் கருதும் கூட்டத்தார் தான். இது கொஞ்சம் விநோதமாகத் தோன்றலாம். ஆனால், உண்மை அருகியிருக்கும் இடத்தில் அது விநோதமாகத் தோன்றுவது இயல்பே. பொதுஜனங்களை மாக்கள் என்று இழிவாகக் கருதும் இந்தப் 'பெரிய' மனிதர்கள், எதைச் செய்தாலும் பொது ஜனங்களின் நலத்துக்காகவே செய்வார்கள்; எதைப் பேசினாலும் பொதுஜனங்களின் நன்மைக்காகவே பேசுவார்கள்! மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் பொதுஜன ஊழியர்களாக விளங்கும் இவர்கள் செய்கிற காரியங்களைக் கொஞ்சம் பார்க்கலாம்.

'ரோட்டரி கிளப்' என்ற பெயரைக் கேட்டிருப்பீர்கள். இது ஒரு சங்கம். இந்தச் சங்கத்தின் மூலமந்திரம் பொதுஜன சேவை. இதில் பெரிய பணக்காரர்களும், தொழில் முதலாளிகளும், வியாபாரிகளும், உத்தியோகஸ்தர்களும், இன்னும் இவர்களைப் போன்ற பெரிய 'கைக'ளும் தான் அங்கத்தினராயிருக்க முடியும். அவர்களுடைய பொழுது போக்குக்காக ஏற்பட்ட கருவியே இது. அவர்கள் அடிக்கடி கூடுவார்கள். அவர்கள் செய்கிற பொதுஜன சேவை விருந்துண்பதிலேதான் இருக்கிறது. ஏனென்றால், இந்தச் சங்கம் விருந்துகளையும் கேளிக்கைகளையும் ஏற்பாடு செய்வதற்காக ஏற்பட்ட ஸ்தாபனமாகும். மூக்கு முட்டும்வரை சாப்பிட்ட பிறகு, பசியால் வாடும் மக்களின் பரிதாபகரமான நிலைமையைப் பற்றி ஒரு ரோட்டரியன் வெளுத்து வாங்குவார். மற்றவர்களும் இடையிடையே 'பேஷ், பேஷ்' என்று சொல்லி, அவருடைய அனுதாபத்தில் கலந்து கொள்ளுவார்கள். இவர்கள் விஷமில்லாத பாம்பைப் போன்றவர்கள்; அபாயகரமான பேர்வழிகளல்ல. பொது ஜனங்களுக்கு இவர்

களைப் பற்றித் தெரியாது; இவர்களுக்குப் பொது ஜனங்களைப் பற்றித் தெரியாது. ஆகையால், 'பொதுஜன சேவை' செய்யும்படி இவர்களை விட்டுவிட்டு, கவலையின்றி நாம் மேலே செல்லலாம்.

தேசியவாதிகளாகத் திகழும் பெரிய தொழில் முதலாளிகளை எடுத்துக் கொள்வோம். இவர்கள் காந்திஜியின் பரம பக்தர்களாக விளங்குவார்கள். பகவத் கீதையைத் தலைகீழாக ஒப்பிப்பார்கள். ஹரிஜனங்களை ஈடேற்றுவதற்கு இரவுபகலாக உழைப்பார்கள். பொதுஜனங்களின் நன்மைக்காகத் தங்கள் வாழ்க்கையையே தியாகம் செய்ய முன்வருவார்கள். ஆனால், தங்கள் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்த மட்டும் ஒருகாலும் சம்மதிக்க மாட்டார்கள். தாங்கள் உற்பத்திசெய்த சாமான்களின் விலையை ஒன்றுக்குப் பல மடங்காகக் கூட்டி விற்றுப் பொதுஜனங்களிடமிருந்து பணத்தைக் கறந்துவிடுவார்கள். பிச்சைக்காரனுக்கு ஒரு தம்பிடியை வீசி யெறிவது போல, தர்ம ஸ்தாபனங்களுக்குக் கொஞ்சம் பணத்தை வீசியெறிந்து, பெரிய 'தாதா'வாகி விடுவார்கள். பொது ஜனங்களைக் கொள்ளையடித்து (வியாபாரக் கொள்ளையைத்தான் குறிப்பிடுகிறேன்), பொதுஜனங்களில் முக்கியப் பகுதியான தொழிலாளர்களைக் கசக்கிப் பிழியும் இவர்கள், ரோட்டரியன்களைப் போல, வெள்ளை ஆசாமிகளல்ல. பொதுஜனங்கள் இவர்கள் விஷயத்தில் கொஞ்சம் ஜாக்கிரதையாகத்தான் இருந்து கொள்ள வேண்டும்.

பொதுஜனங்களின் பெயரில் பல அரசியல் கட்சிகள் கிளம்புகின்றன: ராஜாக்களும் மகாராஜாக்களும் சேர்ந்து 'பொதுஜன முன்னணி' என்ற ஒரு கட்சியை ஏற்படுத்துவார்கள். இந்தக் கட்சியில் பொதுஜனங்களும் இருக்கமாட்டார்கள்; முன்னணியும் இராது. நம் மகாராஜாக்கள் எவ்வளவோ லீலா விநோதங்கள் செய்கிறார்களல்லவா? அவைகளில் இதையும் ஒன்றாக வைத்துக்கொள்ளலாம். இந்தக் கட்சிக்கும் பொதுஜனங்களுக்கும் யாதொரு தொடர்பும் இராது. ஆதலால், பொதுஜனங்கள் சம்பந்தப்பட்டவரையில், இது இருந்தாலும் ஒன்றுதான்; இல்லாவிட்டாலும் ஒன்றுதான்.

ஆனால், ஒரு குறிப்பிட்ட மதத்தினருக்குமட்டும் நன்மை செய்வதற்காகத் தோன்றும் கட்சிகள் அபாயகரமானவை. உதாரணமாக, ஹிந்து மகாசபையும் முஸ்லிம் லீகும், முறையே ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பாடுபடுவதாகச் சொல்லுகின்றன. ஆனால், உண்மையில் அவைகளால் தீமையே ஏற்படுகிறது. ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே விரோத பாவத்தைக் கிளப்பிவிட்டு, அதன்மூலம் அவற்றின் தலைவர்கள் தங்கள் செல்வாக்கைப் பெருக்கிக்கொள்ளப் பார்க்கிறார்கள். இதனால் சின்ன மனிதர்களெல்லோரும் பெரிய மனிதர்களாகிவிடலாம் அல்லவா? மதவெறியைக் கிளப்பி விட்டு, பொதுஜனங்களின் பசி வெறியை அடக்கப் பார்க்கிறார்கள். பசியை அடிப்படையாக வைத்து மக்களை ஒன்றுசேர்ப்பதற்குப் பதிலாக, மதத்தை அடிப்படையாகக் கொண்டு, ஜாதி ஜாதியாக, கூட்டம் கூட்டமாக, அவர்களைப் பிரித்து விடுகிறார்கள். இவர்கள் செய்கிற வேலை, அந்நிய அரசாங்கத்துக்கு ரொம்ப

உதவியாக இருக்கிறது. ஆகை யால், அந்நிய அரசாங்கம் இவர்களுக்கு எத்தனையோ வழி களில் சலுகை காட்டி வருகிறது. இந்திய மக்களின் லட்சியத்துக்கு முட்டுக் கட்டையாக இந்தக் கட்சிகளை, அது உபயோகப்படுத் திக்கொள்ளுகிறது. இந்த ரகத் தைச் சேர்ந்த 'பொதுஜன'த் தலைவர்கள் ரொம்ப ஆபத்தான பேர்வழிகள். 'திருடர் — ஜாக்கி ரதை!' என்று ரயில் வண்டிகளில் அறிவித்திருப்பது போல, இவர் கள் விஷயத்திலும் ஜாக்கிரதை யாக நடந்துகொள்ளும்படி பொதுஜனங்களுக்கு நாமும் அறி வித்து விடவேண்டியதுதான்.

ரயில்வண்டி என்றவுடன், ரயில் வேக் கம்பெனி முதலாளிகளைப் பற்றிய ஞாபகம் வருகிறது. இந்தி யாவில் அரசாங்கத்தார் ரயில் வேக் கம்பெனிக் காரர்களுக்குக் காட்டுகிற சலுகையும், ரயில் வேக் கம்பெனிக்காரர்கள் பொது ஜனங்களுக்குச் செய்து வைக்கிற 'சௌகரியங்களும்' எல்லோருக் கும் தெரிந்தவையே. அதிலும், மூன்றாவது வகுப்புப்பிரயாணிகள் மீது அவர்களுக்கு அபாரப் பிரி யம். கொட்டிலில் ஆடுமாடுகளை அடைப்பதுபோல, அவர்கள் மூன்றாவது வகுப்புப் பிரயாணி களை ரயில்வண்டிகளில் அடைத்து வைக்கவில்லையா? இப்போதிருக் கிற 'சௌகரியங்கள்' போதா என்று அவர்களுக்கு எப்படியோ பட்டுவிட்டது. பொதுஜன நன் மையில் கண்ணும் கருத்துமாக இருப்பவர்கள் அல்லவா? இன் னொரு பெரிய 'சௌகரியத்'தை யும் செய்வது என்று முடிவு செய்துவிட்டார்கள். ரயில் கட்ட ணத்தை 25 சதவிகிதம் உயர்த்து வது என்று தீர்மானித்திருக்கிறார் கள். அவர்களுக்கு வழிகாட்டி யாக இருப்பவர்கள் சென்னை பஸ் சொந்தக்காரர்கள். பஸ் கட்ட ணத்தை ஒரே நாளையில் 2 அணுவி லிருந்து 4 அணுவுக்கு ஏற்ற வில் லையா? அநியாயமாகக் கட்டணங் களைக் கூட்டிப் பொதுஜனங்க ளின் பணத்தைக்கொள்ளையடிக்க லாமா என்று தானே உங்க ளுக்கும் எனக்கும் தோன்று கிறது? ஆனால், ரயில்வே முதலாளி களுக்குக் கட்டணங்களைக் கூட் டக் கொஞ்சம் கூடப் பிரிய மில்லை. பொதுஜனங்களின் நன் மையை உத்தேசித்தே வேண்டா விருப்பாகச் செய்கிறார்கள்! 'பெரிய' மனிதர்களாயுள்ள அவர் கள், காரணமில்லாமல் இப்படிச் சொல்லுவார்களா?

யுத்தம் ஆரம்பமாகு முன் 200 கோடி ரூபாயா யிருந்த நோட்டு வெளியீடு இப்போது 850 கோடிக்கு வந்திருக்கிறது. ஆனால், இந்த நாணயப் பெருக்கத்துக்குத் தக்க பொருள் அபிவிருத்தி ஏற் படவில்லை. பொருள் அபிவிருத்தி குறைந்து கொண்டும் நோட்டு வெளியீடு அதிகப்பட்டுக் கொண் டும் போவதால், நாணயத்தின் மதிப்பு, அதாவது பண்டங்களை வாங்குகிற சக்தி, குறைந்து கொண்டு போகிறது. நாணயத் தின் மதிப்புக் குறைவதென்றால், சாமான்களின் விலை உயருகிறது என்று பொருள். இதன் காரண மாக, ஒரு ரூபாய்க்கு ஆறு ஏழு படி, விற்ற அரிசி இப்போது ஒரு படி ஒன்றரைப் படி விற்கிறது. அரிசியைப் போலவே, பிற சாமான்களும் ஒன்றுக்கு மூன்று மடங்கு நான்கு மடங்கு விலை யேறி யிருக்கின்றன. பத்து மடங்கு இருபது மடங்கு விலை யேறி யிருக்கும் வேறு பல சாமான்களும் இருக்கின்றன. இப்படியே சாமான்களின் விலை விஷம் ஏறுவது போல் ஏறிக் கொண்டே போனால், கடைசியில்

ரூபாய்க்கு மதிப்பே இல்லாமலும் போகலாம் அல்லவா? இந்த ஆபத்து வராமல் பாதுகாக்க, ஜனங்கள் கையிலுள்ள அதிகப் படியான பணத்தை எப்படி யாவது வாங்கிவிட வேண்டும். பணப்பெருக்கம் குறைந்தவுடன் சாமான்களின் விலையும் குறையும் தானே. இதற்கு என்ன உபாயம்? பஸ் கட்டணங்களையும் ரயில்வேக் கட்டணங்களையும் உயர்த்துவது தான்! இப்போது விளங்குகிறதா பொது ஜனங்களின் மீது அவர் களுக்குள்ள பற்று! 'ரயில் டிக் கட்டும் மற்றச் சாமான்களைப் போல ஒரு சாமான்தானே? அதன் விலை உயரும் போது, மற் றச் சாமான்களின் விலையும் உய ருமேயன்றி எப்படி ஐயா குறை யும்?' என்று கேட்டு விடாதீர் கள். 'நன்றிகெட்ட பொதுஜனங் களே, இனிமேல் உங்களுக்கு ஒரு சௌகரியமும் செய்யப் போவ தில்லை' என்று சொன்னாலும் சொல்லிவிடுவார்கள், நம் ரயில் வேக் கம்பெனிகளின் முதலாளி கள்.

ரயில்வேக் கம்பெனி முதலாளி கள் என்று சொல்லும்போது, அதில் இந்திய அரசாங்கத்தையும் நாம் சேர்த்துவிட வேண்டும். பெரும்பான்மையான ரயில்வேக் கள் இந்திய அரசாங்கத்தின் கீழ் வந்துவிட்டன. ஆயினும், இந்திய அரசாங்கம் தனித்த முதலாளிகளை விட மோசமாக நடந்துகொள்ளு கிறது; கட்டண உயர்வு இதற்கு நல்ல எடுத்துக் காட்டாகும்.

மேலே சொல்லிவந்த வர்க்கங் களைவிட இன்னொரு வர்க்க மும் இந்தியப் பொதுஜனங்களை ஈடேற்றப் பாடுபடுகிறது. இந்த வர்க்கத்துக்குப் பெயர்தான் அதி கார வர்க்கம். இந்த வர்க்கத்துக் குத் தலைவராக விளங்கும் அமெரி துரை அவர்களுக்கு, இந்தியப் பொதுஜனங்கள் மீதும் அவர்க ளுடைய தலைவர்கள் மீதும் அளவு கடந்த பிரியம். அவர் பார்லி மெண்ட் சபையிலும், பொது மேடைகளிலும் பேசுகிற தோர ணையைப் பார்த்துவிட்டு, இந்திய ஜனங்களுக்கு அவரை என் னமோ செய்ய வேண்டுமென்று தோன்றுகிறது. அன்பு மிகுதியி னாலேதான், வேறொன்று மில்லை. அவ்வளவு அருமையாகப் பேசு கிறார் அமெரி துரை! அவர் பேச்சு, பெரும்பாலும் கீழ்வரும் தோர ணையில் இருக்கும்:

"கானடா, ஆஸ்டிரேலியா முத லிய நாடுகள் அநுபவித்துக் கொண் டிருக்கும் அரசியல் உரிமைகளையெல்லாம் இன்று இந் தியா பெற்றிருக்கிறது. பொது ஜனங்களின் அன்புக்கும் மதிப் புக்கும் பாத்திர மானவர்கள் (கவர்னரும், ஐ. ஸி. எஸ். களும்) ஒவ்வொரு மாகாணத்தையும் இன்று ஆண்டுவருகிறார்கள். இப் படியிருக்கும்போது, ஏதோ ஒரு கட்சி (காங்கிரஸ்) சொல்லுகிறது என்பதற்காக, பிரிட்டன் இந்திய அரசியலை விட்டுக்கொடுக்க முடி யாது. பொதுஜனங்கள் எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக் கைக்கு அது பங்கம் விளைவிப் பதாக ஆகும்.''

இதில், 'பிரிட்டிஷ் ஏகாதிபத் தியம்' என்ற வார்த்தைக்குப் பதி லாக, 'பொதுஜனம்' என்ற வார்த் தையை அமெரிதுரை உபயோகிக் கிறாரென்பது நன்றாக விளங்கு கிறதல்லவா?

அமெரி துரைதான் பொது ஜனங்களின் நலனுக்காகப் பாடு படுகிறார் என்பதில்லை. 'பொது ஜனங்களின் அன்புக்கும் மதிப் புக்கும் பாத்திரமான' கவர்னர் களும், ஐ. ஸி. எஸ்., களும் பொது

நன்மைக்காகப் பாடுபட்டுத் துரும்பாக இளைத்துப் போயிருக்கிறார்கள். வளம் மிக்க வங்காளத்தில் இன்று பஞ்சத்தைக் கொண்டுவந்தது இந்த மகானுபாவர்களின் பொதுஜன சேவைதான். சாமான்களின் விலை ஏறிக்கொண்டு போகிற தென்பதைக் கேள்வியுற்றார்கள் இவர்கள். தொழில் முதலாளிகளோடும் வியாபாரிகளோடும் கூடிப்பேசி விலையைக் கட்டுப்படுத்தினார்கள். உடனே சாமான்களெல்லாம் கள்ள மார்க்கட்டுக்குள் மாயமாக மறைந்தன. அவை எந்த மார்க்கட்டுக்குப் போனாலும், வாங்கவேண்டிய சாமானை வாங்கித்தானே தீரவேண்டியிருக்கிறது? ஆனால், கட்டுப்பாட்டுக்குப் பின், ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்று ஆகிவிட்டது விலை! வாங்கின சாமானுக்கு 'பில்' கொடுப்பதில்லைஎன்பதில்தான் இப்போது கட்டுப்பாடு இருக்கிறது. விலையைக் கட்டுப்படுத்தினால், அந்தக் கட்டுப்பாட்டை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். அமுலுக்குக் கொண்டுவர முடியாத போது, கட்டுப்பாடே விலையை உயர்த்துவதற்கு ஒரு நல்ல சாதனமாக மாறுகிறது. எனவே, வியாபாரிகளுக்கு இந்த விலைக் கட்டுப்பாடுகளில் ஓர் ஈடுபாடே ஏற்பட்டுவிட்டது. தங்கள் கையிலுள்ள மற்றச் சாமான்களின் விலைகளையும் சர்க்கார் கட்டுப்படுத்த மாட்டார்களா என்று அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு அற்புதமான கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்த அரசாங்கம், பொதுஜனங்களின் அரசாங்கமாகுமா?

பொதுஜனம் என்பது ஒரு ஜட வஸ்து. அதற்கு அறிவு இல்லை. அதை எளிதில் ஏமாற்றி விடலாம். தங்களுடைய செளகரியத்துக்கு அதை உபயோகித்துக்கொள்ளலாம். இந்த எண்ணத்திலேதான், மேலேசொன்ன பேர்வழிகள் காரியங்களைச் செய்கிறார்கள். இவர்கள் பொதுஜனத்தைப் பற்றி எண்ணுவது ஒருபுறம் இருக்க, பொதுஜனங்கள் இவர்களைப்பற்றி என்ன எண்ணுகிறார்கள் என்பதைச் சொல்லவேண்டாமா?

மதம் கொண்ட போர் யானையொன்று கட்டிக் கிடக்கிறது. எலிகளையெல்லாம் வேட்டையாடி வீரப் பிரதாபத்தோடு அவ்வழியே சென்ற ஒரு பூனை, இந்த யானையைப் பார்த்தது. வெற்றி வெறியில் இருந்த அந்தப் பூனைக்கு இந்த யானையும் எலி போலத் தோன்றியது போல் இருக்கிறது. உடனே அதன் மீது பாய்ந்தது. பூனையின் பாய்ச்சலைப் பார்த்து யானைக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

இந்த யானைதான் பொதுஜனம். மேலே சொன்ன பேர்வழிகளின் குட்டிக்கரணங்களைக் கண்டு பொதுஜனங்களும் சிரிக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் எப்போதும் சிரித்துக் கொண்டிருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஒரு சமயம் கோபம் வந்து கிளம்பத்தான் செய்வார்கள். அப்போது மேலே சொன்ன பொதுஜனப் 'பிரியர்க'ளின் கதி, யானையின் மீது பாய்ந்த பூனையின் கதிதான். இவர்கள் நெருப்போடு விளையாடுகிறார்கள். சுடுகிற குணம் நெருப்புக்கு இலாமலா போய் விடும்?

✲

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
20 JUN 1944



நாழிகை சிற்சிலவே—சென்று
நள்ளிர வாயினதே!
பாழும் நில விதுவும்—வானில்
பாதி கடந்ததுவே!

கொன்றிடும் சொல்லி தென்பாய்—பின்னும்
கூறுவன்: இன்றொருநாள்
சென்று வருவாயே!—நீ என்
தேனிதழ்ச் செல்வியன்றோ?

தேடுவர் ஊரில் எல்லாம்;—பெற்றோர்
திகைத்து நின்றிடுவார்.
பாடுவர் பெண்கள், சற்றும்—சகியாப்
பாழும் வசைகள் எல்லாம்!

'குவளை'

கண்களில் நீர்சிந்தல் ஏன்?—என்ன
காரியம் செய்குவை நீ?
பெண்களின் வெண் மனமோ—அன்றிப்
பேதைமை யென்ப திதோ?

காதல் இசையினுக்கே—பாவம்
காட்டுமுன் கையசைப்பை,
பாதங்கள் ஊன்றுவதில்—பொருந்தப்
பயிலும் நாட்டியத்தை,

தாமரைச் செவ்விழியில்—பொங்கித்
ததும்பும் தாபத்தையும்
காமரின் வாழ்விடமே—கண்டும்
காலத்தைத் தாழ்த்துவனோ?

பிள்ளைப் பிராயத்திலே—நம்முடைப்
பிஞ்சிளம் கைகளினால்
அள்ளிமணல் எடுத்து—ஆடிய
ஆற்றங் கரையதன் பால்,

புல்வளர் மெத்தையினில்—இரவுப்
போதினில் பால் நிலவில்,
சொல்லிய சொற்படியே—வந்துன்
சோகம் தவிர்த்திடுவேன்!

கர்ம வீரர் லெனின்

ப. ராமசுவாமி

லெனினுக்கு உவமை லெனின் தான். நம்முடைய தலைமுறையிலே தோன்றிய தலைசிறந்த கர்மவீரர் ஒருவரைக் குறிப்பிட வேண்டும் என்றால், அங்கே லெனினுடைய பெயரே முன் வந்து நிற்கும். அசகாய சூரர்கள், சேனாபதிகள் முதலியோரையெல்லாம் லெனினோடு ஒப்பிட முடியாது. அவருடைய வாழ்க்கையும், வீரமும், போராட்டமும் தனி முறையில் அமைந்தவை. சிறு வயது முதலே அவர் ஓர் உயர்ந்த தத்துவத்தை உடும்புப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருந்தார். நாள்தோறும், வருஷந்தோறும், அந்தத் தத்துவத்தின் பல அம்சங்களையும் ஆராய்ந்து வந்தார். அவருடைய சிந்தனை முழுவதிலும் அந்தத் தத்துவமே பரந்திருந்தது. அவருடைய செயல்கள் அனைத்தும் அந்தச் சிந்தனையின் பரிணாமமாகவே இருந்தன. அதுவே அவரது வாழ்க்கையின் லட்சியம். அந்த லட்சியத்துக்காக, அல்லும் பகலும், இன்பத்திலும் துன்பத்திலும், அவர் இடைவிடாது உழைத்து வந்தார்.

கால, தேச, வர்த்தமானங்களின் மாறுதல்களை அறிந்து, அந்தந்த மாறுதலுக்குத் தக்கபடி தம் லட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ளும் சந்தர்ப்பத்தை, லெனின் அமைத்துக் கொண்டார். வினைத்திட்பம் என்ன என்பதையும், அதனால் விளையும் பயனையும், உலகம் லெனினிடமே கற்றுக் கொள்ளவேண்டும். திட்பமும், உறுதியும், ஆராய்ச்சியறிவும், உலைவில்லாத முயற்சியும், லட்சியத்தைத் தவிர வேறு எதையும் தியாகம் செய்துவிடக் கூடிய சமரஸ உணர்ச்சியும், லட்சியத்துக்குக் கடுகளவு ஆபத்து வருவதாயிருந்தால் உற்றாரனைவரையும் உதறித் தள்ளிவிட்டுத் தன்னந் தனியே நிற்கும் திறனும் கடைசியில் அவருக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தன. பத்தொன்பதாவது வயதில் அவர் கைக் கொண்ட லட்சியம், அவருடைய நாற்பத்தெட்டாவது வயதில், 1917-ஆம் ஆண்டு வெற்றியடைந்தது!

லெனின், காந்தி, ஸன் யாட் ஸென், கெமால் பாஷா முதலிய பெருந் தலைவர்கள் ஏக காலத்தில் வாழ்ந்து உலகெங்கும் புகழ் பெற்றிருக்கிறார்கள். இவர்

உலகம், யாரைச் சேர்ந்தது? உழைப்பாளிகளையே சேர்ந்ததாகும்; சோம்பேறிகளுக்கு அதிலே இடமில்லை - இதுதான் பொது உடைமைத் தத்துவம். அதை மறுக்க முடியாத சாஸ்திரமாய் வகுத்துரைத்த மேதை கார்ல் மார்க்ஸ். ஆனால், பொது உடைமைச் சமூதாயம், லெனினுக்கு முன்னே ஒரு கற்பனை உலகமாகவே இருந்து வந்தது. இந்த மண்ணிலே அது சாத்தியமென்று சாதித்துக் காட்டிய மகா புருஷன் லெனின். அவருடைய ஜன்ம தினம் ஏப்ரல் 22-ஆம் தேதி வருகிறது.

கள் ஒவ்வொருவரும் ஒரு பெரிய லட்சியத்தைப் பற்றிக்கொண்டு, அதற்காகத் தம் வாழ்க்கையை அர்ப்பணம் செய்தவர். மகாத்மா காந்தி வெளிநாட்டார் பிடியிலிருந்து இந்தியாவை விடுவிக்கும் லட்சியம் கொண்டவர். ஸன் யாட்ஸென், எழெட்டு வல்லரசுகளின் கீழும் மஞ்சு ராஜ வம்சத்தின் கீழும் நசுக்கப்பட்டு வந்த சீனு சுதந்தரமடைந்து, ஜனநாயக ஆட்சி பெறவேண்டும் என்ற லட்சியம் கொண்டிருந்தார். துருக்கியில் மன்னர் ஆட்சியைக் கவிழ்த்து, ஜனங்களின் ஆட்சியை நிறுவி, மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்து, ஆடிப்போன பழைய துருக்கியின் ஸ்தானத்தில் வீறுகொண்ட புதிய துருக்கியைப் படைப்பதற்காகத் தோன்றியவர் கெமால் பாஷா. ரஷ்ய முடியாட்சியைத் தொலைத்து, உழைப்பாளர் தலைமையில் புரட்சி நடத்தி, உழைப்பாளருடைய முதலாவது சுதந்தர அரசாங்கத்தை நிலை நிறுத்தத்தோன்றியவர் லெனின்.

1917 - ஆம் ஆண்டு ரஷ்யப் புரட்சி வெற்றி பெற்றது. லெனினுடைய தலைமையில் உழைப்பாளருடைய ஸோவியத் அரசாங்கம் அமைக்கப்பட்டது. ஜாரும், அவர் குடும்பத்தாரும் ஒழிக்கப்பட்டனர். அவருடைய நாயும் கூடப் பாக்கி விடப்படவில்லை. ஜாருடைய வீழ்ச்சி அவ்வளவு பிரமாதமல்ல; அது புரட்சியின் ஒரு சிறு அம்சம். ஜாருடைய கொடுங் கோன்மையின் பயங்கரத்தை அறிந்த நாம், அவர் வீழ்ச்சியையே பிரமாதமாகக் கருதுவது இயல்பு. ஆனால், புரட்சியின் முக்கியமான வேலைகள், பணக்கார வகுப்பினரை ஒடுக்கி, உத்வேகம் கொண்ட தொழிலாளர் தலைமையில் குடியானவர்களும் ஒன்று கூடி, ஸோவியத் அரசாங்கத்தை அமைத்ததும், அதன்பின்பு வெளி நாடுகளின் தலையீட்டைமுறியடித்ததும், திட்டங்கள் தயாரித்துத் தேசத்தைப் புனருத்தாரணம் செய்ததும், தேசப் பாதுகாப்புக்காக உழைப்பாளருடைய செஞ்சேனை அமைத்ததுமேயாகும். சுருக்கமாய்ச் சொல்வதானுல், லெனின் தலைமையில் நடந்த புரட்சியால், ரஷ்யா ஒரே பாய்ச்சலாகப் பல நூறு வருஷங்களைத் தாண்டி முன்னேறிவிட்டது.

பணக்கார வகுப்பில் தோன்றி வக்கீலான லெனின், சொத்துக்களைப் பொதுவுடைமையாக்கும் தொழிலாளர் புரட்சிக்குத் தனிப் பெருந்தலைவராக விளங்கினுர் என்பது பெரிய வியப்புத்தான். ஆனுல், கூர்ந்து பார்த்தால் வியப்பு மறைந்து விடும். ஆணவம், சுயநலம், புகழில் ஆசை, யதேச்சையாக நடத்தல் முதலிய குணங்களைப் பெரும்பாலான மக்கள் பெற்றிருப்பது போல், லெனினும் பெற்றிருந்தார் என்ற எண்ணத்துடன் அவரைக் கவனித்தால் வியப்பாயிருக்கும். ஆனுல், அவரிடம் இந்தக் குணங்களில் எதுவும் கிடையாது. கொண்ட கொள்கைக்கும் தமக்கும் வித்தியாசமில்லாமல் அவர் அதுவாகவே ஆகிவிட்டார். ஆணவம் அற்றுப் போனதாலும், ஒத்த உணர்ச்சியாலும், அவர் உழைப்பாளர் தலைவராக விளங்க முடிந்தது.

'ஐரோப்பாவில் இந்த நூற்ருண்டில் அவரை விடச் சக்தி வாய்ந்தவர் எவரையும் நான் அறியேன்' என்று லெனினைப் பற்றி ரொமெயின் ரோலண்டு சொல்லியிருக்கிருர். 'நெப்போலியனுக்குப் பின்னுல், ஐரோப்பிய சரித்திரம் அத்தகைய உருக்கினுல் செய்த மன உறுதியைக் கண்ட

தில்லை' என்றும் அவர் வியந்திருக்கிறார். லெனினிடம் ஆடம்பரம் ஒன்றும் கிடையாது. அவர் மது அருந்துவதில்லை. புலனடக்கம் உள்ளவர். தற்பயிற்சியில் அவருக்கு நம்பிக்கை அதிகம். தம்மைப் போலவே நண்பர்களும் கூட்டாளிகளும் இருக்க வேண்டும் என்று அவர் கருதினாலும், அவர்கள் வாழ்க்கையில் தலையிடுவதில்லை. அவர்கள் தேகப் பயிற்சி முதலியவை செய்து உடலைப் பலமுள்ளதாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றும், வாழ்க்கை முழுவதையுமே பேச்சில் கழித்துவிட வேண்டாம் என்றும் கூறுவதைத் தவிர, அவர் நண்பர்களுடைய நடவடிக்கைகளுக்குக் குறுக்கே நிற்பதில்லை.

லெனின் நடத்தி வந்த பத்திரிகைகளில் முக்கியமானவை இரண்டு: அவை 'இஸ்க்ரா,' 'பிராவ்டா' என்பவை. 'இஸ்க்ரா' என்றால் அனல் பொறி, 'பிராவ்டா' என்றால் ஸத்தியம் என்று பொருள். ஸத்தியமும் அனல் பொறியான உத்வேகமும் சேர்ந்த ஓர் உருவமாகத்தான் லெனின் விளங்கினார். அவரைப் பார்த்த ஒரு தொழிலாளி, 'என்ன எளிமையாயிருக்கிறார்! ஸத்தியத்தைப் போலவே எளிமையாயிருக்கிறார்!' என்று கூறினானாம். மனித சமூகம் அநுபவித்து வந்த துன்பங்களை அவர் வெறுத்துத் துவேஷித்தார். அந்தத் துன்பங்கள் எல்லாம் வாழ்க்கையில் தள்ள முடியாதவை அல்ல, அவசியமானவையும் அல்ல; ஜனங்கள் அவைகளைத் தகர்த்தெறிய முடியும், தகர்த்தெறியவும் வேண்டும் — இத்தகைய ஸத்தியத்தை அவர் எழுத்தாலும், பேச்சாலும், செய்கையாலும் நிலை நாட்டி விட்டார்.

வளர்க்க முடியுமா?

"உங்களால் ஒரு செடியை வளர்க்க முடியுமா? அதுபோலவே ஒரு குழந்தைக்கு நீங்கள் எதுவும் கற்பித்தல் இயலாத காரியம். செடி தானே வளர உதவி மட்டுமே நீங்கள் செய்ய முடியும். கல்வி விஷயமும் இவ்வாறுதான். ஆசிரியன் தான் கற்பிப்பதாக எண்ணுவதாலேயே, எல்லாவற்றையும் கெடுத்துவிடுகிறான். சகல ஞானமும் மனிதனுக்குள்ளே இருக்கிறதென்று வேதங்கள் சொல்லுகின்றன. அந்த ஞானம் ஒரு சிறுவனுக்குள்ளும் இருக்கிறது. அதை வெளியே கொணரவேண்டும். அதுவே ஆசிரியனின் வேலை."

— சுவாமி விவேகானந்தர்

எண்ணத் தொலையாத கட்டுரைகளும், சில நூல்களும் அவர் எழுதியிருக்கிறார். புரட்சியைப் பரப்ப எழுத்து அவசியப் பட்டதால் தான், அவர் எழுதினார். அவருடைய எழுத்தெல்லாம் ஆணித்தரமானவை. ஒரு முறை படித்தால், பசுமரத்து ஆணி போல், உள்ளத்தில் பதிந்து விடும். கார்ல் மார்க்ஸ், டிராட்ஸ்கி முதலியோரைப் போல் அவர் விசேஷ இலக்கிய ஆராய்ச்சியுடையவர் அல்ல. அவருடைய எழுத்துக்கள், உண்மையை உள்ளபடி எடுத்துச் சொல்லுவதற்குக் கூடவோ குறையவோ செய்யமாட்டா. கருத்தை வெளியிட்டுக் காரியத்தில் வெற்றி பெறுவதற்கு அவருடைய எழுத்துக்களே தக்க வழிகாட்டிகள். 'ஆ! ஹா!' என்று ஆர்ப்பாட்டமாக எழுதுவதைக் கண்டால், அவருக்குப் பிடிக்காது. அதிதீவிரவாதிகள் உபயோகிக்கும் அபூர்வப் பதப் பிரயோகங்களைக் கண்டால், அவை 'வெற்று வேட்டுகள்!' என்று பரிகசிப்பாராம்.

கண்டபடி வார்த்தைகளை அள்ளித் தெளித்துக் கருத்து மறையும்படி எழுதுவதிலும் அவருக்கு வெறுப்பு. டால்ஸ்டாயின் எழுத்துக்களும் லெனின் எழுத்துக்களும் சேர்ந்தால், ரஷ்ய பாஷைக்குத் தேவையான அளவு உயர்ந்த வசன இலக்கியம் அமைந்து விடும் என்று மிர்ஸ்கி என்ற ஆசிரியர் கூறியிருக்கிறார். லெனினுடைய எழுத்து, தொழிலாளி வேலை செய்வது போலவும், கொத்தன் கட்டிடம் கட்டுவது போலவும், குறித்த பலனுக்காகக் குறித்த முறையில் வரையப் பட்டிருக்கும். அலங்காரம் ஒன்றும் அதில் கிடையாது. லெனின் வெள்ளைச் சொற்களையே உபயோகிப்பார். தெளிவும்,குறிப்பாக உணர்த்துவதுமே அவர் நடையின் சிறப்புக்கள்.

அவருடைய பேச்சும் எழுத்தைப் போலத்தான். ஆனால், அவர் நேரில்நின்றுபேசும்போது, கவர்ச்சி அதிகம் இருக்கும். ஒவ்வொரு வார்த்தையையும் நிறுத்துப் பார்த்துப் பேசுவது போல் இருக்கும் என்று மாக்ஸிம் கார்க்கி குறிப்பிட்டிருக்கிறார்.

எழுத்தும் பேச்சும் இப்படி என்றால், செயலைப் பற்றி, வாழ்க்கையைப் பற்றி, அதிகமாக விவரிக்க வேண்டியதேயில்லை. அவர் தான் புரட்சி, புரட்சிதான் அவர். அவருடைய கலியாணத்தை மட்டும் கவனித்தாலே போதும். அவர் குருப்ஸ்காயா என்பவரை மணந்து கொண்டார். உண்மை என்னவென்றால், புரட்சிக்காக ஒரு தலைவரும் தலைவியும் ஒத்துழைத்து ஒன்றாக வாழ்ந்தார்கள் என்பதே. புரட்சி சம்பந்தமில்லாத நண்பர்களோ விரோதிகளோ லெனினுக்குக் கிடையாது. நண்பர்களிடம் மிகவும் அன்போடு நெருங்கிப் பழகுவார். ஆனால், புரட்சிக்கு விபரீதமான முறையில் அவர்களில் யாரேனும் நடந்தால், அவர்களைத் துறந்து விட அவர் தயங்கமாட்டார். துறந்தபிறகு, அன்புகாரணமாகத் தனியே கிடந்து ஏங்குவாராம். இதைப் பற்றி அவருடைய மனைவியார் விவரித்திருக்கிறார். நட்புப் பெரிதுதான். ஆனால், அதைவிட அவருக்குப் புரட்சி பெரிது!

பார்வைக்கு லெனின் சாதாரணமாய்த்தான் இருப்பார் என்றும், பெருந் தலைவராகத் தெரியாது என்றும் கார்க்கி எழுதியிருக்கிறார். கார்க்கியும் அவரும் நெருங்கிய நண்பர்கள். அடிக்கடி சந்தித்திருக்கிறார்கள். லெனினைப் பற்றி விவரமாகத் தெரிந்து கொள்வதற்கு, கார்க்கி எழுதி வைத்திருக்கும் குறிப்புகள் மிகவும் உதவியாயிருக்கின்றன. லெனினுடைய தலை வழுக்கை விழுந்திருக்கும். உடல் பலமுள்ளதாயும் குள்ளமாயும் இருக்கும். நிறம் சிவப்பு. அவருடைய விசாலமான நெற்றி, ஸாக்ரடீஸ் ஞானியின் நெற்றியைப் போல் இருக்கும் என்று கார்க்கி வர்ணித்திருக்கிறார். படத்தில் பார்த்தால், நமக்கும் அப்படியே காண்கிறது.

1917–ஆம் ஆு ஏப்ரல் மீ லெனின் வெளி நாடுகளிலிருந்து ரஷ்யாவுக்கு வந்து புரட்சியை ஆரம்பித்ததிலிருந்துதான், அவரைப் பற்றி உலகம் அதிகமாய் அறிந்து கொண்டது. அதற்கு முன்பு 24-வருஷங்களாக, வெளிக்கு அதிகம் தெரியாமல் அவர் உழைத்து வந்ததும், பொதுவுடைமைத் தத்துவங்களை ஆராய்ந்ததும், ரஷ்யாவின் நிலைமையை, உள் நாட்டில் தங்கி

யிருந்தவர்களைக் காட்டிலும் அதிகமாக அறிந்து வந்ததும் பின்னுல்தான் உலகத்துக்குத் தெரிந்தன. புரட்சி பற்றிய அவருடைய கருத்துத் தெளிவா யிருந்ததால், அவர் எழுத்தும் பேச்சும் தெளிவாக அமைந்தன. எழுத்துக்கும் பேச்சுக்கும் தக்கபடியே செய்கையும் அமைந்திருந்தது. இதனுலேயே, அவர் பூரண வெற்றியைக் காண முடிந்தது.

லெனின் கர்ம வீரர் என்பது வெற்றுப் புகழுரை அல்ல. ஓர் உண்மையான கர்ம வீரர், கர்மமே கண்ணுயிருந்து முடிக்க வேண்டும். சிலர் பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடியும் என்று கேள்விப் படுகிறேம். உயர்ந்த லட்சியத்துடன் ஓர் உருவத்தைப் படைக்க ஆரம்பித்தால், அது அற்பமான குரங்காக அமைகிறது என்பது இதன் பொருள். இப்படி அமைக்கிறவர் கர்ம வீரர் என்றபெயருக்கேஅருகதையற்றவர். இது போலவே தான், குரங்கு பிடிக்க ஆரம்பித்து அது பிள்ளையாராக வந்து முடிவதும். நினைத்ததை நினைத்தபடியே செய்து முடிப்பது தான் கர்ம வீரரின் லட்சணம். லெனின் சம்பந்தப்பட்ட மட்டில், இந்த லட்சணம் அவரிடம் சம்பூரணமாக இருந்தது. லெனினும் அவருடைய கர்மமும் இரண்டறக் கலந்து விளங்கியதுதான் அவருடைய வீர சரித்திரம்.

குறும்பு

கொலம்பியா சர்வகலாசாலையில் ஒரு புரொபஸரான டாக்டர் கிளைட் ஆர். மில்லர் என்பவருக்கு, ஏதாவது குறும்புத்தனம் செய்வதில் வெகு பிரியம். பிரெட் ஸி. கெல்லி என்ற எழுத்தாளரிடம் ஒரு நாள் திடீரென்று வந்து, "கொஞ்சம் உலாவி வருவோம், வாருங்கள்" என்று புரொபஸர் கூப்பிட்டார்.

இருவரும் புறப்பட்டார்கள். வழியிலே, ஒரு பிரம்மாண்டமான மாளிகைக்குள் எவர் உத்திரவு மின்றிப் புரொபஸர் பிரவேசித்தார். கூடத்துச் சுவரிலே, தமது பென்ஸிலால் ஒரு கோடு போட்டார். எழுத்தாளருக்கு ஒன்றுமே விளங்காமல் பிரமித்து நின்று கொண்டிருந்தார். இச்சமயம் வீட்டுக்குள்ளிருந்து ஒரு கனவான் இவர்களை நோக்கி வந்தார். அவரை லட்சியம் செய்யாமலே, புரொபஸர் தம் தோழரை நோக்கி, "இங்கேதான், புதிய அடைப்புச் சுவரை எழுப்பவேண்டும். இங்கே நம் தண்ணீர்த் தொட்டிகளை வைக்கப்போகிறேன்..." என்ருர்.

வீட்டுக்காரர் எரிச்சலுடன், "இதெல்லாம் என்ன? நீங்கள் யார்?" என்று கேட்டார்.

"கட்டிடத்தில் சில மாறுதல் செய்யப்போகிறேம். எப்படிச் செய்யலாம் என்று பார்க்கவே வந்தோம்" என்ருர் புரொபஸர்.

"மாறுதலா? நான் நீண்ட காலத்துக்குக் குத்தகை எடுத்திருக்கிறேனே இந்த வீட்டை. அது என்ன ஆவது?" என்று கேட்டார் வீட்டுக்காரர்.

"அதைப்பற்றி எனக்கென்ன கவலை?" என்று அலட்சியமாய்ச் சொல்லிய புரொபஸர், தம் தோழரை நோக்கித் திரும்பி, "தெரிந்ததா? வேலை நாளைக்கே தொடங்கவேண்டும்; ஆள்களை அழைத்து வந்து விடுங்கள்" என்று கூறி, கம்பீரமாக வெளியே கிளம்பிவிட்டார்!

விரைவில் வெளிவரும்!

புனர் ஜன்மம்

எழுதியவர் :
'' தூமிலன் ''

✲ தமிழில் முதன் முதல் வெளியாகும் ஹாஸ்ய நாவல்

மாஜி பெரிய குடும்பத்தைச் சேர்ந்த சாம்பு தன் சகோதரி சந்திராவுக்கு எதிர் ஜாமீன் கொடுக்கும் வரன் தேவை என்று விளம்பரம் செய்கிறான். அந்த விளம்பரத்தைப் பார்த்த தியாகராஜன் என்ற வாலிபன் சீட்டுக் குலுக்கிப் போட்டுப் பார்த்துச் சந்திராவை விவாகஞ் செய்து கொள்ள மனுப் போடுகிறான் ஆனால், விவாக தினத்தன்று மாப்பிள்ளை வந்தபோது மணப் பெண்ணைக் காணோம். பிறகு மாப்பிள்ளையையும் காணோம். மேலும் நடக்கும் எதிர்பாராத சிக்கலான விஷயங்களை ஆசிரியர் ஹாஸ்ய முறையில் சித்திரித்திருக்கிறார்.

நூர் ஜஹான்

எழுதியவர் :
துவிஜேந்திரலால்ராய்
தமிழாக்கியவர் :
ப. கி. விஜயராகவன் L.P.T.

✲ - உயர்தர நாடகம் -

பாபு துவிஜேந்திரலால்ராய் என்ற வங்ககவி எழுதிய நாடகத்தின் மொழிபெயர்ப்பு. அவர் எழுதிய பல நாடகங்களுள் இதுவே மிகச் சிறந்ததென்று வங்காளிகள் கொண்டாடுகிறார்கள். இதில் நவரசங்களும் ஒருங்கே அமைந்திருக்கின்றன.

கோதைத் தீவு

எழுதியவர் :
வ. ரா.

✲ ஒரு கற்பனைச் சித்திரம்

ஒரு சமூகத்தில், இப்பொழுது ஆண் பிள்ளைகளுக்கு இருப்பதுபோல சகல உரிமை, பெருமைகள் பெண்மக்களுக்கு இருக்குமாகில் அந்த சமூகம் எப்படி நடைபெறும் என்பதைப்பற்றிய கற்பனைச் சித்திரம்.

திருக்குறள்

பொழிப்புரை :
ஸ்ரீலஸ்ரீ ஞானியார்
சுவாமிகள் மாணவர் லால்குடி
அ. நடேச முதலியாரவர்கள்

✲ மூலமும் பொழிப்புரையும்

சுருக்கமும் தெளிவும் செறிவும் வாய்ந்தது. யாவரும் எளிதில் படிக்கத் தக்கது.

புத்தக நிலையம்
தெப்பக்குளம் :: திருச்சினுப்பள்ளி

குழந்தைகளுக்காகவே

ஒரு புதிய தமிழ் மாதப் பத்திரிகை

"பாப்பா"

சின்னச் சின்னக் கதைகள்!
கண்ணைக் கவரும் படங்கள்!
வேடிக்கையான பாட்டுகள்!
பெரியோர் வரலாறுகள்!
விளையாட்டுகள்!
விடுகதைகள்!

*

சகல இடங்களிலும் டிபாசிட்
கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.
தனிப் பிரதி அணா நான்கு
வருட சந்தா ரூபாய் மூன்று
மே மாதம் முதல் வாரத்தில்
— :: வெளிவரும் :: —

பாப்பா பத்திரிகாலயம்

ராயவரம் : : புதுக்கோட்டை
சமஸ்தானம்

சுதந்தர ஆடு

அற்புதம்

உயர்ந்த மலைகள் சூழ்ந்த ஒரு பள்ளத்தாக்கில், அருள் வாசம் செய்கிறார். அவருக்கு ஆடுகள் வளர்ப்பதில் பெரும் பித்து. ஆனால், இதில் அவர் எவ்விதத்திலும் பயன் அடைந்தது இல்லை என்றே சொல்லலாம்.

ஒன்றன்பின் ஒன்றாக, அவருடைய எல்லா ஆடுகளும் ஒழிந்துபோயின. அவர் வளர்த்த ஒவ்வோர் ஆடும், இரவு முழுதும் கத்திக்கொண்டிருக்கும்; தன்னைக் கட்டியிருந்த கயிற்றை விடியற்காலையில் அறுத்துக்கொண்டு காடுகளுக்கு ஓடிப்போகும். அங்கே ஓநாய்கள், அதைப் பிடித்துக் கடித்துத் தின்றுவிடும். அருள் காட்டிய அளவற்ற பட்சமோ அல்லது ஓநாயின் பயமோ அந்த ஆடுகள் ஓடாதபடி, அவைகளின் மனதை மாற்றவில்லை. அந்த ஆடுகள் சுதந்தரத்திலே ஆசை கொண்டன; விசாலமான இடத்தையும் சுயேச்சையையுமே விரும்பின.

மிருகங்களின் குணாதிசயங்களைப்பற்றி அதிகம் அறியாத அருள், இந்த விந்தையைக் கண்டு ஆச்சரியப்பட்டு, ''சரி, இனி ஆடுகளை நான் வளர்ப்பதில்லை. என்னிடம் அவைகள் இருக்கவேண்டும் என்று நான் ஆசைப்படுவதில்லை'' என்று சொன்னார். ஆனால், இந்த மாதிரி அடிக்கடி சொன்ன போதிலும், ஆறு ஆடுகளை ஓநாய்களுக்குப் பறிகொடுத்திருந்தும், சற்றும் மனம் தளராமல், ''நான் ஒரு சிறு ஆட்டுக்குட்டியை வாங்கி வளர்த்தால், அது என் வீட்டில் தங்கிச் சந்தோஷமாயிருக்கப் பழகிவிடும்'' என்று சொல்லி, ஒரு சிறிய வெள்ளாட்டுக்குட்டியை வாங்கி வந்தார்.

இந்தச் சிறு குட்டியின் அழகை வர்ணிக்கவே முடியாது. என்ன அழகு! என்ன ஒய்யாரமான நடை! களங்கமற்ற கண்கள்! பால் போன்ற வெண்ணிறம்! பட்டைப் போன்ற மிருதுவான ரோமம்! என்ன அமைதி! என்ன சாந்தம்! அதைப் பார்க்கப் பார்க்க, அதன் மீது அருளுக்கு அளவற்ற பிரீதி. அதை அழைத்துத் தன் பக்கத்தில் பிடித்து வைத்துக்கொண்டு, பாராட்டிச் சீராட்டிக் கொஞ்சிக்கொண்டே இருப்பார். வீட்டுக்குப் பின்னால், ஓர் அழகிய சிறு தோட்டம் இருந்தது. அதன் நடுவில் ஒரு

ஆட்டையும் ஓநாயையும் வைத்துத்தான் எழுதப்பட்டிருக்கிறது இந்தக் கதை. ஆனால், இதிலே என்ன அரிய தத்துவம், உயர்ந்த புதைபொருள் அடங்கிக்கிடக்கிறது! பிரஞ்சு ஆசிரியரான அல்பான்ஸோ தொதே எழுதிய ஒரு கதையின் தழுவல் இது.

மூளையை அடித்து, அதில் நீண்ட தொரு கயிற்றைக் கட்டி, அதன் நுனியில் இந்த ஆட்டுக் குட்டியைப் பிணைத்து வைப்பார். அவ்விடத்தில் இருந்த அருமையான பசும்புல்லை, அந்த ஆடு மேய்ந்து கொண்டு சந்தோஷமா யிருப்பதாகவே தோன்றியது. கயிறு நீளமா யிருந்ததால், வேண்டிய தூரம் போய் மேய முடிந்தது. சில சமயங்களில், தோட்டத்துக்குப் போய், தம் ஆட்டுக் குட்டியைப் பார்த்து, அருள் சந்தோஷங் கொள்ளுவார். அதுவும் இவரைக் கண்டதும், சந்தோஷத்தால் துள்ளிக் குதித்து, இவரண்டை ஓடிவரும். "ஆ! இந்த ஆடு என்னிடமே தங்கிவிடும். இது திருப்தியாய், சந்தோஷமா யிருக்கிறது" என்று நினைப்பார். ஆனால், அருள் ஏமாற்ற மடைந்தார். ஆட்டுக்குச் சலிப்பு ஏற்பட்டுவிட்டது.

ஒரு நாள், ஆடு தோட்டத்தின் வேலியண்டை சென்று, சுற்றிலுமுள்ள மலைகளைப் பார்த்து, யோசிக்கலாயிற்று:

"ஆ! அதோ அந்த மலையுச்சியின் மேல் எவ்வளவு ரம்மியமா யிருக்கும்; அங்கேயுள்ள செடி கொடிகளிடையே ஆடியோடி, விளையாடினால் என்ன இன்பமா யிருக்கும்! கழுத்தை நெருக்கும் கயிறும் தளையுமின்றிச் சுயேச்சையாய்த் திரிவது, எவ்வளவு ஆனந்தம்! ஒரு தோட்டத்தில் அடைபட்டுக் கிடப்பது, கழுதை அல்லது எருமைக்குத்தான் தகும்; பரந்த இடங்களில் சுயாதீனத்துடன் திரிவதன்றோ ஆடுகளுக்கு அழகு!"

அன்று முதல் அதற்கு அந்தத் தோட்டத்தின் புல், ருசியற்றுப் போயிற்று. ஆட்டுக்குச் சலிப்பு முற்றத்தொடங்கியதால், இளைத்து மெலிந்தது. பாலும் சரிவரக் கொடுப்பதில்லை. கயிற்றை இழுத்து இழுத்து, தலையை நெளித்து நீட்டி, மலைகளைப் பார்த்து, "மே, மே" என்று கம்மிய குரலில் அது கத்துவதைக் கேட்கும் போது, பரிதாபமா யிருந்தது.

ஆட்டுக்கு ஏதோ கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்று அருள் நினைத்தாரே யொழிய, உண்மையை அறிந்தாரில்லை. அவர் ஒருநாள் கயிற்றைப் பிடித்து இழுத்து, ஆட்டை அவிழ்த்து விடும் சமயத்தில், ஆடு அவரை நோக்கி, "கேளும், கனம் அருள் அவர்களே! என்னை விட்டுவிடும். உமது வீட்டில் நான் சலிப்படைந்து கிடக்கிறேன். மலைகளில் சென்று உலாவ, எனக்குப் பிரீதியா யிருக்கிறது" என்றது.

"ஆ! என் தெய்வமே! இந்த ஆடு கூடவா!" என்று பெருமூச்சுவிட்டு, தம் கையில் இருந்த பாத்திரத்தை நழுவவிட்டு, தரையில் தமது ஆட்டண்டையில் உட்கார்ந்து, அருள் சொன்னார்: "என்ன? என் பிரிய வெண் குட்டியே! நீ கூடவா என்னை விட்டு ஓட விரும்புகிறாய்?"

"ஆம், ஐயா!"

"ஏன்? இங்கே உனக்குப் போதிய புல் இல்லையா?"

"ஓ! அதல்ல விஷயம்."

"ஒரு வேளை, உன் கயிறு குட்டையா யிருக்கிற தாக்கும். இன்னும் அதை நீளமாகக் கட்டட்டுமா?"

"அது தேவையில்லை, ஐயனே!"

"பின்னே, உனக்கு என்னதான் தேவை? என்ன வேண்டும்?"

"நான் மலைகளிலே போய்ச் சுற்றித் திரியவேண்டும்."

"துர்ப்பாக்கிய ஆடே! ஆனால், அந்த மலைகளில் ஓநாய்கள் இருப்பதை நீ அறியாயோ? அவை உன்னை விழுங்க வந்தால், நீ என்ன செய்வாய்?"

"அதென்ன, ஒரு பெரிய காரியமா? என் கொம்புகளால், அவைகளைக் குத்திக் கொன்று விடுவேன், ஐயா!"

"ஆமாம்! உன் கொம்புகளைப் பார்த்து, ஓநாய் அதிகமாகத்தான் பயப்படும். ஆனால், உன்னைவிட அதிகப் பராக்கிரமசாலிகளான ஆறு ஆடுகளை அது ஏற்கெனவே விழுங்கிவிட்டதே! அதன் முன்னிலையில் நீ எம்மாத்திரம்? சென்ற வருஷம் இங்கேயிருந்த பாபு என்ற ஆட்டை உனக்குத் தெரியுமே! அந்த ராட்சதனின் பலம் யாருக்கு வரும்! அதன் கொம்புகள் எவ்வளவு கூர்மையாயும் நீளமாயும் இருந்தன! அந்த ஆடு இரவெல்லாம் ஓநாயோடு சண்டையிட்டது! ஆனால், விடியற்காலையில் ஓநாய் அதைச் சாப்பிட்டுவிட்டது!"

"பாவம்! பாபுவின் முடிவு வருத்தமாய்த்தான் இருக்கிறது. ஆனாலும் பரவாயில்லை. மலைகளில் போய்ச் சுற்றித்திரிய, என்னை விட்டுவிடும், ஐயா!"

இதைக் கேட்ட அருள், "ஆ, தெய்வமே! என் ஆடுகளுக்கு நான் என்ன தீம்பு செய்கிறேன்? இந்த ஆட்டையும் ஓநாய் விழுங்கப் பார்க்கிறது. இது கூடாது, கூடாது! எப்படியானாலும், நீயே வேண்டாம் என்றாலும், உன்னை நான் காப்பாற்றவேண்டும். நீ கயிற்றை அறுத்துக்கொண்டு ஓடிவிடாதபடி, மாட்டுத் தொழுவத்தில் போட்டு, உன்னை அடைத்துவிடுகிறேன். நீ அதில் தான் எப்போதும் இருக்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே, ஆட்டைப் பிடித்து, இருள் நிறைந்த மாட்டுத் தொழுவத்தில் தள்ளி, கதவைச் சாத்தி, இரட்டைப் பூட்டுப் போட்டுப் பூட்டினார். ஆனால், ஒரு ஜன்னல் மட்டில் தாழிடாமல் மூடியிருந்ததை, அவர் கவனிக்கவில்லை. ஆதலால், அவர் அப்புறம் சென்றதும், ஆடு ஜன்னல் வழியாய் வெளியே குதித்து, மலையை நோக்கி ஓடிவிட்டது.

ஆடு மலையை அடைந்ததும், அங்கே ஒரே குதூகலம்தான். அங்கிருந்த பழ மரங்கள், இவ்வளவு அழகான மிருகத்தை இது வரையில் பார்த்ததே கிடையாது. ஆதலால், இந்த ஆட்டை, ஓர் அரசியைப்போல் அவை வரவேற்றன. உயர்ந்த மரங்களின் கிளைகள், இந்த ஆட்டுக்கு வணக்கம் செய்து தழுவினாற்போல், தங்கள் தலைகளைத் தரைமட்டம் வரையில் தாழ்த்தின! அங்கங்கே அடர்ந்து மலர்ந்திருந்த பூக்களோ, தங்கள் முகங்களை விரித்து, வாசனை வீசி, ஆடு செல்லும் வழியை அலங்கரித்தன. மலை முழுவதும் ஒரே பெருங்கொண்டாட்டமயமாயிருந்தது.

ஆடு பரமானந்தம் அடைந்தது. அதை ஓடவிடாமல் இழுக்குங் கயிறு இல்லை; முளை கிடையாது. தன்னிஷ்டம்போல் அது ஓடி ஆடுவதைத் தடுக்க ஒன்றுமில்லை. எவ்வளவு புல் அங்கே இருந்தது! அதுவும் என்ன வாசனையான புல்! மேய மேயப் பசியுண்டாயிற்று. பூக்களுக்கோ கணக்கில்லை; விதம் விதமாய், விந்தை விந்தையாய், கண்களைக் கவரும் மலர்கள், எங்கே பார்த்தாலும் மிளிர்ந்து கொண்டிருந்தன. இவைகளைக்

கண்டு சுதந்தர பரவச மயக்கம் தலைக்கேற, ஆடு அங்கும் இங்கும் குதித்தோடி, புல் தரையிலும், புதர்களிலும் பாய்ந்து புரண்டு துள்ளித் திரிந்தது. திடீரென்று முன்னங் கால்களைத் தூக்கி, பின்கால்களில் நின்று, தலையை நிமிர்த்தி,ஏதோ பகைவனை எதிர்க்கிறுப்போல் கொம்புகளைச் சாய்த்துக் குதிக்கும். இதன் ஆட்ட பாட்ட மெல்லாம் அந்த மலையையே கிடுகிடுக்கச் செய்த தென்ருல், மிகையாகாது. ஓர் ஆடு அல்ல, பத்து ஆடுகள் ஆடித் திரிந்ததைப் போல், அந்த மலை கலகலத்தது. இந்த ஆட்டுக்குப் பயம் என்பதே இன்னதென்று தெரியாம லிருந்தது.

ஒரே பாய்ச்சலில் மலைச்சாரல் ஒன்றைத் தாண்டி, அப்பாலிருந்த பாறை மேல் தாவிப் படுத்து ஆனந்தமாய்ச் சூரிய வெப்பத்தில் பாடிய வண்ணம், மலைச் சாரலி லிருந்து தன் மெல்லிய கம்பளத்தின் மேல் விழுந்த சில தண்ணீர்த் துளிகளை உலர்த்திக் கொண்டிருந்தது. ஒரு சமயம், தன் வாயில் ஓர் அழகிய பூவைக் கவ்விக்கொண்டு, மலை யோரத்தில் இருந்த பள்ளத்தாக்கை நோக்கியது. அங்கே அருளின் வீட்டையும் தோட்டத்தையும் காணவே, கண்ணில் ஜலம் கொட்டச் சிரித்து, "ஆ! ஆ! இந்தச் சிறு வீட்டில் நான் எப்படி இவ்வளவு நாள் தங்கியிருந்தேன்!" என்று சொல்லித் தனக்குத் தானே நகைத்துக் கொண்டது.

எவ்விதமாயினும், அந்த நாளில் நமது ஆடு வெகு சந்தோஷமாகவே யிருந்தது. மத்தியான வேளையில் காட்டில் அங்குமிங்கும் சுற்றி வரும்போது, சில காட்டு வெள்ளாடுகள் ஒரு திராட்சைச் செடியைத் தின்று கொண்டிருப்பதைக் கண்டு, இதுவும் அங்கே ஓடியது. இதன் வெண்ணிறத்தைக் கண்ட அந்தக் காட்டாடுகள், ஆச்சரியப்பட்டு, தாங்கள் உண்ணும் விருந்துக்கு இதை அழைத்தன. பிறகு, அவைகள் யாவும் இந்த ஆட்டின் கதையைக் கேட்டுப் பிரமித்து, பேச்சிலே காலத்தைப் போக்கின.

விழுங்கும் கொள்கை

லார்ட் வில்லியம் பெண்டிக் இந்திய வைசிராயாக இருந்தபோது, காவெண்டிஷ் என்னும் ஓர் ஆங்கிலேயர், குவாலியர் சமஸ்தானத்தில் ரெஸிடெண்டாய் இருந்தார். அவருடைய பதவிக்காலம் முடிந்து அவர் இங்கிலாந்துக்குச் சென்ற போது, மேஜர் சண்டர்லேண்ட் என்பவர், அவருடைய ஸ்தானத்துக்கு வந்தார். அவர் வேலைக்குப் புதியவர். சமஸ்தான விஷயங்களில் தலையிடுவதா, தலையிடாம லிருப்பதா என்பதைப் பற்றி அவருக்கு ஒன்றும் விளங்க வில்லை. ஆகையால், அவர் நேராக வில்லியம் பெண்டிக்கிடம் போய், "எந்த மாதிரியான கொள்கையை அநுஷ்டிக்கவேண்டும்?" என்று கேட்டார். பெண்டிக்குக்குச் சில்லறை வேடிக்கைகளில் வெகு பிரியம். அவர் தலையைப் பின்பக்கம் சாய்த்து, வாயை அகலத் திறந்து, சிறு பையன்கள் மிட்டாய் சாப்பிடுவதுபோலப் பெரு விரலையும் அதற்கடுத்த சிறு விரலையும் ஒருங்கு சேர்த்து வாயருகே கொண்டுபோய், "இதோ பாரும், மேஜர்! குவாலியர் சமஸ்தானம் நழுவி உம்முடைய வாயில் விழுமானல், காவெண்டிஷ் வாயை மூடிக்கொண்டிருந்தது போல நீரும் வாயை மூடிக்கொண் டிருக்கக் கூடாது; விழுங்கிவிடவேண்டும். அதுதான் என் கொள்கை!" என்ருர்.

திடீரென்று குளிர்ந்த காற்று அடிக்கத் தொடங்கியது. மலையின் பொன்னிறம் வரவர மாறுதலடைந்து, கறுத்தது. சூரியன் சிறுகச் சிறுக மலைகளுக்குப் பின்னால், மறையலானான். மாலைப் பொழுது ஆரம்பமாயிற்று.

"ஐயோ! இதற்குள் இரவு வந்துவிட்டதே!" என்று திடுக்கிட்டது ஆடு. பள்ளத்தாக்கில் இருந்த அருளின் வீடும், மூடுபனியால் மறைபட்டுப் போயிற்று. கண்ணைப் பரக்கத் திறந்து உற்றுப் பார்த்தால், அந்த வீட்டின் கூரையும் அதன் வழியாய் வெளி வந்த புகையும், சற்றுத் தெரிந்தன. வீடு திரும்பும் ஏதோ ஒரு மந்தையின் சத்தம் எங்கேயோ தொலையில் கேட்டது. இந்தச் சத்தம் ஆட்டைத் திடுக்கிடச் செய்தது. இருந்தாற்போல் திடீரென்று ஒரு பருந்து கீச்சுக் கீச் சென்று ஓலமிட்டு, வெகு வேகமாய்ப் பறந்து சென்றது. "ஊ, ஊ" என்று மலையில் ஒரு சத்தம் கேட்டது. அந்தச் சப்தம் பல தடவை ஒலித்தது. ஆடு பயந்து, உடல் சில்லிட்டது. 'அது ஓநாயின் ஊளை' என்று ஓநாயைப் பற்றி இப்பொழுதுதான் நினைக்கலாயிற்று. தூரத்தில் ஒரு சிறு குழல் சத்தம் கேட்டது. இது அருள் செய்த சத்தம்; ஊதாரிப் பிள்ளையை மீட்க, அவர் செய்த கடைசிப் பிரயத்தனம். "வா, வா" என்று அந்தக் குழல் ஒலிக்க, ஓநாயோ "ஊ, ஊ" எனக் கத்திற்று. மீண்டும் வீட்டுக்குப் போகலாம் என்று, முதலில் நினைத்தது ஆடு. ஆனால், கயிறு, முளை, தோட்டத்தின் மதிள் இவைகளை நினைத்து, பெருமூச்சு விட்டு, "ஆ! அந்த அடைபட்ட ஜீவியத்துக்கு நான் போகவே மாட்டேன். இங்கே செத்தாலும் சுயேச்சையாய்த் திரிவதேமேல்" என்று தீர்மானித்தது.

குழலின் சத்தம் மீண்டும் கேட்கவில்லை. தன் பின்னால் ஏதோ சல சல என்று ஒரு சத்தம் கேட்க, ஆடு திரும்பிப் பார்த்தது. செடிகளின் நிழலில், குறுகலான இரண்டு காதுகளையும் கோவைப்பழம் போல் செக்கச் செவேல் என்றிருந்த இரு கண்களையும் கொண்ட ஒரு பெரிய ஓநாயைக் கண்டது. தன் பின்னங் கால்களில் உட்கார்ந்து, தன் கண்களை உருட்டி உருட்டி, ஆட்டைப் பார்த்த வண்ணமிருந்தது அந்த ஓநாய். ஏற்கெனவே, இந்த ஆட்டைச் சுவை பார்த்துவிட்டதுபோல், தன் நாக்கைச் சப்பிச் சப்பிச் சுத்தம் செய்துகொண்டிருந்தது. எப்படியும் தன்னிடம் இது அகப்பட்டுக் கொண்டதென்றும் இதைத் தின்று விடுவோமென்றும் நம்பிக்கை கொண்ட ஓநாய், ஆட்டின்மேல் பாய அவசரப்படவில்லை. தன் பக்கம் இந்த ஆடு திரும்பிய போது, சிரித்து, "ஆ! ஆ! அருளின் ஆடே" என்று சொல்லி, தன் பெரிய சிவப்பு நாக்கை வெளியே நீட்டிக் காட்டிற்று. தன் அந்திய காலம் கிட்டியது என ஆடு கண்டது. பாபு என்ற ஆடு இரவெல்லாம் பராக்கிரமத்துடன் சண்டை செய்தும் பயனில்லாமல் போய்க் காலையில் ஓநாய்க்கு இரையான கதை ஞாபகம் வரவே, "ஏன் நாம் அவ்வாறு வீணில் சண்டையிட வேண்டும்? ஓநாய் உடனே நம்மைத் தின்று விடட்டுமே" என நினைத்தது. ஆனால், மறு நிமிஷம், "சீ! என்ன, நமக்குப் பலமில்லையா?" என்று இறுமாந்து தன் தலையைச் சாய்த்து, கொம்புகளை நீட்டிய வண்ணம் பாராக்

கொடுத்து, ஓநாயை எதிர்த்து நின்றது. ஓநாயைக் கொன்று விடுவோம் என்ற எண்ணம் அதன் மனதில் இல்லை. ஆடுகள் ஓநாய்களைக் கொல்ல முடியாது. ஆனால், பாபுவைப்போல் இரவெல்லாம், தானும் போர் செய்ய முடியுமா என்று பார்க்கத்தான் அவ்விதம் செய்தது.

பிறகு, அந்தத் துஷ்ட மிருகம், மெல்ல மெல்ல ஆட்டை அணுகியது. ஆடு தன் பின்னங் கால்களின்மேல் நின்று ஓநாய்மேல் பாய, இதன் இரு கொம்புகளும் அதைக் குத்தியது. பத்துத் தடவைக்குமேல் ஓநாய் பின் வாங்கி ஓடியது. அந்தச் சமயங்களில், தனக்குப் பலம் கொடுக்கும்படி, ஒரு வாய்ப் புல்லை ஆடு பிடுங்கித் தின்னும்.

சண்டை இவ்விதமாக இரவெல்லாம் நடந்தது. தன் பலமெல்லாங் கொண்டு சண்டையிட்டது ஆடு. எப்படி யாயினும், இந்த ஆடு தனக்குச் சொந்தமே என்று தெளிந்த ஓநாய், அவ்வளவு தீவிரமாய்ச் சண்டை யிடவில்லை. ஒரொரு சமயம், ஆடு வானத்தை அண்ணாந்து பார்த்து, பெருமூச்சு விட்டு, நட்சத்திரங்களைக் கண்டு, "ஆ! எப்படியாகிலும் விடியு மட்டும் இப்படி யிருந்தால் போதுமே" என்று நினைத்துக் கொள்ளும்.

ஒன்றன் பின் ஒன்றாக நட்சத்திரங்கள் மறைந்தன. ஆடு தன் தலையைச் சாய்த்துக் கொம்புகளால், ஓநாயைக் குத்தியது. ஓநாயோ சிறுகச்சிறுக ஆட்டின் சதையைத் தன் பற்களால் கிழித்தது.

கிழக்கில் அடிவானம் வெளுக்கத் தொடங்கியது. தூரத்தில் சேவல் கூவும் சத்தம் கேட்டது.

"ஆ, விடிந்தது!" என்று அலறி, ஆடு பலஞ் சோர்ந்து தரையில் விழுந்தது. அதன் அழகிய வெண்மையான ரோமம் முழுவதும் இரத்தத்தில் தோய்ந்திருந்தது. அது தரையில் விழுந்ததுதான் தாமதம்; ஓநாய் அதன் மேல் பாய்ந்து, அதைச் சின்ன பின்னமாகக் கிழித்துத் தின்று விட்டது. ஆடு மாண்டது; ஆனால், அதன் சுதந்தரம் நிலைத்துவிட்டது.

✲

முதல் சட்டசபை வெளியேற்றம்

இந்தியச் சட்டசபைகளில் முதல் முதலாக எப்போது வெளியேற்றம் நடந்தது தெரியுமா?

1901-ஆம் வருஷம், பம்பாய் சர்க்கார் நிலவரிச் சட்டத் திருத்த மசோதா ஒன்று கொண்டு வந்தார்கள். அது பலவகையிலும் பிற்போக்கானதாய் இருந்தது. அப்போது பம்பாய்ச் சட்டசபை நடவடிக்கைகளில் சர் பிரோஸ்ஷா மேத்தா பிரபலஸ்தராக விளங்கினர். அவர் மசோதவின் ஒரு பிரிவைக் கடுமையாக எதிர்த்து ஒரு திருத்தம் கொண்டுவந்தார். அதை பிரரேபித்து அவர் பேசுகையில், "எங்கள் திருத்தம் தோற்றுப்போகுமானல், நாங்கள் இங்கேயிருந்து பலனில்லை. சபையைவிட்டு வெளியேறி விடுவதே நலம்" என்ருர்.

திருத்தம் ஓட்டுக்கு விடப்பட்டது. சாதகமாக 9 ஓட்டுகளும் பாதகமாக 14 ஓட்டுகளும் கிடைத்தன. சர் மேத்தாவும் அவருடைய சகாக்களும் சபையை விட்டு வெளியேறிவிட்டார்கள்.

மர யானை

தி. ஜ. ர.

இதோ என் கண் முன்னே ஒரு தலையாட்டிப் பொம்மை படாப் பாடு பாடுகிறது. என் தம்பி குழந்தையின் உதை தாங்காமல் இந்தப் பொம்மைச் சோழியர், தத்தளிக்கிறார்; தவிக்கிறார்; ஆடுகிறார். இதே மாதிரிதான், அந்த மர யானையும் என் கையில் அந் நாட்களில் அவதிப்பட்டது. அது ஒரு மரப்பாச்சி யானை.

சின்ன வயதிலே, எனக்கு விளையாட்டு முழுவதும் அந்த மர யானையோடுதான். ஊர்க் குழந்தைகளெல்லாம் 'சகடை'கள் போட்ட மர யானைகளைத் தெருவிலே இழுத்துக்கொண்டு செல்லும். என் மர யானைக்கு அப்படிச் சகடைகள் ஒன்றும் கிடையாது. ஆகையால், தெருவிலே இழுபடும் தொந்தரவு அதற்கில்லை.

பாட்டி வீட்டிலே நான் இருந்தேன். சிற்றன்னைகள் பல பேர்: ஒவ்வொரு வயசு; ஒவ்வொரு விதம். கடைசியாக, என் வயதுக்கு இரண்டு மூன்று வருஷங்கள் மூத்த ஒருத்தி உண்டு. அவளுடன்தான், நான் ஓயாது விளையாடுவேன்; சண்டையிடுவேன். அன்பும் அவளிடம்தான் எனக்கு அதிகம். சின்னப் பிராயத்திலே என்னோடு விளையாடிய மர யானையைப்பற்றி நினைக்கும் இந்த நேரத்திலே, அவளைப் பற்றியும் நான் எப்படி நினையாதிருக்க முடியும்?

அந்தச் சின்னஞ் சிறு மரயானையால், எத்தனை பெரிய விபரீதம் நேர்கிறது! அன்பு நிறைந்த குடும்பம் அவந்தரை யாகிறது. சுகத்திலும் துக்கத்திலும், மனிதர்களைச் சேரவொட்டாமல், அது சிதைக்கிறது. என்றாலும், விதியின் விளையாட்டுக்கு, அது என்ன செய்யும்? யார்தான் என்ன செய்வார்கள்?

மர யானையை நான் சிங்காரிக்க ஆரம்பித்து விட்டால், அவள் புன்சிரிப்போடு என் அருகே வந்து உட்கார்ந்து விடுவாள். "சுவாமிக்கு உற்சவமா, தம்பி!—" என்று கேட்பாள். ஆமாம்; அந்த மர யானை, எப்போதுமே உற்சவ யானைதான். அதன் முதுகிலே, ஓர் ஆணி அடித்து வைத்திருந்தேன். திருப்பதி வேங்கடாஜலப் பெருமாள் மரப்பாச்சி ஒன்று, என்னிடமிருந்தது. யானைக் குட்டியின் முதுகிலடித்த ஆணியோடு அந்த மரப்பாச்சியைச் சேர்த்துக் கட்டுவேன். என் சிற்றன்னைகளின் ரவிக்கைச் சீட்டிகளில் மிஞ்சி மிகுந்த பச்சை, நீலம், சிவப்பு முதலிய பல வர்ணத் துண்டுத் துணிகளை, சுவாமிக்கு உடுத்துவேன். ஒரு சிறிய படிக மணி மாலையைக் கழுத்திலே போடுவேன். அலங்காரம் பூர்த்தியாகும். யானை வாகன மகோற்சவமும் நடக்கத் தொடங்கிவிடும். இல்லை; அதை மறந்துவிட்டேனே. யானை வாகன மகோற்சவம் மட்டுமல்ல; சேஷ வாகன மகோற்சவமும் ஏக காலத்தில் என் பெருமாளுக்கு நடக்கும். அதெப்படி என்று கேளுங்கள். எங்கள் பாட்டி வீட்டுக் கொல்லையில், ஓர் எலவ மரம் உண்டு. எலவங்காய் வெடித்து, பஞ்சும் ஓடும் கீழே ஏராளமாய் விழும். எலவங்காயை இரண்டாகப் பிளந்த பாதி ஓடு

கள், சில சமயம், சர்ப்பத்தின் தலை படம் விரித்த மாதிரி இருக்கும். அத்தகைய ஓடுகளில் ஒன்றைப் பொறுக்கி வந்து, என் சுவாமியின் தலைமீது கவிந்திருக்குமாறு கட்டிவிடுவேன். என் சுவாமியின் உற்சவாலங்கார சம்பூர்ணம் இதுதான்.

"ஏண்டா, தம்பீ! சுவாமிக்கு இன்னிக்கு, என்ன நைவேத்தியம்?" என்பாள் கமலம்—அவள் தான், என் சிற்றன்னை.

"ஏ பாட்டீ!........." என்று கூவிக் கொண்டே, உள்ளே ஓடுவேன்.

பாட்டிக்கு விஷயம் தெரியும். அதுவும் நான் செல்லப் பேரன். அவள் முதல் முதலாக வாரியெடுத்து, மார்பில் அணைத்துக் கொஞ்சிய பேரன் நான் தான்: மூத்த பெண்ணின் மகன். பேரனின் படுத்தல் அவளுக்குப் பேரின்பம். பேரனுக்கு ரஸஞ் சாதம்தான் பிடிக்கும்; உருக்காத விழுதுநெய்தான் வேண்டும்; கையிலே தங்கக் காப்பு அணிய வேண்டும்—இதெல்லாம் பாட்டியின் பாசமும் ஆசையும்.

'பாட்டீ!' என்று நான் அழைக்கும் குரலைக் கேட்டால், அவளுடைய உள்ளம் பூரிக்கும். என் குரலுக்காகவே அந்நேரம் வரையில் காத்திருந்தவளைப் போல, "என்னடா ராஜா! என்ன வேணும்?" என்று முகம் நிறைந்த புன்சிரிப்புடன், வாய் நிறையக் கேட்பாள்........ஐயோ! அவள் போய் விட்டாள். என்றும் மலர்ந்த அவள் முகம், அந்த இருமல் சிரிப்பு, அந்த அன்பினால் கரைந்த மேனி—என் கண்ணை விட்டு அகலவில்லை.

எனக்கு என்ன வேணும் என்று அவள் என்னைக் கேட்கவா வேண்டும்? அவளுக்கு அது நன்றாய்த் தெரியும். இருந்தாலும் என் வாயால் அதைக் கேட்பதிலே, பாட்டிக்கு ஒரு சந்தோஷம்.

"குடு, பாட்டீ! தின்ன ஏதாவது குடு!" என்று கத்துவேன். அவள் ஏதேனும் கொடுக்கத்தான் வேண்டும்; கொடுக்க எப்போதும் என்னவாவது வைத்துக் கொண்டும் இருப்பாள். என்றாலும், பேரனோடு கொஞ்சம் 'பேரம்' நடத்தியாக வேண்டும்!

"தின்னத்தானே? வா, சாதம் போடறேன்."

"சாதமா? சாதந்தான் தின்னறதோ? அது சாப்பிடறது; பசிக்குச் சாப்பிடறது. வேறே ஏதாவது குடு" என்றுசொல்லி, அவளது சேலைத் தலைப்பைப் பிடித்து இழுப்பேன்.

பாட்டிக்கு வாய் எல்லாம் பல்லாய்ப் போய்விடும்; அவ்வளவு சிரிப்பு: "அடே டே! புடவையை விடுடா! கிழிச்சுப்பிடாதே. தரேன்; தரேன். விட்டுடு."

"மாட்டேன். குடு; குடுத்தாத்தான் விடுவேன்."

அப்படியே என்னை இழுத்துக் கொண்டு உள்ளே போவாள். அங்கே போன பிறகாவது உடனே கொடுப்பாளா? அங்கேயும் கொஞ்சம் பேரம், தர்க்கம் எல்லாம் நடந்த பிறகுதான், ஏதாவது கொடுப்பாள்.

ஒரு நாள் கொஞ்சம் சீடையும் முறுக்கும், பாட்டி தந்தாள்.

என் சுவாமிக்கு அவைகளை, நைவேத்தியம் செய்தேன். பிறகு அவைகளை, நான் தின்ன ஆரம்பித்தேன்.

"எனக்குடா!" என்று தலையைச் சாய்த்து, கொஞ்சும் குரலில் கேட்டாள் கமலம்.

ஒரே ஒரு சீடையையும், மிகச் சின்னதான ஒரு முறுக்கு விள்ளலையும் அவளிடம் நீட்டினேன்.

"இத்துனூண்டுதானா? எனக்கு கொண்ணும் வாண்டாம்" என்று சொல்லி, அதை அவள் கீழே போட்டாள்.

"வாண்டாத போனா, போ" என்று, என் கையிலே அதையும் எடுத்துக் கொண்டேன்.

கமலம் இரண்டொரு நிமிஷம் முகத்தைச் சுளித்தபடி உட்கார்ந்திருந்தாள். பின்பு, "அடே தம்பீ! எனக்கு வாண்டாம்டா! சுவாமியை யானை தூக்கறதே; அதுக்குப் பசிக்காதா? சீடையும் முறுக்கும் அதுக்குக் குடுடா!" என்றாள்.

"அது தின்னாது."

"என் தின்னாது? நன்னாத் தின்னும்."

"சுவாமியே தின்னலியே. யானை எப்படித் தின்னும்?" என்று நான் கேட்டேன்.

"சுவாமி எல்லாருக்கும் பெரியவர்; எல்லாரையும் காப்பாத்தறவர். அவர் தின்னமாட்டார். பாட்டி நமக்கெல்லாம் பெரியவள். எதையும் நமக்குக் குடுத்து மிஞ்சினாத்தானே, அவள் சாப்பிடரா: அந்த மாதிரிதான் சுவாமியும். யானை அப்படி யில்லே; அது சாப்பிடும்" என்றாள் சிற்றன்னை.

"அப்படியானா, சரி" என்று சொல்லி, ஒரு முறுக்கு விள்ளலை யானையின் தும்பிக்கையில் வைத்துத் திணித்தேன்.

யானை என்ன செய்யும்?

என்ன செய்தது?

என் முறுக்கு விள்ளலைத் தின்று விட்டது; விழுங்கி விட்டது! முறுக்கு விள்ளல் மாயமாய் மறைந்தது!

நான் குதூகல மடைந்தேன். அடுத்த விள்ளல், அதற்கப்புறம் ஒரு சீடை, மீண்டும் ஒரு சீடை—இப்படியே கையிலிருந்த தின்பண்டத்தை எல்லாம் யானையிடம் நீட்டினேன். ஒன்றுக்குப் பின் ஒன்றாய் எல்லாம் மறைந்தது. நான் தின்னும் ஆசையையே மறந்துவிட்டேன்; கமலமும் தனக்குத்தரும்படி கேட்கவில்லை. எல்லாச் சீடையும் முறுக்கும் யானைக்கே நிவேதனமாகி விட்டது.

அன்று இப்படிச் சீடையும் முறுக்கும் தின்ன ஆரம்பித்த யானை, மறு நாள் தோசை, இட்டலி எல்லாம் தின்றது. பிறகு, ஒவ்வொரு நாளும் என்

பட்சணங்களில் முக்கால்வாசியை அது தின்று வந்தது. ஆனல், அந்த ஒவ்வொரு நாளும் கமலமும் கூடவே இருப்பாள். கமலம் இல்லாமல் எனக்கு விளையாட்டே கிடையாது.

கமலம் மகா புத்திசாலி. அவளுடைய சூட்சும அறிவை, ஊரெல்லாம் வியந்து கொண்டாடுவார்கள். அவளுடைய நிழல் நான். அவளுக்கு நான் மகன் முறையே என்ருலும், 'தம்பீ, தம்பீ' என்றே என்னை அவள் அழைப்பாள். அவள் மாத்திரமா, ஊர் முழுதுமே என்னைத் 'தம்பீ' என்றுதான் அழைப்பார்கள். பின்னல் சில வருஷங்களுக்குப் பின், என் பெயருக்கு ஒரு புரொமோஷன் கிடைத்தது, 'பெரிய தம்பீ' என்று. ஏனெனில், ஊரிலே வேருெரு 'தம்பி' தோன்றி விட்டான். அவன் 'சின்னத் தம்பி'. அவன் வேறு யாருமல்ல; கமலம் பெரியவளாய், மணமாகி, பெற்றெடுத்த குழந்தைதான். அவன் பிறப்பதற்கு முன்னே எத்தனையோ நடந்து விட்டது. உலகத்திலே எத்தனையோ மாறுதல்; ஊரிலே எத்தனையோ மாறுதல்; என்னிடமும் கமலத்திடமுமே எத்தனையோ மாறுதல்!—மாறுதலா? அவளை நான் எங்கே, எப்போது, எப்படிப் பார்த்தேன்!...

கமலம் பூச்சவுக்கங்கள் போடுவாள். அவள் போட்ட ஒரு சவுக்கத்திலே, நான் விளையாடுவேனே அந்த மர யானை மாதிரி, ஓர் உருவம் போட்டாள். அதைப் போட்டுப் பூர்த்திசெய்த உடனே என்னிடம் காட்டி, "தம்பீ! இதோ பார். இது என்னடா?" என்று கேட்டாள்.

"யானை — என் யானை!" என்று கத்திக்கொண்டே, அதைப் பிடித்து இழுத்தேன்.

"இந்தாடா! அதைப் பிச்சுப் பிடாதே" என்று, 'வெடுக்' கென்று, அதை அவள் என் கையினின்றும் பிடுங்கினுள். அட பகவானே! அது என்ன விபரீதத்தில் கொண்டு போய் விட்டது! இன்று நினைத்தால், அதெல்லாம் பெரிய மாயையாய்த் தோன்றுகிறது. மனித உள்ளம், ஒரு காட்டாறு; அதன் உணர்ச்சி வெள்ளம் அறிவுக் கரைகளை உடைத்துக் கொண்டு, பொங்கி எழும்போது, ஆண்டவனேகூட அதற்கு அணைபோட முடியாது என்றுதான் தோன்றுகிறது.

பூச்சவுக்கத்தை, கமலம் என் கையிலிருந்து பிடுங்கியபோது, என் தாய் அங்கே வந்தாள்.

"ஏண்டி, மூதேவி! உன் சவுக்கத்தைக் குழந்தை கடிச்சா முழுங்கிப்பிடுவன்! நாய் கவ்வற மாதிரி விழுந்து பிடுங்கறையே!" என்று சீறி, கமலத்தை, என் தாய் ஓர் அறை அறைந்தாள்.

உடனே, கமலம் அழுது கொண்டே, சவுக்கத்தை என் மூஞ்சியிலெறிந்து விட்டு, "இனிமே இந்தச் சனியன் பிடிச்ச வீட்டிலேயே நான் இருக்கப் போறதில்லே" என்று சொல்லி, வாசலிலே ஓடினுள்.

அன்று மத்தியானம் அவள் சாப்பிடவே, வரவில்லை. எங்கே தேடியும் அவளைக் காணவுமில்லை. தெருப் பூராவும், எல்லா வீட்டிலும் தேடியாயிற்று. எல்லாக் கிணறுகளையும் குட்டைகளையும் கலக்கியாயிற்று. அவள் அகப்படவில்லை. அந்தக் கோபத்திலே, என் தாயைப் பாட்டி ஏதோ திட்டினுள்.

"என்னவோ, என் வாய் அடைத்துக் கிடக்காதோ. கூடப்

பிறந்தது தானேன்னு நினேச்சு ஒரு வார்த்தெ சொல்லிப்புட்டேன்; ஒரு தட்டுத் தட்டிப் பிட்டேன். அது இத்தனெ அனர்த்தமாப் போச்சே!'' என்று கண்ணீர் விட்ட என் தாய், சாப்பிடவில்லை.

பாட்டி பெருமூச்செறிந்தாள். அவளும் உண்ணவில்லை. ஆளுக்கு ஆள் எல்லாரும் என்னவோ முணு முணுத்துக் கொண்டேயிருந்தார்கள்.

"நீ வாடா ராஜா! நீ என் சாப்பிடா திருக்கே?'' என்று, இறங்கிய குரலில் என்னை அழைத்தாள் பாட்டி.

"இதுனலேதான் இத்தனெயும் வந்துது! இதுக்கு என்ன சோறு இந்த வீட்டிலே? கிடக்கட்டும் பட்டினி'' என்று, என்னை ஓர் அறை அறைந்தாள் தாய். நான் சுருண்டு விழுந்து, அப்படியே தூங்கி விட்டேன்.

மாலையில்தான் நான் விழித்தேன்.

மாக்கல் தீபம், சுவாமி படத்துக்கு அருகே சுவரில் மாட்டியிருந்த ஒரு மரத்தட்டில் மினுக்கு மினுக்கென்று எரிந்து கொண்டிருந்தது. அந்தத் தீப நிழலிலே, முனகலும் பெருமூச்சுமாய், என் தாய் உட்கார்ந்திருக்கிறுள். அவளருகே நின்ற வண்ணம், "எண்டி கோமு! இப்ப என்னடி வந்துடுத்து? எழுந்திருடி. நீயும் பட்டினி; குழந்தெயும் பட்டினி. யாரு என்ன அப்படிப் பெரிய குத்தம் பண்ணிப்பிட்டா? ரெண்டும் சிறிசுகள். என்னமோ அப்படித்தான் இருக்கும். சாப்பிடடியம்மா'' என்று பாட்டி கெஞ்சிக் கொண்டிருந்தாள்.

மற்ருெரு பக்கத்தில், கூடத்திலிருந்து முற்றத்து நிலவிலே, தன்னந்தனியாய் அணில் குஞ்சு போல், குதித்துக் குதித்து விளையாடிக் கொண்டிருந்தாள் கமலம். அவளை எங்கேயோ ஊருக்கு வெளியே தோப்பில் கண்டு பிடித்து, வீட்டுக்கு அழைத்து வந்திருக்கிறுர்கள்.

நான் கண்ணைக் கசக்கிக் கொண்டு எழுந்து உட்கார்ந்ததைக் கண்ட கமலம், "தம்பீ! ஓடியா. நிலாப் பூச்சி, நிழல் பூச்சி ஆடுவோம்'' என்று அழைத்தாள்.

நானும் சிரித்துக் கொண்டே எழுந்து, அவளிடம் ஓட முயன்றேன்.

முடங்கிக் கிடந்த சர்ப்பத்தைக் குத்திவிட்டதுபோல், சீறி எழுந்தாள் என் தாய். "ஏ புத்தியில்லாப் பிணமே! வா. இங்கே! அந்தப் பெரிய மனுஷியோடே உனக்கென்னடா விளையாட்டு?'' என்று சொல்லி, ஓடி வந்து, என் கையைப் பிடித்து இழுத்து, ஒரு மூலையில் சுவரருகே என்னை உட்கார்த்தி விட்டாள்.

"அடி கோமு! இவ்வளவுதான் தெரியுமா உனக்கு? இன்னும் உண்டோ?'' என்று வருத்தத்தோடு கேட்டாள் பாட்டி.

நயந்தும், கோபித்தும், பரிந்தும் பலவிதமாய் என் தாயைச் சமாதானம் செய்து பார்த்தாள் பாட்டி. தாய் ஒன்றுக்கும் மசியவில்லை.

அன்றிரவு என் தாய் பட்டினி; பாட்டியும் பட்டினிதான். வீடே அழுது வழிந்தது.

மறுநாள் என் தாய் என்னை அழைத்துக் கொண்டு, புக்ககத்துக்குப் புறப்பட்டு விட்டாள்.

இந்த வருத்தம், பல வருஷங்கள் வரை, நீடித்தது; தீரா மனஸ்

தாபமாய் வளர்ந்தது. பாட்டி வீட்டிலே எத்தனையோ வாழ்வு தாழ்வுகள் ஏற்பட்டன. ஒன்றுக்கும் நாங்கள் போகவில்லை.

கமலத்துக்கு எங்கேயோ கல்யாணம் நடந்தது; அதற்கு நானோ, தாயோ, வேறு யாருமோ போகவில்லை. கமலம், கணவன் வீடு சென்றாள்; குழந்தை பிறந்தது—எல்லாம் கேள்விப்பட்டோம். ஒரு வைபவத்தையும், எங்கள் கண்ணாரக் காண, நாங்கள் கொடுத்து வைக்கவில்லை.

ஆனால், நான் மாத்திரம் அடிக்கடி, கமலத்தைப்பற்றி நினைப்பேன்; அப்போதெல்லாம் அந்தப் பின்னல் சவுக்கமும் மர யானையும் ஞாபகத்துக்கு வரும். என்ன ஆச்சர்யமான யானை! எத்தனை பட்சணங்களைத் தின்ற யானை! உண்மையிலே யானையா தின்றது! என்றால், அதை நம்ப முடியவில்லை. வயசாகிவிட்டது; அனுபவமும் கல்வியும் பெற்றிருக்கிறேன். ஓ! ஒரு மரப் பொம்மை யானை, தின்பண்டங்களையெல்லாம் எங்கேயாவது தின்றிருக்க முடியுமா? இனியும் அதை நான் நம்ப இயலுமா? இல்லவே யில்லை; யானை தின்னவே யில்லை. அது நிச்சயம். பின்னே?

அந்த யானையோடு நானும் கமலமும் விளையாடிய காட்சியைத் தினம் தினம் ஞாபகத்துக்குக் கொண்டு வருவேன். யானை எப்படி நிற்கும்? நான் எப்படி உட்கார்ந்திருப்பேன்? கமலம் எப்படி அமர்ந்திருப்பாள்? இதையெல்லாம் யோசித்து யோசித்துப் பார்ப்பேன். ஏன்? பட்சணங்களை யானை தின்றிருக்க முடியாது; ஆயினும், அவை மாயமாய் மறைந்து போயின; கமலம் தான் எப்படியோ கைச்சாதுர்யமாய்ப் பட்சணங்களைக் கவர்ந்திருக்கிறாள், வேறு வழியேயில்லை. ஆனால், அது எப்படி? என்றால், அதை உருவகிக்கவோ, கற்பனை செய்யவோ இயலவேயில்லை. வெறும் யூகம்தான்.

இத்தனை வருஷங்கள் கழித்து, அந்தக் காட்சியை நான் நினைக்கும் பொழுதெல்லாம், எனக்குத் துளியும் கோபம் வருவதில்லை; நகைப்புத்தான் வரும். மனதிலே என்னை யறியாத ஒரு களிப்பும் உண்டாகும். குறும்புக்காரக் கமலத்தின் சிரித்த முகமும் என் கண் முன்னே வந்து நிற்கும். பட்சணங்களை என்னிடமிருந்து பறிப்பதிலே அவளுக்கு ஆனந்தமில்லை. எத்தனையோ தடவை, தன் பங்கு பட்சணங்களையும், வேறு பண்டங்களையு மெல்லாம், அவள் எனக்கு அன்போடு கொடுத் திருக்கிறாள். என்னை ஏமாற்றுவதிலேதான் அவளுக்கு ஆனந்தம். ஏமாற்றப்படுவதிலே நானும்தான் அன்று ஆனந்தம் பெற்றேன். இப்பேர்ப்பட்ட கமலத்தைப் பார்த்து, எத்தனை வருஷ மாயிற்று! அவள்தான் பாவம் பண்ணினாள்; அன்புக் களஞ்சியமான பாட்டியைக் கூடப் பார்க்க முடியவில்லையே! எத்தனையோ நாள் ஏங்கினேன்; பெருமூச்செறிந்தேன். பல நாள் கனவிலே, நான் மீண்டும் பாலகனாகி, பாட்டியுடன் கொஞ்சி, கமலத்தோடு விளையாடி, யானைக்குத் தின் பண்டமளித்ததுதான், எனக்குக் கிடைத்த ஆறுதல். சில சமயம் கமலத்தின் குழந்தையைக் கூடக் கனவிலே கண்டிருக்கிறேன்; அப்போதும், நான் சிறுவனாய்த்தான் இருப்பேன்.

"அம்மா! பாட்டியைப் பார்க்க எனக்கு ஆசையா யிருக்கே; உனக்கு ஆசையில்லையா?" என்று ஒன்றிரு முறை தாயைக் கேட்டேன்.

"எனக்கு அம்மாவும் கிடையாது; தங்கையும் கிடையாது. நீ வேணுல் போய் உறவு கொண்டாடிப்புட்டு வா" என்று சலித்துக்கொள்வாள் தாய். அவள் மகா திடசித்த முடையவள்; வீம்பு மிகுந்தவள்; நெஞ்சழுத்தம் நிறைந்தவள். அவளுக்கு இல்லாத உறவு எனக்கேது?

ஒரு சமயம் என் தாய்க்கு உடம்பு அசௌக்கியம் ஏற்பட்டது.

"சகாயத்துக்கு, உன் அம்மாவை வரவழைக்கட்டுமா?" என்று அவளைக் கேட்டார் என் தந்தை.

அவருக்கும் அதே பதில்தான்: "எனக்கு அம்மாவும் கிடையாது; தங்கையும் கிடையாது. உங்கள் அம்மாதான் என் அம்மா. உங்கள் தங்கை, தமக்கைகள்தான் எனக்கும் தங்கை தமக்கைகள். அவர்கள் செய்யும் ஒத்தாசை எனக்குப் போதும்."

அத்தைமாரும் தந்தையைப் பெற்ற பாட்டியுமே பக்கத்துணை. ஆயினும், தாயின் நோய் சற்றுக் கடுமைப் பட்டது. எல்லாரும் பயந்து விட்டார்கள். என் தாயைப் பெற்ற பாட்டிக்கு, யாருக்கும் தெரியாமல், என் தகப்பனர் ஒரு கடிதம் எழுதிப் போட்டார்.

சில தினங்களில் பாட்டியும், சிற்றன்னைகள் மூவரும் ஓடி வந்தார்கள். கமலம் தன் குழந்தையோடு வந்தாள். என் மனம் துள்ளிக் குதித்தது. மட்டற்ற மகிழ்ச்சியால், என் உள்ளம் குதூகலித்தது. அதிலேதான் என்ன வேதனை!

படுக்கையிலிருந்த தாயிடம் ஓடோடிச் சென்றேன். "அம்மா! அம்மா! கமலம் வந்திருக்கா. அவ குழந்தெ வந்திருக்கு. பாட்டி வந்திருக்கா. எல்லாரும் வந்திருக்கா" என்று கண்ணீரோடு கூச்சலிட்டுக் கொண்டு சொன்னேன்.

தாய் தலை நிமிர்ந்தாள். அந்தத் தள்ளாத நிலையிலும், அவள் கண்களில் ஆத்திரம் ஜொலித்தது. கம்பீரமான குரலில், "அவாள்ளாம் யாரு? அவாளெல்லாம் எனக்குத் தெரியாது. யாரும் இங்கே வரவாண்டாம், என்னெக் காப்பாத்த வாண்டாம்னு சொல்லு" என்று துடுக்கோடு சொன்னுள்.

பெண்ணைத் தேடிவந்த பாட்டியின் காதிலே அது விழுந்தது. அவள் அதைச் சட்டை செய்யாமல் உள்ளே வந்தாள். கமலம் மட்டில் இந்தக் கர்ண கடூரமான சொல்லைக் கேட்டு, உள்ளே வரப் பிடிக்காமல், கூடத்திலேயே நின்று விட்டாள். நான் அவளிடம் திரும்பி ஓடினேன். அவளுடைய குழந்தையோடு கொஞ்சினேன்.

"சின்னம்மா! இதும் பேர் என்ன?"

"வேங்கடேசன்."

"ஓ! திருப்பதிப் பெருமாள் பேரா?"

"ஆமாம். உன் மரப்பாச்சிப் பெருமாள் இல்லே; அதும் பேரு. ஆனு, கண்ணன்னுதான் கூப்பிடறோம்."

"சின்னம்மா! உனக்கு அது ஞாபக மிருக்கோ? நம்ப விளையாட்டு ஞாபகமிருக்கோ? யானை ஞாபக மிருக்கோ? அது சீடெ, முறுக்கு, பட்சண மெல்லாம் தின்னுமே; அது ஞாபக மிருக்கோ?" என்று 'தடதட' என்று கேட்டேன்.

மேகம் சூழ்ந்த வானத்திலே, சிறிது இடைவெளி தோன்றி

ஜொலித்த சூரியனைப் போல், வாடிய அவள் முகந்திலே, ஒரு பிரகாசம் தோன்றியது. அவள் 'களுக்' கென்று சிரித்தாள். ஆனால், ஒன்றும் பேசவில்லை.

"சின்னம்மா! நிஜமாய்ச் சொல்லு. நீதானே என்னெ ஏமாத்தினே? யானே சாப்பிடவே யில்லையே?" என்றேன்.

அவள் மீண்டும் சிரித்தாள். பதில் கிடையாது.

இதற்குள் பாட்டி உள்ளே யிருந்து, 'கண்ணீரும் கம் பலை'யுமாய், "எனக்குக் குடுத்து வெச்சது அவ்வளவுதான். என் னெக் கண்டா அவளுக்கு வேப் பங் காயாக் கசந்து போச்சு. பெத்த மனம் கேக்கறதோ! எப் பிடியாவது அவ மகாராஜியா யிருந்தாப் போரும். நாம்ப போவோம், வாம்மா கமலம். அவ முகம் குடுத்துப் பேசாத போனு, அப்புறம் இங்கே நமக்கு என்ன இருக்கு?" என்று வருந் திக் கொண்டே வெளியே வந் தாள். என்னைப் பார்த்ததும், அவளுடைய அழுகை அதிக மாயிற்று. என் கண்ணும் கலங்கி விட்டது. "உன்னெக் கொண் டாடக்கூட எனக்குப் பாத்திய மில்லாதெ போயிடுத்துடா, ராஜா" என்று சொல்லி, அவள் என் முகத்தைத் தடவி, முத்த மிட்டுக் கொண்டாள்.

அப்புறம், பாட்டியும் சிற் றன்னைமாரும் அதிக நேரம் தாம திக்க வில்லை. அவரவர் ஊருக் குப் போய்விட்டார்கள்.

தெய்வ கருணையால் ஒன் றும் அசம்பாவிதம் நேரவில்லை. இந்தப் பூட்டுக்கு என் தாய் பிழைத்து விட்டாள். ஆனல், அவள் உடம்பு மிகவும் தளர்ந்தி ருந்தது. மனதிலும் நிம்மதியில்லை. மனம் சலித்துக் கொண்டே, பல வேலைகளில் முனகுவாள். "அம்மா!... தங்கை!... தமக்கை!... உறவு!...." என்று முணு முணுப் பாள்.

பாட்டி முதலியவர்கள் வந்து போன விஷயத்தை எப்பொழு தாவது அவளிடம் பேச்செடுத் தால், அவளுக்கு ஏதோ மன வேதனை உண்டாகும். "ஐயோ! என் ரகு என்னைத் தொல்லைப் படுத்தறே... அவ மகா உத் தமி... கமலம்... அவா எல்லா ருமே நல்லவா... என் தலை யெழுத்து... எனக்குப் பாக்கிய மில்லே" என்று பாதி வார்த்தை களை விழுங்கிக்கொண்டே ஏதோ சொல்லி, நகர்ந்து விடுவாள். ஆனல், அவளுடைய வீம்பு மட்டி லும் குறையவில்லை; உறவு கொண் டாட, அவள் இஷ்டப் படவும் இல்லை.

திடீரென்று ஒருநாள் ஒரு கடி தம் வந்தது. பாட்டி வீட்டிலே, கமலம் வந்திருக்கிருள்; சாகக் கிடக்கிருள்—இது தான் விஷயம்.

அம்மா மனசு மாறிவிட்டது. உடனே போகவேண்டுமென்று அவள் ஆத்திரப் பட்டாள். இறக்கை யிருந்தால், அவள் நிச் சயமாய்ப் பறந்தோடி யிருப் பாள்; அவ்வளவு பரபரப்பு அவ ளிடம் காணப்பட்டது.

அப்பா, அம்மா, நான் மூவரும் பிரயாணம் ஆனோம். வழியி லெல்லாம், என் தாய், "ஐயோ! வீட்டுக்கு வந்தவளை வான்னு அழைக்கலெயே. முகத்தெக் கூடப் பார்க்காமே விரட்டினே னே. முகமுழியாவது கிடைக் கிறதோ இல்லியோ!" என்றெல் லாம் கதறிக்கொண்டே வந் தாள்.

பாட்டி வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தோம். கமலத்தின் நிலைமை மோசமாய்த் தான் இருந்தது. என் தாயும் பாட்டியும் ஒருவரை யொருவர் கண்டதும், வாய் பேசாமல் கண்ணீர் விட்டார்கள். இன்னும் என்னைச் சிறு குழந்தை போலவே பாவித்த பாட்டி, வாரி யெடுத்துத் தன் மடிமீது உட்கார்த்திக் கொண்டாள்.

கமலத்தின் படுக்கையருகே நாங்கள் சென்ற போது, "கமலம், கமலப்! கண்ணை முழி. யார் வந்திருக்கா, பாரு. ரகுடி, ரகு!" என்ருள் பாட்டி.

கமலம் உடம்பை வளைத்துக் கொண்டு, சிரமப்பட்டுத் திரும்பி, கண்ணை விழித்து, புன்சிரிப்புச் சிரித்தாள். வாயைக் குவித்து ஏதோ பேச முயன்றவள், முடியாமல் மீண்டும் மூடிக்கொண்டாள். என் தாய், தன் முகத்தை மூடிக்கொண்டு, சோக உருவாய் நின்ருள்.

அப்போது, எனக்குப் பழைய காட்சி நினைவுக்கு வந்தது. கமலம் விழித்திருந்தால், அன்று தாய் சொன்னது போல் தான் இன்று கமலமும் சொல்லியிருப்பாளோ? இல்லை. மாலையில் கமலம் விழிக்கத்தான் விழித்தாள். என் தாயைக் கண்டதும், "வா, அக்கா. எங்கே கையை நீட்டு" என்று அன்போடு அழைத்தாள். கண்ணீரோடு நீட்டிய என் தாயின் கையிலே, கமலம் தன் கையை வைத்து, அழுத்தினுள்.

"கமலம்! கமலம்!" என்று தீனக்குரலில் உச்சரித்து, பெருமூச்சு விட்டாள் என் தாய்.

கமலத்தின் உடம்பு தேறவில்லை. இரண்டொரு நாள் இப்படியே கழிந்தது. கூடத்திலே நான் உட்கார்ந்திருந்தேன். பாட்டி எனக்கு ஏதோ பலகாரம் கொணர்ந்து வைத்தாள். யார் என்ன சாகக் கிடந்தா லென்ன? என்ன விபரீதம் நடந்தா லென்ன? நம் பாழும் வயிறு கேட்கிறதா? தின்று தானே தொலைக்க வேண்டியிருக்கிறது? நான் பலகாரத்தை விண்டு துளித் துளியாய் உண்ண ஆரம்பித்தேன். வேண்டா வெறுப்புடனும் வேதனையுடனும்தான் தின்றேன். கமலம் பிழைக்க மாட்டாளா? அந்தப் பழைய கால விளையாட்டு, மீண்டும் என்ருவது திரும்புமா? இப்படி என்னென்னவோ அர்த்தமில்லாத எண்ணங்கள்.

இச்சமயம் என் பக்கத்தில் சுவர் அருகே, கமலத்தின் குழந்தை, அந்த மர யானையை வைத்து விளையாடிக் கொண்டிருக்கக் கண்டேன். பக்கத்திலே யாருமில்லை. பாட்டியும் உள்ளே போய்விட்டாள்.

"கண்ணு! இங்கே கொண்டா அதை" என்றேன்.

குழந்தை அந்த யானையை என்னருகே கொண்டு வந்தான். யானையைத் தடவிக் கொடுத்தேன். அதன் முதுகிலே நான் அறைந்திருந்த ஆணியை யாரோ பிடுங்கி விட்டார்கள். ஆனல், அந்த வடு மாத்திரம் அப்படியே இருந்தது. யானை ஏதோ வேதனை தாங்காமல் அழுவது போல் தோன்றியது.

திடீரென்று என்னை யறியாமலே, என் கை ஒரு தோசை விள்ளலை, அந்த யானையின் வாயருகே கொண்டுபோய் நீட்டியது. என் அறிவை மீறிய பழக்கத்தின் காரியம். மறுவிநாடி, யாராவது பார்க்கிருர்களோ என்ற வெட்கத்தால் நாற்புறமும் நோக்கிக் கொண்டு, கையைப் பின்னல் இழுத்தேன்.

என்ன அதிசயம்! கையிலே தோசை விள்ளலைக் காணோம். என்னைத் தூக்கிவாரிப் போட்டது. ஏதோ ஒரு பயங்கர சம்பவம் நிகழ்ந்ததுபோல், நடுங்கிய வண்ணம், யானையை வெறித்துப் பார்த்தேன்.

பக்கத்திலே, சிறுவன் நகைத்துக் கொண்டு, "எனக்குத் தானே, அண்ணு, தந்தே இது?" என்று சொல்லிய வண்ணம், அந்தத் தோசை விள்ளலைத் தின்று கொண்டிருந்தான்.

எனக்குச் சிரிப்பு வந்தது. என்ன மூடத்தனம்!

"ஆமாம்; உனக்குத்தான், கண்ணு! சாப்பிடு."

இப்படி நான் சொல்லிக் கொண்டே யிருக்கையில், "அடே ரகு! ஓடியாடா. கொழந்தையெக் கொண்டா. அவ கூப்பிடராடா" என்று உள்ளே யிருந்து, அம்மா அழைத்தாள்.

குழந்தையைத் தூக்கிக் கொண்டு உள்ளே சென்றேன். கமலம் படுத்த படுக்கையாய், நினைவு குன்றுமல், ஈனக்குரலில், "கண்ணு! ரகு! எங்கே? அவன்கள் வரல்லையா இன்னும்?" என்று முனகிக் கொண்டிருந்தாள்.

"இதோ கண்ணன்...இதோ ரகு இருக்கான், கமலம்."

இருவரும் கமலத்தின் பக்கத்தில் போய் நின்றோம்.

குழந்தையைக் கமலம் உச்சி முதல் கால் வரையில் ஒரு முறை தடவிக் கொடுத்தாள். தலை நிமிர்ந்து முத்தமிட முடியாததால், வாயை மட்டும் குவித்து, முத்தமிடும் பாவனை செய்தாள்.

பிறகு, "கிட்ட வா, தம்பீ" என்று என்னை அழைத்தாள். அவள் கண்கள் பள பளத்தன. முகத்திலே புன்சிரிப்பு மாறவில்லை.

மூச்சுத் திணறிக்கொண்டே, மலினமடைந்த குரலில், "தம்பீ! சமத்தா யிரு. நீ அப்ப கேட்டயே, யானெ பட்சணம் சாப்பிட்ட தான்னு.எண்டா அசடே, அது எங்கெயாவது சாப்பிடுமா? —நான்தாண்டா உன்னெ ஏமாத்தினேன்—அதெ மறந்துடு; மனசிலே வெச்சுக்காதே—வெச்சுக்கலேன்னு சொல்லு—அந்தச் சவுக்கம் இருக்குப் பாரு; அதெ..." என்றாள். அதற்குமேல் அவளால் பேசமுடியவில்லை. பிறகு, அவள் பேசவே யில்லை. வீடு கண்ணீர் வெள்ளத்தில் அமிழ்ந்தது.

✲

தலைகீழ் விளம்பரங்கள்!

1. ஆயுதங்கள் செய்யும் கருமானுக்கு, புத்திசாலித்தனமுள்ள ஓர் எஜமான் தேவை; சென்ற பத்து வருஷங்களில் தம்மிடம் வேலைபார்த்த தொழிலாளர்களின் பெயர்களை, தமது யோக்கியதாம்சத்துக்குச் சாட்சியாக, அவர் நமக்குத் தெரிவிக்கவேண்டும்.

— நெவார்க் ஈவினிங் நியூஸ்

2. பண்ணைக்கு ஆள் தேவை: வேலை ஒன்றும் கிடையாது. தெற்கு வாசலில் பூங்கொடிகளின் குளிர்ந்த நிழலிலே சுகமான சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருக்கவேண்டும். சாப்பாட்டு நேரத்தில், யாரும் கைலாகு கொடுத்து அழைத்துவரவேண்டிய தேவையில்லாமல், தாமாக வரக்கூடியவராய் இருக்கவேண்டும்.

— கன்ஸாஸ் ஸிட்டி டைம்ஸ்

ENGLISH PUBLICATIONS

ANGRY DUST

Stories which picturize incidents and project characters; full of sincerity and delicacy.
By Manjeri S. Isvaran. Rs. 2-0-0

FIVE PLAYS

Social and political plays with pith and purpose.
By Harindranath Chattopadhyaya
Rs. 1-8-0

STRANGE JOURNEY

Poems, Narrative and Lyricate.
By Harindranath Chattopadhyaya
Rs. 2-8-0

LYRIC FESTOONS

VERSE LIBRE; life's epigrammes in radium.
By V. R. M. Chettiar. Re. 1-0-0

TALK FOR FOOD

A farce in frustration; topical with provoking characterization.
By Gopal & Abdulla. As. 0-10-0

ESSENTIALS OF GANDHISM

The kernel of Gandhian philosophy revealed in simple, precise prose.
By V. Swaminatha Sarma.
As. 0-12-0

POSTAGE EXTRA

SHAKTI KARYALAYAM,
PUBLISHERS & BOOK SELLERS
MADRAS - - MADURA

Sole Agency for Ceylon:

ARUNA TRADERS,
BOOK SELLERS
KANDY : : (CEYLON)

வெளிவருகிறது!

இந்திய மறுமலர்ச்சி

ஸ்ரீ அரவிந்தர்
எழுதியது

●

உண்மையான தேசியம் பரவுவதற்கும், உலகம் உய்வதற்கான வழிகளையும் ஸ்ரீ அரவிந்தர் எழுதியதை ஸ்ரீ ப. கோதண்டராமன் தமிழாக்கியிருக்கிறார்.

●

தமிழ் நிலயம்
புதுக்கோட்டை
(சமஸ்தானம்)

புதிய புத்தகங்கள்

1. நிழலருமை வெயிலிலே

(எழுதியவர்: மு. அருணாசலம்)

அன்பர் அருணாசலம், இலக்கியத்தைக் கவிஞன் கண் கொண்டு பார்த்து ஆனந்திப்பதில் வல்லவர். அவர் எழுதிய கட்டுரைகள், ஏற்கெனவே இரண்டு தொகுதிகளாக வெளிவந்து தமிழரின் பாராட்டுதலைப் பெற்றிருக்கின்றன. இத் தொகுதியில், பொழுதுபோக்காகப் படிக்கத்தக்க இனிய கட்டுரைகள் அடங்கியிருக்கின்றன.

விலை ரூ. 1-4-0

2. ஸ்ரீ அரவிந்தர்

(எழுதியவர்: ப. கோதண்டராமன்)

இதில், அரவிந்தருடைய வாழ்க்கை வரலாறு, அவரது யோகமுறை, அவருடைய முயற்சிகளால் உலகத்துக்கு உண்டாகும் பயன் முதலிய விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. முதல் இரண்டு பதிப்புகள் செலவாகி, இப்போது மூன்றாவது பதிப்பு வெளிவருகிறது.

விலை ரூ. 2-0-0

3. மாளவிகா

(எழுதியவர்: சரோஜா ராமமூர்த்தி)

கண்ணிழந்த ஒரு துர்ப்பாக்கியப் பெண்ணின் வாழ்க்கைச் சித்திரம். தமிழ்நாட்டின் கலைக்களஞ்சியமாய் விளங்கிய புகார் நகர் மறைந்த சரித்திரத்தை அடிப்படையாக வைத்து எழுதிய இனிய காதல் கதை.

விலை ரூ. 1—0—0

4. அன்னை கஸ்தூரி

(எழுதியவர்: எம். எல். சபரிராஜன்)

அன்னை கஸ்தூரி ஹிந்துப் பெண்களுக்கு ஒரு சிறந்த உதாரணம். பண்டைய கற்பரசிகளிலே ஒருவராக வைத்து வணங்கத்தக்க உத்தமி. அவருடைய வாழ்க்கை மிக்க உருக்கமானது. அதைச் சுருக்கமாக விளக்குகிறது இச் சிறு புத்தகம். இது மின்னொளியின் நான்காவது.

விலை அணா 0-8-0

எல்லாவற்றிற்கும் தபால் செலவு தனி

சக்தி காரியாலயம்

சென்னை :: மதுரை

அவல்

மு. அருணாசலம்

அழுகிற குழந்தையை எளிதிலே ஓயப்படுத்துகின்ற ஓர் அரிய திறமை பெண்களிடத்தில் மிகுதியாகக் காணப்படுகிறது. என்னதான் அன்போடு குழந்தையிடம் பழகுபவர்களாயிருந்தாலும், ஆடவர்களுக்குக் குழந்தையை அழவிடத் தெரியுமேயொழிய, அழுகின்ற குழந்தையைச் சமாதானம் பண்ணத் தெரியாது.

அழுகிற குழந்தையை ஓயப்படுத்தி ஓயப்படுத்திப் பழக்கப்பட்ட தாய்மாருக்கு, அழாத குழந்தையையும் கற்பனையிலே அழப்பண்ணி அதன் அழுகையைப் பிறகு நிறுத்தச் செய்வதிலே தனியான ஒரு மகிழ்ச்சியிருக்கக் காண்கிறோம். கற்பனையிலே குழந்தை அழுகிறதென்றால், அதற்கான சம்பவங்களும் கற்பனைச் சம்பவங்களாகவே எழுகின்றன.

தாலாட்டுப் பாடி வருகின்ற தாயானவள், தன் கற்பனைக் குழந்தையைக் கொஞ்சம் அழவிட்டுப் பார்க்கிறாள். தொட்டிலிலே படுத்து, உறக்கங் கொள்ளாமல் அழுது அடம்பண்ணுகின்ற சிறு புதல்வனைக் கொஞ்சம் வளர்ந்தவனாக, வயலுக்கும் களத்துக்கும் சென்று தீராத விளையாட்டுக்களைச் செய்யும் சிறு பையனாகக் கற்பனை செய்து பார்க்கிறாள். பையனுக்கு எத்தனையோ பொருள்களிலே விருப்பம். முக்கியமாய், தின்பண்டங்களிலே, தினமொருவிதமாக அவனுடைய விருப்பம் மாறிக்கொண்டிருக்கிறது.

ஒரு நாள் அவனுக்கு அவல் தின்ன வேண்டுமென்று ஆசையுண்டாகிறதாம். (எல்லாம் தாயின் கற்பனையில்தான்.) அவலிடித்துக் கொடுக்கும்படி தாயைக் கேட்கிறான். தாய்க்கு வேறு வேலைத் தொந்தரவு காரணமோ, அல்லது சோம்பேறித்தனமோ—உடனே அவலிடித்துத் தர இயலவில்லை. வந்து கேட்ட மகனை, மாமாவைப் போய்க் கேள் என்று (பாதி வேடிக்கையாகவே) சொல்லி அனுப்பிவிடுகிறாள்.

மாமா, அதாவது அம்மான் என்றாலே, தாயின் பிறந்த வீட்டார் என்றுதான் பொருள். பிறந்தகத்தைப் பற்றித் தாய்மார் எல்லோருமே பெருமை பாராட்டுவதுதான் வழக்கம். பெண்கள் தங்களுக்கு வேண்டிய பொருள் எதையும் தங்கள் தாயைக் கேட்டுப் பெற்றுக் கொள்வது எளிதா

அம்மான் வீடு சென்று, அவல் பெற்றுத் திரும்பி வருகிறது தன் குழந்தை : இப்படிக் கற்பனை செய்கிறாள் ஒரு தாய். அதற்குள்ளே தான் என்னென்ன நாட்கம் நடந்து விடுகிறது; இந்த அற்புத சித்திரத்தைத் தீட்டுகிறது சொல் நயமும் உணர்ச்சிச் செறிவும் நிறைந்த ஒரு தாலாட்டுப் பாடல்.

பிருக்கிறது. எனவே, அவர்களுக் குத் தாய் வீடு என்ற மாத்திரத் திலே, மனத்திலே எவ்வளவோ மகிழ்ச்சியும் உல்லாசமும் நிறை கிறது. தாய் வீட்டுப் பெருமை யைச் சொல்லிச் சொல்லி அவர் களால் எல்லை காணவும் முடிவ தில்லை. இதில் தவறு ஒன்றும் இல்லை; தாய் வீட்டுப் பெருமை யைக்கொண்டாடுவதுஎன்றாலே, கணவன் வீட்டுக்குப் பெருமை கிடையாது என்று கருதிவிட்ட தாகப் பொருள்படாது.

தாலாட்டுப் பாடி வருகின்ற தாயானவள் தன் சிறு புதல்வனை மாமாவீட்டில் போய் அவல்பெற் றுக் கொள்ளும்படி சொன்ன ளல்லவா? மேலே அவள் தொடர்ந்து பாடுகிறாள். பாடு வதிலே, அந்த மாமாவின் குடும் பத்துக்குரிய செல்வச் சிறப்பை விரிவாகச் சொல்லுகிறாள். செல் வத்துட் சிறந்த செல்வம் உழவுச் செல்வமல்லவா? "மேழிச் செல் வம் கோழைபடாது" என்பது பழமொழி; ஆகவே, பயிர் வளத் தையும் அவ்வளத்தைப் பெற்ற நாட்டின் ஏற்றத்தையும் பாடு கிறாள்.

நாடு சோழநாடு: சோறுடைத் தான சோழ வளநாடு. இந் நாடு நீர்வளம் மிகுதியாக உடைய நாடு. பெரிய ஆறுகள், சிறு ஆறு கள், வாய்க்கால்கள், அவற்றிற் பிரிந்து செல்லும் கால்வாய்கள், வயல் தலைப்பிலே நீர் பாய்வதற் கான மடைகள் ஆகியவை யாவும் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னமே ஏற்பட்டு இன்னும் தொடர்ச்சியாக நிலைபெற்று வந் திருக்கின்றன. நீர் மிகுதியா னமையால், வயலின் மடையைத் திறப்பதற்கு மண்வெட்டி கூட வேண்டுவதில்லை, காலால் தள் ளியே மடைதிறந்து விடலாம் என்று சொல்வதுண்டு. இதையே, தாலாட்டுப் பாடுகின்ற தாய் வேறு வகையிலே சொல்லு கிறாள்:

> சேற்றால் மடைதிறந்தால்
> செல்வங் குறையுமென்று,
> பணத்தால் மடைதிறந்தால்
> பாசி பிடிக்குமென்று,
> சோற்றால் மடைதிறக்கும்
> —உங்களம்மான்
> சோழனார் ராச்சியமோ!
> துரும்பசைத்தால் தேன்சொரியும்
> —உங்களம்மான்
> சோழனார் ராச்சியமோ!

சிறுவனுடைய அம்மான் நாட் டிலே, மடைகளெல்லாம் வெறுங் களிமண்ணால் அமைத்தனவல்ல, அவற்றைப் பணங் கொடுத்துத் திறக்கும் வேலையும் வழக்கமில்லை. சோற்றாலேயே மடை, அதைத் திறப்பதும் சோற்றாலேயே! அதா வது சோறுண்ட விசுவாச முடைய ஊழியர்களே பயிர்த் தொழில் செய்து வருகிறார்கள். நீர்வளம் அதிகமானபடியால், எங்கெங்கும் பூத்துக் கிடக்கும் மலர்கள், ஒரு சிறு துரும்பு அசைந்தால்கூடத் தேனைச் சொரி யுமாம். அப்படிப்பட்ட செழிப் புடைய நாடு.

இந்த நாட்டின் வெள்ளாமை எப் படி? கால்வாய்களும் மடை களும் நீர் தருகின்றன என்று பார்த்தோம்; இவை எப்படித் தருகின்றன? காவேரியம்மன் சற்றே கடைக்கண் பார்த்தால் போதுமாம்:

> காவேரி கண்திறந்து
> கால்வாயில் தண்ணீர்விட்டு—

காவேரி கடைக்கண் பார்ப்ப தென்றால், பலவேறு கிளை நதி களின் அணைகளிலும் மதகுகளி லும் உள்ள கண்களைத் திறந்து விடுவது தானே?

பொன்னேரு பூட்டிப்
பொழுதோடே விதைதெளித்து,
மானுங் களமாக்கி
மல்லிகைப்பூ நெல்லாக்கி,
ஆனைகட்டிப் போரடிக்கும்
அளவில்லா வெள்ளாமை
குதிரைகட்டிப் போரடிக்கும்
குறைவில்லா வெள்ளாமை;
ஒட்டைகட்டிப் போரடிக்கும்;
உத்தமனார் வெள்ளாமை!

அவல் கேட்ட சிறுவனைத் தன் மாமன் வீட்டில் போய்க் கேட்கும்படி சொல்ல வருகிற தாய், இவ்வளவும் தாலாட்டில் பாடுகிறாள். இத்தகைய சிறப்பமைந்த மேழிச் செல்வம் படைத்த அம்மான் வீட்டிலே சிறுவனுக்கு அவலுக்குப் பஞ்சமா ஏற்படப் போகிறது?

இனி, சிறுவன் அம்மான் வீடு தேடி நடக்கிறான்; அவனுடைய மெல்லிய சிற்றடிகள் நடக்கத் தெரியாமல் வருந்துகின்றன:

சின்னக்கால் நோவ—தம்பி
சிறுகால் மணல்புதைய
வன்னக்கால் நோவ—தம்பி
வருந்திவழி போறானும்
தங்கக்கால் நோவத்
தனிவழியே போறானும்.

இப்படியாக வருந்தி நடந்து செல்கிற சிறுவன், மெல்ல மாமா வீட்டையடைகிறான். மாமாவோ வீட்டிலில்லை; மாமியும் அங்கில்லை; இருவரும் களத்துக்குப் போயிருக்கிறார்கள். இதை யறிகிறான் சிறுவன். சரி, களத்துக்குப் போகலாம் என்றெண்ணி, அவல் கொண்டு வருவதற்காகக் கையிலே எடுத்துக்கொண்டு வந்திருந்த சிறு மூங்கிற்கூடையுடன் களத்தை நோக்கிப் புறப்படுகிறான். களத்திலே அவல் விளையாது, வீட்டிலேதான் கிடைக்கும் என்பதை அவன் கண்டானா? களத்தை நோக்கிப் போகிறான்.

ஒரு வேற்றுமை

"கீழ்நாட்டான் இயந்திரம் செய்யக் கற்றுக்கொள்ள விரும்பினால், அவன் மேல் நாட்டானின் காலடியில் அமர்ந்து கற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறே, மேல் நாட்டான் ஆத்மாவைப் பற்றியும் கடவுளைப் பற்றியும் அறிந்து கொள்ள விரும்பினால், அவன் கீழ்நாட்டானின் காலடியில் உட்கார்ந்து தெரிந்துகொள்ள வேண்டும்."

—சுவாமி விவேகானந்தர்

போன சிறுவன், களத்தையடைந்து அங்கே நெற்குவியல்கள் குவித்திருக்கக் காண்கிறான். நெல்லென்றால் சாதாரணமான மட்ட நெல்லன்று; எல்லாம், உயர்ந்த ரகமான செந்நெல் கண்ட சிறுவன், இதில் கொஞ்சம் அள்ளிக்கொண்டு போனால், அவலிடித்துக் கொள்ளலாம் என்றெண்ணி, தான் கையில் வைத்திருந்த விளையாட்டுச் சிறு கூடையிலே, கொஞ்சம் நெல்லை அள்ளுகிறானும்.

களத்தில் வேறு வேலையாயிருந்த அம்மான், இவன் வந்ததையோ நெல் அள்ளினதையோ கவனிக்கவில்லை. ஆனால், அம்மானுடைய மனைவி அங்கிருந்தவள் பார்த்துவிட்டாள். பார்த்தவள், தூரத்திலிருந்தே விளையாட்டாகக் கீழே கிடந்த ஒரு சிறு மண் கட்டியை எடுத்துக் குழந்தையை நோக்கி எறிந்தாள். எறிந்த கட்டியொன்று சிறுவன்மீது பட்டது. பட்டவுடனே, குழந்தையானபடியால், இவன் அழ ஆரம்பித்துவிட்டான்.

அம்மான்மார் செந்நெலிலே
அள்ளிவரப் போனடத்தே
அம்மானுடதேவி
அள்ளியிட்டாள் சேற்றாலே.

(போனடத்தே — போன இடத்தே.)

குழந்தை அழுதான் என்பதைத் தாய் கற்பனையாக எண்ணியு வுடன், அவ்வழுகைக்குக் கார ணமாயிருந்த அம்மான் மனைவி மீது இன்னும் அதிகப் புகார்களை யும் அவள் மனம் கற்பனைசெய்து சொல்லுகிறது? விளையாட்டாக மாமியானவள் மண் கட்டியை விட்டெறிந்த செயல், சேற்றால் அடித்தது போல் ஆகிவிட்டது; இதுமட்டுமா? இன்னும் அவள் என்ன செய்தாளாம்?

சேற்று முடிகளையும்
  செந்நெற் கதிர்களையும்
வாரி இறைத்தாளாம்
  வாராதே என்றாளாம்.

குழந்தை கையிலே சிறு ஓலைப் பெட்டி யொன்று கொண்டு போயிருந்தா னல்லவா, அந்தப் பெட்டியையும் பிடுங்கி எறிந்து விட்டாளாம், அந்தப் பொல்லாத மாமி:

பெட்டி பிடிங்கெறிந்து
  போய்வாடா என்றுரைத்தாள்.
(பிடிங்கெறிந்து—பிடுங்கி எறிந்து.)

குழந்தைக்கு இது பொறுக்க முடியாமல் அழுகை வந்துவிட்ட தாம்; அப்பாவைத் தேடித் தன் குறையைச் சொல்லத் திரும்பி ஓடிவருகிறான்:

சேற்றாலே விட்டெறிய—என்
  செல்வன் முகம்கோணி,
அழுதழுதே ஓடிவந்து
  அப்பரிடஞ் செப்பையிலே,—

இவன் நெற் களத்திலிருந்து அழுதுகொண்டு திரும்பி ஓடின சத்தத்தைக் கேட்டார், களத் தில் வேலையாயிருந்த அம்மான். ஓடோடியும் வந்தார். வந்து, குழந்தை தகப்பனாரிடம் போவ தற்குள், வழியிலே வந்து தூக்கிக் கொண்டார். தூக்கிக்கொண்டு, அவன் அழுகையை யெல்லாம் நிறுத்தச்செய்து, மெல்ல விசாரிக் கிறார்:

ஆசை அழுதகுரல்
  ஆச்சிஅம்மான் கேட்டுவந்தார்.
செல்லம் அழுதகுரல்
  சீனிஅம்மான் கேட்டுவந்தார்.

கேட்டவர், எப்படிச் சமாதா னம் செய்கிறார்?

'ஆசை அழவேண்டாம்—எங்கள்
  அமிர்தமே பேசாதே
செல்லம் அழவேண்டாம்—எங்கள்
  சித்திரமே பேசாதே!'
வாரி எடுத்து
  வலத்துடையில் தானிருத்தி,
ஏந்தி எடுத்து
  இடத்துடையில் தானிருத்தி,
ஏன்அழுதாய் என்றுசொல்லி
  இதமாகக் கேட்டபோது,
அம்மான் வயலிலே
  அரையளவு செந்நெலிலே,
அவலுக்கு நெல்கேட்டு
  அழுதானும் அந்நேரம்;
அவல்கேட்ட தம்பியற்கு
  ஆசையம்மான் என்னசெய்தார்?

மாமி செய்ததுபோல, இவர், 'அவல் கிடையாது, போடா' என்று சொல்லக் கூடியவரா? இல்லை.

விளையாட்டாக வந்து அவல் வேண்டுமென்று சொல்லி யழுத மருமகனுக்குக் கொடுப் பதற்கு, அவல் அப்படியென்ன அருமையான பொருளா என்று அம்மான் சிறிது எண்ணிப் பார்க் கிறார். அற்ப அவலுக்குப் பதி லாக, காசும் பணமும் கொடுக்க லாமா என்று சற்று நேரம் சிந் தித்துப் பார்க்கிறார். இவை பய னல்ல என்று அவர் மனத்தில் படுகிறது. அவல் என்றாலும் குழந்தை சிறிது தின்னக்கூடும்; காசும் பணமும் சிறு குழந் தைக்கு எதற்காக? எனவே, இவை வேண்டாமென்று அவர் முடிவு செய்தாராம்.

தாய் இப்படி யெண்ணிப் பாடுகிருள் :

அம்மான் களத்திலே
அவனுக்கு நெல்கேட்க—அவன்
பொன்னுன வாயாலே
போவென்று சொல்லாதே,—
காசாய்க் கொடுத்தால்
களிம்பேறிப் போகுமென்று,—

(மண்ணிலும் புழுதியிலும் விளையாடும் சிறுவன், காசை வைத்து விளையாடினல், அக்காசு மண்ணிலும் ஈரத்திலும் பட்டுக் களிம்பேறிப்போகுமென்பது உண்மை தானே?)

காசாய்க் கொடுத்தால்
களிம்பேறிப் போகுமென்று
காசை அவலாக்கிக்
கைநிரம்பத் தந்தானே!
பணத்தைக் கொடுத்தால்
பயன்கெட்டுப் போகுமென்று
பணத்தை அவலாக்கிப்
படிநிரம்பத் தந்தானே!

அவல் கேட்டு அழுத சிறுவனை அம்மாஞனவர் தூக்கிச் சமாதானப் படுத்தின அருமையைத் தாய் இவ்வாறு பாராட்டிச் சொல்லுகிருள். ஆனல், அவனுக்கு, காசையும் பணத்தையும் அவலாக்கிக் கொடுத்தால் மட்டும் போதுமா? போதாது. அவனும் அவன் தோழர்களும் தின்பதற்கு நெல்லை அவலாக்கித் தந்தால்தான் மகிழ்ச்சியுண்டாகும். இதையும் செய்து தருகிருர் அம்மான். எப்படி?

அவல்கேட்ட தம்பியற்கு
ஆசையம்மான் என்னசெய்தார்?
மேகம் குடையாக்கி
முல்லைப்பூ வில்லாக்கி,
வானம் குடையாக்கித்
தென்னம்பூ வில்லாக்கி,
கல்லை உரலாக்கி—ஆசையம்மான்
கலங்காம் புலக்கையாக்கி,—
நெல்லை அவலாக்கி—உங்களம்மான்
அள்ளியிட்டார் கைநிறைய!

கைநிறைய அவலை அள்ளியிட்டவுடனே, குழந்தைக்கு மகிழ்ச்சியுண்டாகிறது. அழுகையெல்லாம் பிறகு நின்றுவிட வேண்டியதுதானே?

ஆசை அழவேண்டாம்—எங்கள்
அமிர்தமே பேசாதே
செல்லம் அழவேண்டாம்—எங்கள்
செல்வமே பேசாதே

என்று தாயானவள், தாலாட்டுப் பாடலில் குழந்தை அவல் கேட்டழுத கதையை முடிக்கிருள்.

✲

அபூர்வத் தொழில்கள்

உலகத்திலேயே மிக விசித்திரமான தொழில்கள் அமெரிக்காவில் நடக்கின்றன. இரண்டு உதாரணங்கள் :

நியூயார்க்கில், ஒரு கடை இருக்கிறது. யாராவது வாடிக்கைக்காரர்கள் புதிய பாதரட்சைகளை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தால், அவை எந்த அளவாயிருந்தாலும் சரி, அவைகளைப் போட்டு நடந்து பழக்கி, கடிக்காமல் செய்து தந்து, சொற்பக் கட்டணம் பெறுவது அந்தக் கடையின் தொழில்.

அதே நகரில் மற்ருெரு கடையும் இருக்கிறது. அதை நடத்துபவள் மிஸ் மாலீ ஏரன் என்பவள். ஒரு மனிதனுடைய சிநேகிதர்கள் கூடச் சொல்லக் கூசும் குறைகளை, அவள் அவனிடம் நேருக்கு நேரே சொல்லி, சொற்பக் கட்டணம் பெறுகிருள். உடுப்பு, ருசி, பழக்க வழக்கங்கள், வேறு எந்த விஷயமாயினும் சரி; அவற்றிலெல்லாம், நம் குறைகளை அவள் நமக்கு எடுத்துச் சொல்லத் தயார்.

ஆக்கணும் - அவன் வர வேளைக்குக் கொழம்பைக் காச்சி வைக் காட்டா, பளி போட்டுடுவான் - குடிக்கறத்துக்கு நேரமா, பொளுதா, மண்ணு ?..."

சட்டென்று அச்சத்துடன், அவனை உறுத்து நோக்கினள் - மனத்தின் வேகத்தில் வார்த்தை மீறி விட்டதோ ?-ஆனால், அவன் முகத்தில், இவள் வார்த்தைகளைப் புரிந்து கொண்ட களையே இல்லை - அவளுக்குக் குபீல் என்று சிரிப்பு வந்தது - இது ரொம்பவும் வேடிக்கையா யிருந்தது அவளுக்கு.

திடீரென்று தன் வயிற்றெரிச்சல் தீர, ஆனந்தத்துடன், அவள் கிசு கிசு என்று வேகமாய்ப் பேச ஆரம்பித்தாள்.

"ஆமா, ஒன் கிட்டே சொல்றேன்...யாருகிட்டே யாவது சொல்லி யாவணு மில்லே - எத்தனை நாளைக்குப் பொத்திவைக்க முடியும் ? - ஒன்கிட்டே தைரியமாய்ச் சொல்லலாம்—ஒன்கிட்டச் சொல்றதும் ஒண்ணுதான், சொல்லாததும் ஒண்ணுதான்-என் புருசன் குடிப்பான்-நல்லாக் குடிப்பான் - தென்னங் கள்ளுக்கூட இல்லை - ஈச்சங்கள்ளு-ஈயும் எறும்பும், தேளும் கறப்பானுமா மொதக்கும்-" நாற்றம் இங்கே இப்போதே வீசுவதுபோல் இருந்தது அவளுக்கு. அருவருப்பினால் மெய் சிலிர்த்து, பல் இளித்தது.

அவனும் புரியாமல், பல்லைக் காட்டிக் கொண் டிருந்தான். உணர்ச்சிகள் அவள் முகத்தில் பாய்ந்து சொல்லுகையில், அதில் ஏற்படும் விகாரங்களை அனுபவித்துக் கொண்டே, அவன் விரல்கள் பாட்டுக்கு வேலை செய்து கொண்டிருந்தன. ஓசை யில்லாமல் அவை பயிலும் வசியத்தில், அவள் சிக்கி விழித்து, தன் ரகசியங்களை யெல்லாம் வெளியிட்டுக் கொண் டிருந்தாள். அவனுடன் கூட, அவள் பேசவில்லை; தனக்குள் உரக்க யோசனை செய்து கொண்டிருந்தாள் என்று தான் சொல்லவேண்டும்.

"கட்டிக்கிறப்போ இவ்வளவு மோசமில்லே-நல்லாக்கூட இருப்பான் ஆளு-தாட்டியா. சிரிச்சா, பல்லெல்லாம் வரிசை வரிசையாய் நல்லா யிருக்கும்-இப்பொ பன்னியாட்டம் இருக்கான் - பொட்டிமவன், தண்ணி போட்டுட்டு வந்தானு-ஐயையோ - நீ மாத்திரம் பொட்டையா யிருந்தா — அவன் செய்யற அக்கிரமம் பூராவும் காமிக்கலாம்...ஹோ ! ஹோ !! ஹோ !!!—" அவள் சிரிப்பிலே புகை வீசியது. அவள் மேலும், "உனக்குப் புரியாத வரையில் நல்லதுதான் - என்னுங் கிறேன் ?-" என்றாள்.

அவன் ஒன்றுமே பேசவில்லை. அவன் இங்கேயே இல்லை. பல நூறு மைல்களுக் கப்பால், கோதாவரிநதிக் கரையில், அவன் வீட்டுத் தாழ்வாரத்தில், முதுகின் பின் கையைக் கட்டி நின்று காத்துக்கொண்டிருக்கும் கற்பனையிலிருந்தான். இரவு வேளை. நிலவில்லை. வானத்தில் பல்லாயிர மைல்களுக்கு அப்பால், கோடி நட்சத்திரங்கள் 'திகு திகு' என்று எரிந்து கொண்டிருந்தன. எங்கும் அமைதி. வானமும் வையமும், இப்படித் தம்முள் தாம் நிரம்பிய அமைதியுடன், அவனை எளனம் செய்வதுபோலிருந்தது. காரணமே சொல்ல முடியாத — சகிக்க முடியாத ஒரு துக்கம், அவனது உள்ளத்திலே எவ்விதமோ புகுந்து, அவனை வாட்டியது.

திடீரென்று உள்ளேயிருந்து ஓடிவரும் கால்நடையின் மெட்டி ஒலித்தது. சட்டென்று திரும்பி

ணன். குப் என்று கேவிய ஒரு சிறு மூச்சு-பாசமும் ஆசையும் மிகுந்து, இரு தோள்கள், அவன் கழுத்தைக் கட்டிப் பின்னின.

பகலின் விழிப்பிலும் களையில்லாது, இளமையும் குளுமையும் சேர்ந்த ஓர் உடல், அவன்மேல் தீண்டியது. அவள் அவனை அணைக் கையில், ஒரு பெரும் அலை அவன் மேல் மோதுவது போல் இருந்தது.

பளீர் என்று அவனுக்குத் தெரிந்தது: அவள் கையிலே பச்சை குத்திய ஒரு தேளும், கிழிந்த ரவிக்கையின் வழியே தோள்பட்டையில் ஒரு தழும்பும், வலது கன்னத்தில் உதட்டருகில் ஒரு மச்சமும் தென்பட்டன. வியர்வையின் நாற்றமும் மஞ்சளின் மணமும், குபீல் என்று காற்று வாக்கில் வீசின. மளுக் கென்று மற்றொரு வளையல் முறிந்தது.

அவன் விரல்களில் ஆவேசங் கண்டுவிட்டது. பதுங்கல் பாய்ச்சலாகி, அவள் கையை முரட்டுத்தனமாய் இறுகப் பிடித்து அமுக்கிப் பிசைந்தன. அவை பேசிய பேச்சே வேறு. அதன் அர்த்தத்தைப் பற்றியும் சந்தேகமில்லை.

அவன் மூளை கொதித்தது. எச்சில், நாக்கில் வறண்டு, தொண்டையில் சிலந்திக் கூடுகள் பின்ன, அவைகளில் வார்த்தைகள், அகப் பட்டுக்கொண்டு, வெளிவர முடியாமல் தவித்தன.

அவள் முகத்தில் ரத்தம் சட்டென்று வடிந்து, மறுபடியும் வேகமாய்ப் பாய்ந்தது. கையைத் திமிறிக்கொண்டு, அவன் கன்னத்தில் பளீர் என்று ஓர் அறை விட்டாள். அவன் காதில் 'ஜோ' என்று இறைந்தது. கண்களே வெளியில் சிதறிவிடும்போல் தெறித்தன. இவனது மங்கிய பார்வையில், அவள் வெகு வேகமாய், மிடுக்காய் நடந்து செல்வதை, இவன் கண்டான் - இடுப்பை ஆட்டிக்கொண்டு.

குருட்டுக் கண்களுடன், அவன் இன்னும் அங்கேயே நின்றுகொண்டிருந்தான். வெயிலில் பூமி வெந்தது. அவன் இதயத்தின் சதையையே, ஏதோ கொக்கி மாட்டி இழுத்துப் பிடுங்கி உரித்தது. பயங்கரமான அழுகையும் ஒரே வேதனையும் தொண்டையில் இருந்து பீறிட்டு எழுந்தன. அந்த அதிர்ச்சியில், அவன் தேகமே ஆடிற்று. இரண்டு அனல் துளிகள், அவன் கண்களில் இருந்து புறப்பட்டு, கன்னத்தில் வழிந்து, கீழே விழுந்து, பூமியில் இஞ்சி மறைந்தன. அவன் தரையை நோக்கினான். மண்ணிலே நான்கு பயனற்ற கண்ணாடித் துண்டுகள், இவனைக் கேலிசெய்து சிரிப்பது போல், பளபள என்று மின்னிக் கொண்டு கிடந்தன.

✲

சொல்லுவதும் செய்வதும்

'ஸ-ரி-க-ம-ப-த-நி' என்று வாயால் சொல்வது எளிது. ஆனால், ஒரு வாத்தியத்தில் இந்த ஸ்வராவளி வரும்படி செய்வது சிரமமானது. அதேபோல, தர்மத்தைப்பற்றிப் பேசுவது எளிது; அதை வாழ்க்கையில் நடத்திக்காட்டுவதுதான் சிரமம்.

— ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

பாசிஸமும் நாஜிஸமும்

வெ. சாமிநாத சர்மா

பாசிஸமும் நாஜிஸமும் தனித் தனியான அரசியல் தத்துவங்கள் அல்ல. சர்வாதிகாரத்தின் இரண்டு பெயர்கள் இவை. இத்தலியில் பாசிஸம் என்றும், ஜெர்மனியில் நாஜிஸம் என்றும் முறையேஅழைக்கப்படுகின்றன. இரண்டினுடைய பார்வை, பேச்சு, லட்சியம் எல்லாம் ஒன்றே. காலக் கண்ணாடியிலே பார்க்கிறபோது, பாசிஸம் மூத்ததாகவும் நாஜிஸம் இளையதாகவும் தென்படும். ஏனென்றால், பாசிஸம் 1923-ஆம் வருஷத்திலேயே அதிகார பீடத்தில் அமர்ந்து கொண்டது. நாஜிஸம் இதற்குப் பத்து வருஷங் கழித்த பிறகே அதிகார பீடத்தில் அமர்ந்தது. மற்றும், ஹிட்லர் அநேக இடங்களில் முஸோலினியைத் தன் ஆசாரியனாகவும், வழி காட்டியாகவும் மதித்துப் பேசியிருக்கிறான். ஆனால், பிற்காலத்தில் இந்த வழி காட்டிக்கே அவன் வழி காட்டவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது! அது வேறு கதை.

இன்று பொதுவுடைமைக்கு அடுத்தபடியாக உலகத்தைக் கலக்கியிருப்பவை, பாசிஸமும் நாஜிஸமும்தான். பொதுவுடைமைத் தத்துவம் தனியாக நிற்கிறது. ஆனால், பாசிஸமும் நாஜிஸமும் ஒன்றோடொன்று கை கோத்துக்கொண்டு உலவுகின்றன. இந்த இரண்டு தத்துவங்களின் உண்மையான சொரூபம் என்ன? இரண்டும் ஒன்றுதானா? பெயரளவில் மட்டுந்தானா வித்தியாசம்?- என்பவை போன்ற பல விஷயங்களை, இந்தக் கட்டுரை ஆராய்கிறது.

பாசிஸம் மூத்தது என்ற காரணத்தினாலேயோ என்னவோ, சர்வாதிகாரத்தைப் பற்றிப் பேசுகிறபோது, நாஜிஸத்தையும் சேர்த்து, பாசிஸம் என்ற பெயராலேயே அழைக்கிறார்கள் அரசியல் பண்டிதர்கள். ஆகவே, பாசிஸம் என்றால், நாஜிஸத்தையும் சேர்த்தே அர்த்தப் படுத்திக் கொள்ளுமாறு வாசகர்களைக் கேட்டுக்கொள்கிறோம். பாசிஸம் என்றாலும் நாஜிஸம் என்றாலும் ஒன்றுதான்.

பாசிஸம், சமீப காலத்துச் சிருஷ்டி. எல்லாம் ஒரு தலைமுறைக் குட்பட்டுத்தான் இதன் வாழ்வு ஆரம்பிக்கிறது. பாசிஸத்தின் எண்ணப்போக்கு, பெரும்பாலும் பிஷ்டே (Fichte 1762-1814) நீட்ஷே (Nietzsche 1844-1900) என்ற இரண்டு ஜெர்மானிய அறிஞர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டிருக்கிறதாயினும், இது—பாசிஸம்—ஓர் அதிகார சக்தியாக, அரசியல் தத்துவமாக உருப் பெற்றதெல்லாம் சென்ற ஐரோப்பிய மகா யுத்தத்திற்குப் பிறகுதான். வார்சேல் சமாதான ஒப்பந்தத்தில் இத்தலி ஏமாற்ற மடைந்தது; ஜெர்மனி அவமான மடைந்தது. இந்த ஏமாற்றத்தினின்றும், இந்த அவமானத்தினின்றும் பிறந்தவைதான் பாசிஸமும் நாஜிஸமும். இத்தலிக்கு ஏமாற்றமும், ஜெர்மனிக்கு அவமானமும் ஏற்பட்டிராவிட்டால்,பாசிஸமும் நாஜிஸ

மும் இப்போதைப்போல், அரசியல் சாஸ்திரத்தில் இரண்டு ஏடுகளாக இடம் பெற்றிருக்குமா என்பது சந்தேகம்.

காரல் மார்க்ஸ், சமதர்மத்தை ஒரு தத்துவமாக வகுத்துவிட்டுப் போனான். இதை, ஆராய்ச்சி என்னும் உலைக்களத்தில் ஏறக்குறைய மூன்று தலைமுறைகளாக வைத்திருந்தார்கள் அறிஞர்கள். ஒழுங்கான உருவம் பெற்றது. பின்னர் லெனின் இதனை அனுஷ்டான சாத்தியமாகும்படிச் செய்தான். அதாவது, தத்துவத்திற்குப் பிறகுதான் அனுஷ்டானம் வந்தது; காரணத்தைச் சொல்லியே காரியம் நடைபெற்றது. ஆனால், பாசிஸமோ அப்படியில்லை. அது அனுஷ்டானத்திற்கு வந்த பிறகுதான் அதன் தத்துவம் தோன்றியது. பாசிஸ்ட் கட்சிக்குப் பிறகுதான் பாசிஸம்; நாஜிக் கட்சிக்குப் பிறகுதான் நாஜிஸம்.

வார்சேல் ஒப்பந்தத்தின் பயனாக இத்தலியிலும் ஜெர்மனியிலும் பல திறப்பட்ட எண்ணப் போக்குகளையும் பல திறப்பட்ட சக்திகளையும், ஏன், பலதரத்து மனிதர்களையுங்கூட ஒன்றுகூட்டிச் சில காரியங்களைச் செய்ய அவசியம் ஏற்பட்டது. இதற்காக ஒரு கட்சி தேவையாயிருந்தது. இதுவே இத்தலியில் பாசிஸ்ட் கட்சி; ஜெர்மனியில் நாஜி கட்சி.

கட்சி என்று ஏற்பட்டு விட்டால், அதற்கென்று திட்டம், கொள்கை, தத்துவம் எல்லாம் வேண்டுமல்லவா? இவைகளின் தொகுப்புத்தான் பாசிஸமும் நாஜிஸமும். இங்ஙனம் செயலுக்குப் பின்னர் தத்துவம் தோன்றியதனால்தான், ஆராய்ச்சி உலைக்களத்தில் வைக்கப் படாததனால் தான், பாசிஸமும் நாஜிஸமும் அநேக சிக்கல்களுடையனவாகவும், முரண்பாடுகளுடையனவாகவும் இருக்கின்றன. ஆயினும் இந்தச் சிக்கல்களிலிருந்தும் முரண்பாடுகளிலிருந்தும் ஒரு தெளிவைக் காண முயன்றிருக்கிறார்கள் அறிஞர்கள்.

பாசிஸம், பாசிஸ்ட் என்ற பெயர்கள் எப்படித் தோன்றின? முஸோலினியே இதற்குக் காரணங் கூறியிருக்கிறான்:

"ரோம ஏகாதிபத்தியம் செல்வாக்குடனிருந்தபோது, கான்ஸல்கள் (Consuls) என்ற அதிகாரிகளுக்கு முன்னால், அவர்களுடைய அதிகாரத்தின் அறிகுறியாக லிக்டர்கள் (Lictors) என்ற உத்தியோகஸ்தர்கள் ஒருவகைத் தடி ஏந்திச் செல்வார்கள். இதற்கு 'பாசஸ்' (Fasces) என்ற பெயர். இந்தக் கழிகள் தனித்தனியாக இருந்தால் சுலபமாக முறித்துவிடலாம். ஆனால், இவற்றை ஒன்றுசேர்த்து ஒரு கட்டாகக் கட்டிவிட்டால், யாராலும் முறிக்கச் சாத்தியமாகாது. அதுபோல் நாம் ஒற்றுமையாக இருப்போமானால், நம்மை அழிக்க யாராலும் முடியாது. நமக்கு இந்த உறுதி இருக்கிறதென்பதைத் தெரிவிப்பதற்காக, இந்தச் சங்கத்திற்கு–இந்தக் கட்டுப்பாட்டுக்கு–பாசியோ (Fascio) என்று பெயரிடுவோமாக."

இந்தக் கட்சியின் முழுப்பெயர் "பாசி–இத்தாலியானா–டி–கம்பாட்டிமெண்டோ" (Fasci-Italiana-di-Combattimento) என்பது. அதாவது, 'கட்டுப்பாடுள்ள இத்தாலிய வீரர் சங்கம்' என்று சொல்லலாம். கோடரியும் கழிகள் அடங்கிய கட்டும் இந்தக் கட்சியின் சின்னங்களாகக் கொள்ளப் பட்டன. கோடரி, அதிகாரத்தின் அறிகுறியென்றும், கட்டு ஒற்றுமையின் அறி

குறி யென்றும் சொல்லப்படுகின் றன. ஜெர்மனியில் 1919-ஆம் வருஷம் நாஜிகட்சி காணப்பட்டது. இதன் ஏழாவது மெம்பர் அங்கத்தினன் ஹிட்லர். உண்மையில் இந்தக் கட்சியை ஸ்தாபித்தவன் ட்ரெக்ஸ்லர் (Drexler) என்ற ஒருவன். ஆனல், பின்னடி ஹிட்லரின் ஆதிக்கம் ஏற்பட்ட பிறகு, இவன் கட்சியினின்று விலக்கப்பட்டு மறைந்துவிட்டான். ஆரம்பத்தில் இந்தக் கட்சிக்கு "ஜெர்மன் தொழிலாளர் கட்சி" (German Labour Party) என்று பெயர். ஹிட்லர் தலைவனுக வந்த பிறகு, பெயரையே மாற்றி விட்டான். "தேசிய அபேதவாத ஜெர்மன் தொழிலாளர் கட்சி" (National Socialist German Labour Party) என்று பெயர் கொடுத்தான்.

பின்னர் நாளாவட்டத்தில் இது "தேசிய-அபேதவாதக் கட்சி" (National Socialist Party) யாகச் சுருங்கியது. 1933-ஆம் வருஷம் ஹிட்லர் அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட போது, அபேதவாதக் காற்றுக் கூட ஜெர்மனியில் வீசாதபடி செய்து விட்டான். தொழிலாளர் கட்சி யென்றும் அபேதவாதக் கட்சி யென்றும் சொல்லிக் கொண்டு, தொழிலாளர்களுக்கும் அபேதவாதிகளுக்கும் நேர் விரோதமாகக் காரியங்களை நடத்தினன் ஹிட்லர். இது ஜெர்மன் சரித்திரத்தில் ஒரு கறை படிந்த கதை. இது இருக்கட்டும். இந்த "நேஷனல் சோஷலிஸ்ட் கட்சி" தான் "நாஜி கட்சி" யாகச் சுருங்கியது. ஜெர்மன் பாஷா உச்சரிப்புச் சம்பிரதாயப்படி பார்த்தால், முதல் வார்த்தையின் முதலிரண்டு எழுத்துக்களும், இரண்டாவது வார்த்தையின் இரண்டாவது இரண்டு எழுத்துக்களும் சேர்கிற

சிரிப்பு

"நாம் எத்தனைக் கெத்தனை சிரிக்கிறோமே அத்தனைக் கத்தனை தான் நமக்குத் தேகாரோக்கியமும் இருக்கிறது. இது அநேக ஜனங்களுக்குத் தெரிய வில்லை. நாம் சிரிப்பதற் கேற்றபடியே நம் வியாதிகளும் குணமாகின்றன. சிரிக்காதவர்களை விட, சிரிப்பவர்களே அதிக ஆயுள் பெற்று வாழ்கிறார்கள். இக்காலத்தின் மிகச் சிறந்த வைத்தியன், மிக்கீ மௌஸ் என்ற ஹாஸ்யப் படந்தான் என்றுகூடச் சொல்லலாம்."

— டாக்டர் ஜே. ஜே. வால்ஷ்

போது "நாஜி" (Nazi) என்பது வரும். இந்தப் பெயராலேயே கட்சி, கட்சியின் கோட்பாடு எல்லாம் அழைக்கப்படுகின்றன.

"முதலாளித்துவமானது தன்னைத் தானே அழித்துக் கொள்ளுந் தன்மையது. அதனை அழிக்கும் வித்து அதனிடத்திலேயே முளைத்து வளர்கிறது" என்ற கருத்தை, மார்க்ஸ் வெளியிட்டுப் போனன். அந்த அழிவு இந்த இருபதாவது நூற்றாண்டில் முதலாளித்துவத்திற்குத் தொடங்கி விட்டதென்றும் அதனின்றும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டே, பாசிஸம் என்ற கோலம் பூண்டு அது போராடுகிறதென்றும் பாசிஸத்திற்குச் சிலர் வியாக்கியானஞ் சொல்கிறார்கள். அதாவது முதலாளித்துவத்தின் இறங்குமுக வாழ்வுக்குத்தான் பாசிஸம் என்று பெயர் என்பது இவர்கள் கருத்து. இப்படிச் சொல்கிறவர்கள் அநேகமாகப் பொதுவுடைமைவாதிகள்.

ஆனல், இத்தலியிலும் ஜெர்மனியிலும் பாசிஸம் எப்படி வளர்ந்து

வந்திருக்கிறதென்பதை நாம் ஆராய்ச்சி செய்து பார்த்தோமானால், அது, மத்திய வகுப்பாரிடமே தோன்றி வளர்ந்து வந்திருக்கிறதென்பது நன்கு தெரியும். மத்திய வகுப்பு இளைஞர்களின் ஆத்திரம், ஆவல் இவையிரண்டினையும் பிரதிபலிப்பது தான் பாசிஸம் என்று சிலருடைய கருத்து. இதைச் சிறிது ஆராய்வோம்.

விஞ்ஞான அபிவிருத்தி காரணமாகத் தொழில் பெருக்கம் ஏற்பட்டது. தொழில் பெருக்கம் காரணமாக முதலாளித்துவம் வளர்ந்தது. இதே வேகத்தில், ஆனால் முதலாளித்துவத்திற்கு நேர் எதிராக, தொழிலாளர் இயக்கமும் வளர்ந்தது. முதலாளித்துவம், தான் அனுபவித்து வரும் சலுகைகளை விட்டுக் கொடுக்க மனமில்லாமல் போராடுகிறது; தொழிலாளித்வம், தன் உரிமைகளுக்காகப் போராடுகிறது. இந்தப் போராட்டத்திற்கு மத்தியில், மத்திய வகுப்பார் நசுக்குண்டு அவதிப்படுகின்றனர். இவர்கள், தொழில் பெருக்கத்தினால் உண்டாகிற எல்லா அனுகூலங்களையும் அடையப் பார்க்கிறார்கள்; ஆனால், அடையக்கூடாதபடி, சமுதாயத்தின் பொருளாதார அமைப்பு இருக்கிறது. முதலாளிகள், இவர்களைத் தங்களோடு சேர்த்துக் கொள்ள மறுக்கிறார்கள். அப்படியானால் இவர்கள் தொழிலாளர்களோடு சேர்ந்து கொள்வது தானே என்று கேட்டால், அதற்கு இவர்கள் மனம் கூசுகிறது. அது தங்களுடைய கௌரவத்திற்குக் குறைவென்று கருதுகிறார்கள். இதனால், இவர்கள் மேல்படிக்கு அனுமதிக்கப் படாமலும் கீழ்ப்படிக்கு இறங்க மனமில்லாமலும் நடுவேயிருந்து தவிக்கிறார்கள். முதலாளிக்குச் சுரண்டும் திறமை இருக்கிறது; தொழிலாளிக்குப் போராடுஞ் சக்தி இருக்கிறது. மத்திய வகுப்பானுக்கு, சுரண்ட மனமில்லை; போராடச் சந்தர்ப்பமில்லை; நாகரிக வசதிகளை அனுபவிக்க வேண்டுமென்ற ஆசைமட்டும் நிறைய இருக்கிறது. முதலாளி, இகலோக வாழ்க்கையில் இன்பம் அனுபவிக்க வசதிகள் ஏற்படுத்திக் கொள்கிறான்; தொழிலாளி அந்த வசதி பெருமையினால், பரலோக வாழ்க்கையில் நம்பிக்கை கொள்கிறான். மத்திய வகுப்பானோ, இந்த இரண்டு உலகங்களுக்கும் நடுவே, நாகரிக வசதிகளைப் பெற முடியாமலும் பரலோக வாழ்க்கையில் நம்பிக்கை கொள்ள முடியாமலும் தத்தளிக்கிறான். சுயேச்சையாக ஒரு காரியத்தைச் செய்யவும், அதில் வெற்றி காணும் பொருட்டுத் தைரியமாகப் போராடவும், இவனுக்குச் சந்தர்ப்பங்களே கிடைப்பதில்லை. ஆனால், அந்தச் சந்தர்ப்பத்தையென்னவோ இவன் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். பாசிஸம், அந்தச் சந்தர்ப்பத்தை இவனுக்கு அளித்தது. இத்தலியிலும் ஜெர்மனியிலும் பாசிஸ்டு கட்சியிலும் நாஜி கட்சியிலும் பெரும்பாலோரான அங்கத்தினர்களாகச்சேர்ந்தவர்கள் யாரென்று பார்த்தால், குறைந்த சம்பளம் வாங்கும் குமாஸ்தாக்கள், சில்லரை வியாபாரம் செய்யும் கடைக்காரர்கள், அற்ப சொற்பமான பூஸ்திதி யுடையவர்கள் முதலியோரே.

இன்றைய ஐரோப்பிய நாகரிகத்தில் இரண்டுவிதக் கலப்புகள் இருக்கின்றனவென்றும், ஒன்று கிரேக்க கலாசாரமென்றும் மற்றொன்று ரோம கலாசாரமென்

றும் அறிஞர்கள் சொல்கிருர்கள். கிரேக்க கலாசார பரம்பரையானது, மனிதனுடைய சிந்தனு சக்தியைத் துரிதப்படுத்தி வந்ததோடு அவனுடைய தனித்துவத்தையும் வளர்த்து வந்தது. ரோம கலாசார பரம்பரையோ, சமுதாயக் கட்டுப்பாடு, ஒழுங்கு முதலியவைகளை வளர்த்து வந்தது. கிரேக்க கலாசாரப் பண்புகளின் பயனுக, மனிதனுடைய சிந்தனு சக்தி அதிகப்பட்டதன் காரணமாக, விஞ்ஞான அறிவு பெருகியது; மதத்திலே நம்பிக்கை குன்றியது; அரசியலில் ஜனநாயக தத்துவம் வளர்ந்தது; தனிப்பட்டவர்களுடைய சுகசௌக்கியத்தை வளர்ப்பதற்குத் துணையாயிருப்பதுவே அரசாங்கம் என்ற எண்ணம் வலுத்தது. ஆனல், இந்த அளவோடு நிற்கவில்லை. வரவர விபரீத பயன்களும் உண்டாயின. அரசியலிலே குழப்பம், அற வாழ்க்கையிலே அவநம்பிக்கை, நாஸ்திகம் எல்லாம் தோன்றின. இவைகளின் தொகுப்புத்தான் பொதுவுடைமை இயக்கம். இந்த இயக்கம், அதாவது மேலே சொன்ன விபரீத பயன்கள் இன்னும் அதிகமாக வளரவொட்டாதபடி தடுப்பதற்கு, ஓர் இயக்கம் அவசியமாயிருந்தது. இதுதான் பாசிஸம். பாசிஸம், பழைய ரோம கலாசாரப்பண்புகளை யெல்லாம் மறுபடியும் மேலுக்குக் கொணர்ந்து சமுதாயத்திலே புகுத்துகிறது. அதாவது இப்பொழுது சமுதாயத்தில் கட்டுப்பாடு, ஒழுங்கு, பரம்பரைக்கு ஒரு மரியாதை இவையெல்லாம் தேவையாயிருக்கின்றன. இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுதான் பாசிஸம்.

பாசிஸ்டுகள், பாசிஸம் தோன்றியதற்கு மேலே சொன்ன காரணத்தையே சொல்கிருர்கள். "பாசிஸமானது, தனி மனிதனுடைய வளர்ச்சியைக் காட்டிலும் சமுதாயக் கட்டுப்பாட்டையே அதிகமாக வலியுறுத்துகிறது. பாசிஸத்தின்படி லட்சிய புருஷன் யாரென்ருல் அறிஞனல்ல, விஞ்ஞான சாஸ்திரியல்ல; பண்பட்ட யுத்த வீரன்தான். அவன் வைராக்கிய சித்தமுடையவன்; தற்பெருமை யுள்ளவன், ஆனல் அடக்க முடையவன்; ஆழ்ந்த மதப்பற்றுடையவன்; மற்றவர்களுடைய நலத்திற்காகத் தொண்டு செய்யும் விஷயத்தில் தன்னையே கொடுத்துவிடவல்லவன்; ஏழைகள், பலவீனர்கள் முதலியோரைப் பாதுகாக்கிறவன்; நியாயத்திற்காகப் போராடுகிறவன்; தனது ஜாதீயப் பெருமையைக் காப்பாற்றுகிறவன்." இப்படிப்பட்ட ஒரு லட்சிய புருஷனுகப் பிரதியொரு மனிதனும் இருக்க வேண்டும் என்று பாசிஸ்டுகள் கூறுகிருர்கள். பிரதியொரு பாசிஸ்டினிடமிருந்தும் இந்த மாதிரியான பண்புகளே எதிர்பார்க்கப்படுகின்றன.

✲

அங்கே கிடையாது

"ஸோவியத் ருஷியாவில் எண்ணுயிரம் சமாசாரப் பத்திரிகைகள் வெளியாகின்றன. அவைகளில் ஒன்றே ஒன்றுகூட, திருட்டு, கொலை முதலிய குற்றச் செய்திகளோ, விகடச் சித்திரங்களோ, வம்புப் பத்திகளோ பிரசுரிப்பதில்லை."

— பிரெலிங் பாஸ்ட்டர்

அத்தி பூத்தது

சௌகத் தானவி

அதை 'அத்திமர வீடு' என்றுதான் சாதாரணமாக எல்லோரும் அழைப்பார்கள். காரணம் என்ன என்றால், வீட்டு வாசலிலேயே பரந்த கிளைகளையுடைய அத்திமரம் ஒன்று அங்கே இருந்தது. எந்தப் பருவமாயிருந்தாலும், இனிமையான அத்திப் பழங்கள் அதில் எப்பொழுதும் பழுத்துக் கொண்டே இருக்கும். அது காரணமாக, தெருவிலுள்ள ஆடுகள், குட்டிகள் — ஆட்டுக்குட்டிகள் மட்டுமல்ல, குழந்தைகளுங் கூடத்தான், பகல் முழுதும் அங்கே கூட்டமாய்க் கூடுவார்கள்; இரவில் வௌவால்களின் மஹாசபை அங்கே கூடும்.

பூக்காமலே பழுக்கும் மரம் அத்தி என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். அத்திப் பூவை இதுவரையில் ஒருவரும் பார்த்ததில்லை. ஒரு வைத்தியர் தம்முடைய மாணவர்களைப் பரிட்சை செய்யும்போது, அநேகம் பூக்களுக் கிடையில் அத்திப் பூவையும் சொல்லி வைத்தார். தலை குனிந்து கொண்டு அதையும் எந்த மாணவர்கள் விடைத் தாள்களில் எழுதி வைத்தார்களோ, அவர்களை மீண்டும் படிக்குமாறு உத்தரவிட்டார். ஏனென்றால், அத்திப்பூ இல்லை என்று தெரியாத மாணவர்கள், வைத்தியர்களாகி என்ன மண்ணைப் போடுவது?

> அபூர்வ நிகழ்ச்சிகளை யெல்லாம், 'அத்தி பூத்த மாதிரி' என்று வர்ணிப்பது நம் வழக்கம். அத்தியும் பூக்குமா? அதைப் பற்றிய ஒரு கர்ண பரம்பரைக் கதையையும் மனித உள்ளத்தையும் கலந்திழைத்த ரசமான ஓர் உர்தூ சித்திரம் இது. சு. குருசாமி மொழி பெயர்த்திருக்கிறார்.

மேலே கூறிய விஷயம் அத்திப்பூ இல்லை என்பதற்கு அத்தாட்சி. இனி அது உண்டென்னும் விஷயத்தைப் பற்றியும் சிறிது சொல்கிறேன், கேளுங்கள்: எல்லாக் கிழவிகளின் அபிப்பிராயமும் என்னவென்றால், அத்திப் பூ உண்டென்பதே யாகும். ஆனால், அது என் கண்ணுக்குத் தென்படுவதில்லை எனில், முதலாவதாக, ஒரு மரத்தில் ஒரே ஒரு பூ மட்டிலுமே பூக்கும். அதுவும் சரியாக இரவு பன்னிரண்டு மணிக்கு மலர்கிறது. இரண்டாவதாக, அது மலர்ந்தவுடனே தேவதைகள் வந்து அதைப் பறித்துக் கொண்டு போய்விடுகிறார்கள். ஆகையினால், அது ஒருவர் கைக்கும் அகப்படுவதில்லை. அது யாருக்காவது கிடைத்தால், அவர்களுக்கு ஒரு பெரிய புதையல் கிடைத்தது போலவே யாகும். ஏனென்றால், நாம் அதை எந்தப் பொருளின் மேலே போடுகிறோமோ, அந்தப் பொருளை அப்புறம் நாம் எவ்வளவு செலவழித்தாலும் சரி, அது தீர்வதே இல்லை. அதைப் பணப் பையில் போட்டால், பை காலியாவதே கிடையாது. தானியக் களஞ்சியத்தில் போட்டுவிட்டு, எவ்வளவுதான் செலவழியுங்களேன்; களஞ்சியம் எப்போதும் நிறைந்தே தான் இருக்கும்! அதிகம் சொல்

வானேன், அத்திப்பூ எந்தப் பாக்கியசாலிக்குக் கிடைக்கிறதோ, அவன்தான் உலகத்திலேயே மிகப் பெரிய ஐசுவரியவான் என்று சொல்லலாம்.

நம் கிழவிகளிடம், இந்தக் கதை, பரம்பரை பரம்பரையாய் வந்து கொண்டிருக்கிறது: ஓர் இடைச்சியின் தயிர்ப்பானையில் தற்செயலாக ஓர் அத்திப்பூ விழுந்துவிட்டதாம். அவளுக்கு அது தெரியவில்லை. பாவம்! அவள் ரொம்ப நேரம் தயிர் விற்று விற்றுச் சலித்துப் போனாள். ஆனால், அப்போதும் பானையில் தயிர் குறையவே காணோம்! அவளுக்குக் கோபம் பொறுக்க முடியவில்லை. கடைசியில் அவள் பானையைத் தரை மீது போட்டு உடைத்துவிட்டு, வீட்டுக்குப் போய்விட்டாள். அந்தத் தயிரைத்தான், தெருப் பெருக்கும் முனிசிபாலிட்டிக் குறவன், ஆதிகாலத்திலிருந்து இன்றுவரையில், எடுத்துச் சுத்தம்செய்து கொண்டேயிருக்கிறானாம். ஆனால், வீதி சுத்தமாவதே இல்லை. எப்படிச் சுத்தமாகும்? அதில்தான் அத்திப்பூ இருக்கிறதே!

கோடை காலத்தில் என் வீட்டுக்கு வரும் விருந்தாளிகள், வெக்கையின் காரணமாக இரவில் வீட்டுக்குள் படுக்காமல், அந்த அத்தி மரத்தின் அடியிலே படுப்பார்கள். அவர்கள் கட்டிலில் படுத்தவுடன், "இதென்ன, நாவல் மரமா?" என்று கேட்பார்கள்.

"இது அத்திமரம்" என்று கூறி, மேலே கூறிய விஷயங்களை யெல்லாம் அவர்களுக்குச் சொல்ல வேண்டியிருக்கும்.

பஹிம் அண்ணாவும் இதைப் பற்றி விதம்விதமான கேள்விகள் கேட்டான். அத்திமரம், அத்திப்பூ இவைகளைப் பற்றிய கதையை அவனுக்குச் சொல்லிவிட்டு, திரும்பிப் படுத்துக் கொண்டு, தூங்க எண்ணி மௌனமானேன். ஏனென்றால், அன்று மத்தியானம் எங்கள் வீட்டில், 'டுக் டுக் கொயின், கொயின்' நடந்து கொண்டிருந்தது. மத்தியானம் சற்று இளைப்பாறலாம் என்று படுத்தேனோ இல்லையோ, என் தலை மேலேயே, அதாவது நான் படுத்திருந்த அறைக்கு நேர் மேலேயுள்ள அறையில், பஞ்சு உடைத்தல் ஆரம்பமாயிற்று.

பலன் என்ன என்றால், மத்தியானம் கண்ணை மூடவே முடியவில்லை. இப்போதோ என்றால், பஹிம் சாஹெப், சினிமாப் பார்த்து விட்டு வந்திருந்தார்! பத்து மணியாகி விட்டது. சரி, இனித் தூங்க வேண்டியதுதான் என்று நான் தீர்மானம் செய்து கொண்டேன். அத்திப் பூவின் விருத்தாந்தம் விநோதமானதல்லவா? அதைச் சரிவரப் புரிந்து கொள்ளுவதற்கு, தன்னால் ஆன

சந்தேகம் நியாயமா?

அமெரிக்காவில், சிக்காகோ நகரத்திலே, போலீசார் நான்கு பையன்களை, அவர்கள் திருடியிருப்பார்களோ என்று சந்தேகப்பட்டு, போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள்.

ஸ்டேஷனுக்குப் போனதும், மற்றொரு போலீஸ்காரன் அந்தப் பையன்களைச் சோதனை செய்து பார்த்தான். பையன்களை ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு வந்த போலீஸ்காரர்களின் தோல்பைகள், இந்தப் பையன்களிடம் இருந்தன!

சமையல் வேலைகளை சீர்படுத்த வருகிறது

காமதேனு வனஸ்பதி

உயர்தரமான பொரியல் சாதனம் இதோ வந்துவிட்டது. காமதேனு மணமற்றது. ஆகையால் அதைக்கொண்டு தயாரித்த ஆகாரவகைகள் அவற்றின் இயற்கை மணத்தை இழப்பதில்லை, உயர்தர நெய்யைப் போன்று மணல் மணலாக உள்ளது. வைட்டமின்கள் நிறைந்தது. பரிசுத்தமானது. கைபடாமல் தயாரிக்கப்பட்டது. 4 காலன், 10 பவுண்டு, 5 பவுண்டு கொண்ட சீல் வைத்த டின்களில் விற்கப்படுகிறது. காமதேனுவை உபயோகிப்பதால் சிக்கனமும் உண்டு. நெய், வெண்ணெயைப் போன்ற குணமுள்ளதாயினும் விலையில் மட்டும் மலிவு

தயாரிப்பவர்கள் :

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட.

மேட்டூர்டாம் — தென்னிந்தியா

KVK I.TM

மானேஜிங் ஏஜண்டுகள் :

சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட், திருச்சினாப்பள்ளி

சோல் விற்பனை ஏஜண்டுகள் :

அல்லைட் இண்டஸ்டிரியல் டிஸ்டிரிபியூடர்ஸ் லிமிடெட்

120, அரமனைக்கார தெரு, சென்னை

விரைவில்
வருகிறது!
பக்ஷிராஜா பிலிம்ஸ்
ஜகதலப்ரதாபன்
டைரக்ஷன்:
ஸ்ரீராமுலு நாயுடு.
நாராயணன்
கம்பெனி
வெளியீடு

மட்டும் அவன் முயற்சிசெய்து கொண்டுதான் இருந்தான்.

எனக்குக் கொஞ்சம் கொஞ்சம் தூக்கம் வந்து கொண்டிருந்த அதே சமயத்தில்தான், அத்திப்பூ வைப்பற்றிய வரலாற்றின் சுவா ரஸ்யம், அவனுடைய மூளையி லும் சிறிது சிறிதாக உதயமாக ஆரம்பித்தது!

"தம்பீ, இது வேடிக்கையாக அல்லவா இருக்கிறது!" என்று அவன் கூறினன்.

நான் அரைத் தூக்கத்தில் இருந் தேன்.

அவர் குரலைக் கேட்டதும் திடுக்கிட்டு விழித்து, "உம்" என்றேன்.

பஹிம் : அதற்குள்ளேயா தூங்கி விட்டாய்?"

நான் : "உம்!"

பஹிம் : "அத்திப்பூ இரவு சரி யாய்ப் பன்னிரண்டு மணிக்கு மலர்கிறது, உடனே தேவதை கள் வந்து அதைப் பறித்துக் கொண்டு போகிறார்கள் என்ற விஷயம் நமக்குப் புரிய மாட் டேன் என்கிறதே?"

நான் : "..............."

பஹிம் : "நீ தூங்கி விட்டாய் போல் இருக்கிறது!"

நான்: "ஊ ஹூம், ஊ ஹூம்."

பஹிம் : "இதெல்லாம் உண் மையாயிருக்குமென்று, நீ நினைக் கிருயா?"

நான் : "உம்."

பஹிம் : "அப்படியானல், உண்மை யென்று சொல்கிருய்?"

நான் : "ஊ ஹூம், ஊ ஹூம்."

பஹிம் : "பின்னே நீ என்ன சொல்கிருய்?"

நாம் : "உம், உம்."

பஹிம் : "அட நாசமாய்ப் போன தூக்கமே! சரி, தூங்கு தூங்கு!"

நான் தூங்கிக்கொண்டுதான் இருந்தேன். இப்போது பஹி முடைய அனுமதியும் கிடைத்து விட்டதல்லவா? நன்ருய்த் தூங்கி விட்டேன். அதிகமாய்ப் போனல், ஒரு மணிநேரம் தூங்கி யிருப் பேன்; அதற்குள் பஹிம் என்னை ஒரு குலுக்குக் குலுக்கி, என் காதண்டை வாயை வைத்துக் கொண்டு, "ஜல்தி எழுந்திரு. அட கடவுளே! சீக்கிரம் எழுந்திரு. அத்தி பூத்திருக்கிறது! தெய்வ சாட்சியாய், அதோ அத்திப்பூ!" என்று சொல்லி எழுப்பினன்.

முதலிலே, நான் எழுந்திராமல் புரண்டு கொடுத்துக்கொண்டு தானிருந்தேன். ஆனல், 'தெய்வ சாட்சியாய், அதோ அத்திப்பூ!' என்ற வார்த்தைகளைக் கேட்ட தும், நான் அவசர அவசரமாய் எழுந்து உட்கார்ந்தேன். பஹிம் தனது ஒரு கைச் சுட்டு விரலை உதடுகளில் வைத்து, சத்தம் போடாமல் இருக்க வேண்டும் என்று சைகை செய்து கொண்டு, இன்னொரு கைச் சுட்டு விரலினல் அத்திப்பூவைக் காட்டினன். விரல் காட்டிய திசையில் பார்த் தேன். இரண்டு நிமிஷ நேரத்தில் எனக்கும் அது தென்பட்டது. எவருக்கும் சந்தேகம் ஏற்படாத வாறு தூய வெண்ணிறமான பெரிய அத்திப்பூ ஒன்று, இலை களுக்கு நடுவில் நன்ருய்ப் பிரகா சித்துக் கொண்டிருந்தது. நான் அதைப் பார்த்தவுடன், பஹிமின் தோளைப்பிடித்து அழுத்தினேன். அதற்கு அர்த்தம் என்ன என்றல்,

நானும் அதைப் பார்த்து விட்டேன் என்பதே.

"இப்பொழுது சரியாய்ப் பன்னிரண்டு மணி. தேவதைகள் வந்துகொண் டிருப்பதையும் நான் பார்த்தேன். அவர்களின் காலடிச் சத்தத்தைக்கூட நான் கேட்டேன். நாய் அதைச் சீக்கிரம் எடுத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யாவிட்டால், அவர்கள் பறித்துக்கொண்டே போய் விடுவார்கள்" என்று பஹிம் என் காதுக்குள் ரகசியமாய்ச் சொன்னான்.

"என்ன உபாயம் செய்வது? இது இலகுவில் கிடைக்கக்கூடிய புஷ்பம் அல்லவே?" என்று பஹிமின் காதுக்குள் நான் சொன்னேன்.

"இந்த விலைமதியா ரத்தினத்தை விட்டுவிடுவது பெரிய முட்டாள் தனமாகும். இந்தப் புஷ்பத்தை நாம் இருவரும் வைத்துக்கொள்வோம். ஒரு பெட்டியில் நீ நூறு ரூபாயும், நான் நூறு ரூபாயும் போட்டு, அதில் இந்த அத்திப் பூவையும் போட்டுவிடுவோம். அந்தப் பெட்டிக்கு நாம் இருவரும் எஜமானர்களாயிருப்போம்."

"அதெல்லாம் அப்புறமல்லவா? முதலாவது அந்தப் புஷ்பத்தைப் பறிப்பதற்கு அல்லவா வழிதேட வேண்டும்?" என்று நான் கூறினேன்.

"சரி, அப்படியானால், நீ மரத்தில் ஏறு."

"தேவதைகளைக் கண்டால், எனக்குச் சிறிது வெட்கமாயிருக்கும்; இல்லையானால் ஏறுவதற்கென்ன? ஆகையினால், நீயே ஏறு" என்று நான் கூறினேன்.

"தேவதைகளின் சங்கதியாய் இல்லாவிட்டால், நான் எப்பொழுதோ ஏறியிருப்பேன். உன்னையா சொல்லப் போகிறேன்?"

"அப்படியானால், இன்னொன்று செய்யலாம். என்னுடைய வேலைக்காரன் ஷுபராதியை மரத்தின்மீது ஏற்றி, நாமிருவரும் துப்பாக்கியுடன் கீழே நின்றுகொள்வோம். ஷுபராதி பூவைப் பறிப்பதற்குள் தேவதைகள் பறித்து விடுவார்கள் என்று தோன்றினால், பூவைச் சுட்டு வீழ்த்திவிடலாம்."

"ஊஹும், இந்தத் துப்பாக்கிச் சங்கதியே உதவாது. ஏனென்றால், தேவதைகளின் பொல்லாப்பு நமக்கு உண்டாகிவிடும். ஷுபராதி ஏறட்டும். அப்புறம் நம்முடைய அதிர்ஷ்டம் எப்படியிருக்கிறதோ பார்த்துக் கொள்ளலாம்."

இவ்விதம் நிச்சயம் செய்து கொண்டு, ஷுபராதியை எழுப்பினோம். அவனிடம் தேவதைகளைப்பற்றியோ, பூவைப்பற்றியோ ஒன்றும் சொல்லாமல், "அதோ வெண்மையான வஸ்து ஒன்று மரத்தில் பிரகாசித்துக் கொண் டிருக்கிறதே, அதைப் பறித்துக்கொண்டு வா" என்று மட்டும் சொன்னோம். ஷுபராதி உடனே உத்தரவை நிறைவேற்றினான். மரத்தின்மேல் ஏறியதும், புஷ்பத்தின்மீது கைவைத்தான். பூ அவன் கையில் வந்துவிட்டது. 'தேவதைகள்' எல்லாம் கால்களை உதறிக்கொண்டு பறந்துவிட்டன. ஷுபராதி மரத்திலிருந்து இறங்கி வந்து, பூவை என் கையில் கொடுத்தான். "அடே, இது பஞ்சல்லவா?" என்று

நான் ஆச்சரியத்துடன் கூறினேன்.

"இந்த மரத்துக்கு வௌவால்கள் ஏராளமாய் வருகின்றன, எஜமான்!" என்று ஷூபராதி கூறினன்.

"காலையில் உடைத்துக்கொண்டிருந்த பஞ்சுதான குஷாலாய்ப் பறந்து, இப்படி அங்கே உட்கார்ந்துகொண்டிருந்திருக்கிறது?" என்று நான் கேட்டேன்.

"சரியாய்ப் பன்னிரண்டு மணிக்கு அத்தி பூக்கிறது என்பதும், உடனே தேவதைகள் வந்து அதைப் பறித்துக்கொண்டு போகிறது என்பதும் எல்லாம் வெறும் கதை" என்ருன் பஹிம்.

"ஆமாம், பஞ்சு பறக்கிறது; அதை அத்திப்பூ என்றும், வௌவால்களைத் தேவதைகள் என்றும் சொல்லுகிருர்கள் போல் இருக்கிறது" என்றேன் நான்.

பஹிம் விழுந்து விழுந்து சிரித்தான்.

"காலையில் சீக்கிரம் எழுப்பி விடாதே. இனியாவது கொஞ்சம் தூங்கலாம்" என்று, கட்டிலில் படுத்து, நான் தூங்க ஆரம்பித்தேன்.

✲

தெரிந்தது தானே!

சர் ஆஷ்லி ஈடன் என்பவர் 1877-ஆம் ௵ முதல் 1882-ஆம் ௵ வரை வங்காள கவர்னராயிருந்தார். கவர்னர் பதவியிலிருந்து விலகியதும், இந்தியா மந்திரி காரியாலயத்தில் புதிய உத்தியோகம் வகித்தார். அவருக்குப் பின் சர் ஸ்டுவர்ட் பெய்லி என்பவர் வங்காள கவர்னராக வந்தார். அவர் ஒருமுறை, கல்கத்தாவில் சர் ஈடனின் உருவச்சிலையைத் திறந்து வைத்து விரிவாகப் பேசினர். அந்த வைபவத்தைப் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தன. சர் ஈடனின் நண்பரொருவர் அச்செய்திகளை வாசித்துப் பார்த்தார். அவருக்கு ஆனந்தம் உண்டாயிற்று. பத்திரிகையைத் தூக்கிக்கொண்டு, ஈடனிடம் சென்று, "ஈடன், பெய்லி உம்மைப் பற்றிப் பிரமாதமாகப் புகழ்ந்திருக்கிருர், பார்த்தீரா?" என்ருர். "பார்க்கவில்லை. என்ன சொல்லியிருக்கிருர்?" என்று கேட்டார் ஈடன். "இந்தியாவில் பதவி வகித்த கவர்னர்களுக்குள் நீர்தான் சிறந்த ராஜதந்திரியென்றும் அற்புதமான நிர்வாகியென்றும் சொல்லியிருக்கிருர்" என்ருர் நண்பர். ஈடனுடைய முகத்தில் யாதொரு மாறுதலும் இல்லை. அவர் அலட்சியமாக, "பூ! இவ்வளவுதான? இது தான் எனக்கே தெரியுமே. அவர் ஏதாவது புதிதாகக் கண்டு பிடித்துச் சொல்லிவிட்டாராக்கும் என்றல்லவா பார்த்தேன்" என்ருர்!

அரசியல் 'ஹம்பக்.'

"அரசியலும் அரசியல் கட்சிகளும் ஒரே 'ஹம்பக்' மயமாயிருக்கின்றன. ஒரே ஒரு கட்சியிடமே ஞானம் ஏகபோகமா யிருப்பதாகச் சொல்வது வெட்ட வெளிச்சமான 'ஹம்பக்'. என்ருலும், அரசியலிலே, பற்பல கட்சிகள் இருக்கும் முறையை நாம் கைவிடாமல் வைத்துக்கொண்டுதான் இருக்கவேண்டும். ஏனெனில், பலகட்சிப் பொய்யர்களும், தங்கள் பொய்களால் ஒருவரை யொருவர் ரத்து செய்துவிடுகிருர்கள் அல்லவா?"

— டபிள்யூ. மார்கிரீ.

வீர விஜய ரகுநாதன்

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

தமிழ் மக்களிலே வீரம் மிக்கோர் மறவரே. ராமநாதபுரம் ஜில்லாவில் அவர்களே அதிகம். அம் மறவர் குலத்தார் இன்று மண்வெட்டிக் கூலி தின்னலாம்; வாள் வலியும் வேல் வலியும் இன்று அவர்களிடம் காண வகையில்லை. எனினும், புயவலியை மிகுதியும் பார்க்கலாம். முன்னாளில் அன்னவரின் நிலைமை யாது? பாரதியார் பேசும் வண்ணம்,

> நாணிலகு வில்லினொடு தூணி - நல்ல
> நாதமிகு சங்கொலியும் பேணி, -
> பூணிலகு திண்கதையுங் கொண்டு,

விண் முட்டப் புகழ்க் கம்பம் நாட்டினர்; சேதுபதிகளென்று சிறப்புற்றனர்; ராமநாதபுரம் ராஜாக்களென்று தலைசிறந்தனர். அக் குலத் தலைவர்களில் ஒருவன் விஜய ரகுநாதன்; செப்பேடுகளில் முத்துவிஜயரகுநாதசேதுபதி காட்டத்தேவன் என்று பேர் பெற்றவன்; புதுக்கோட்டைத் தொண்டைமானையும் தஞ்சைச் சரபோஜி மன்னவனையும் போர் முகத்தில் ஒருசேரப் புறங்கண்டவன். அவன் புகழ் இம்மட்டோ?

வீர விஜய ரகுநாதன் மகா தெய்வ பக்தன்; தினம் ராமேசுவரஞ் சென்று, சுவாமி தரிசனம் செய்தவன்; 'ஹிரண்ய கர்ப்ப யாகம்' பண்ணினவன்; அக்கிரகாரம் அமைத்து, அந்தணருக்கு ஸர்வமான்யம் தந்தவன்; ராமநாதபுரத்தை எழுபத்திரண்டு பாளையங்களாகச் சமைத்தவன்; மேலும், அதனை எட்டுச் சீமைகளாக வகுத்தவன்; திருவாரூர் முதல் திருநெல்வேலி வரையில் தர்மக்கொடி தூக்கியவன். அவன் சரிதம் இங்கே சிறிது பேசுவோம்.

ராமநாதபுரம் ராஜாக்களில் நனி சிறந்த ஒருவன் கிழவன் சேதுபதி. இருபத்தைந்து வருஷகாலம் இவன் இணையிலா ஆட்சி நடத்தி வந்தான். கிழவன் சேதுபதி என்றால், பகைவர் கதி கலங்குவர். 1708-ஆம் வருஷம் இவன் காலகதியானன். முடி சூடி அரியணை ஏற, மைந்தர் இல்லை. எனவே, காதல் மனைவியின் குமாரன் பவானிசங்கரனுக்கு முடிசூட்டிச் சென்றான்.

கிழவன் சேதுபதியை அடக்கஞ் செய்துவிட்டுத் திரும்பியது தான் தாமதம். மறவர் குலத்தார் நாடு கூடிக் கிழவன் மருமகன் விஜய ரகுநாதனைப் பட்டத்தில் தூக்கி வைத்தனர். அப்போது மதுரை நாயக்க வேந்தரின் அரசாட்சி நிலைகுலைந்திருந்தது. மூல அரசின் நிலைகுலைவோ, சார்பு நாடான ராமநாதபுரத்திலும் தாக்கா நின்றது. பவானி சங்கரனும் நாட்டைப் பாழ்படுத்த நினைவு கொண்டான்.

ராமநாதபுரம் மறவர்கள் வீரத்துக்குப் புகழ் பெற்றவர்கள். அவர் குலத்தோரே சேதுபதிகளென்று சிறப்புப் பெற்றவர்கள். அந்த மரபிலே பிறந்தவன் விஜய ரகுநாதன். அவன் பரம பக்தன். குடிகளின் நன்மையையே பிரதானமாகக் கருதியவன். சில நூறு போர் வீரர்களை வைத்துக் கொண்டு, தஞ்சை மராட்டியப் படையைக் கதிகலங்க விரட்டிய வீரன். மறவர் வீரத்துக்கு ஓர் அரிய உதாரணம் அவன் வரலாறு.

இயற்கையிலேயே மதிவலியும் புயவலியும் வாய்ந்தவன் விஜய ரகுநாதன். ஆதலின், அரசின் நலங்கருதி, ராமநாதபுரத்தை எட்டுச் சீமைகளாக வகுத்தான்; எழுபத்திரண்டு பாளையக்காரரை அமைத்தான்; ஒவ்வொரு பாளையக்காரனும், தன் தன் பாளையத்தைப் பண்புடன் பரிபாலிக்குமாறு பணித்தான்; எல்லைப் புறங்களிலே கோட்டை கொத்தளங்களை நிருமித்தான். ராஜசிங்கமங்கலம், ஒரூர், அறந்தாங்கி, திருப்பத்தூர், பாம்பன் முதலிய இடங்களில் பலமான கோட்டைகள் எழும்பினன்.

நாட்டின் பாதுகாவலுக்கு அவ்விதம் வகை தேடியபின், குடி மக்களின் நலபலங்களைப் பெருக்குவதில் அந் நரபதி நாட்டங் கொண்டான். உதாரணமாக, நிலங்களை அளந்து வகுத்து, வரி விகிதத்தை ஒழுங்கு செய்தான்; பாளையக்காரர் ஆறிலொரு கடமையே கொள்ளலாமென விதித்தான்; அக்கடமைக்கு ஈடாக, வேண்டும்போது அன்னவர் ராஜ சேவகம் செய்ய வேண்டுமென ஆணை இட்டான்; மதுரையிலிருந்து வேளாளரை வருவித்துக் கிராமங்கள் தோறும் கணக்கரை நியமித்து, வரவு செலவை வரையறுத்தான்.

நாட்டினை ஒழுங்கு படுத்தவே, ராமநாதபுர மக்கள் நிம்மதி கொண்டனர்; விளைவு மிகுந்தது; வரிவருமானம் பெருகியது. நிதிச் சாலையில் தனமும் குவிந்தது. கொண்ட கடல் நீரை மீண்டும் மழையாக மேகம் பொழிவதே போல், வரி வருமானத்தை மக்களின் வளம் பெருகவே செலவிட்டான் அச்செம்மல். ராமேசுவர யாத்திரை போவோருக்கு ஆதரவாக நாடெங்கும் சத்திரஞ்சாவடிகள் சமைத்தான்; வழி நெடுகக் காவலாளரை நியமித்தான்; யாத்திரிகரை ஏற்றிச் செல்லத் தோணித் துறையிலும் பாம்பனிலும் ஓடங்களை வைத்தான்.

ரகுநாத சேதுபதி அங்ஙனமெல்லாம் செய்தபின்னர், ராஜதானியான ராமநாதபுரத்திலே ஓர் அழகிய மாளிகை எழுப்பினன். அதனை ராமலிங்க விலாசம் என்பர். மறவரின் வீரப்பிரதாபங்களையும் வெற்றி நிகழ்ச்சிகளையும் விளக்கவல்ல ஓவியங்கள் பல அம்மாளிகைச் சுவர்களை அலங்கரியா நின்றன. அவை உயிருள்ளன போல், நம் உள்ளத்தை யள்ளும் வனப்பும் வேலைப்பாடும் வாய்ந்தவை. இன்றும் அவற்றில் சில, சோபித்து நிற்பதைப் பார்க்கலாம்.

வேத மார்க்கத்திலும் வைதிக நெறியிலும் அவனுக்கு நம்பிக்கை அதிகம். எனவே, தான தர்மங்கள் செய்ய, அவன் முற்பட்டான். தராசில் அமர்ந்து, தன் எடையளவு தங்கத்தையும் ரத்தினங்களையும் நிறுத்து, ஏழை எளியவர்க்கும் வேதியர்க்கும் ஈந்தான்; அத்தியூற்று எனும் கிராமத்தைப் பதினைந்து பிராமண குடும்பங்களுக்கு மானியமாகக் கொடுத்தான். அவன் ஹிரண்ய கர்ப்ப யாகஞ் செய்த இடம் அக் கிராமமே. இதனை வலியுறுத்தச் செப்பேடும் கல் வெட்டும் உள.

ராமேசுவரத்தில் எழுந்தருளியுள்ள கோதண்டராம மூர்த்தியே, சேதுபதிகளின் குல தெய்வம். நாள்தோறும் மாலையிலே அவ்வள்ளல் ராமேசுவரஞ் சென்று, மூர்த்தியைத் தரிசிக்காமல், ஆகார, நித்திரை கொள்ளுதல் கிடையாது. சந்தியாகால பூஜை சமயம், அவன் அங்கிருப்பான். ராமநாதபுரத்துக்கும்

ராமேசுவரத்துக்கும் ஏறக் குறைய எழுபது மைல். பத்து மைலுக்கு ஓரிடத்தில், பாய்மா தயாராக இருக்கும். பரிமீதேறி அவன் தோணித் துறை சேர் வான். அங்கே பாம்பன் கால்வாய் கடக்க ஓடம் காத்திருக்கும்.

கோதண்ட ராம சுவாமிக்குத் தேர் திருநாள் என்றால், அவனுக் குப் பக்தி விசுவாசம் அதிகம். அவை மிகவும் சிறப்பாக நடை பெறவேண்டுமென்பதே அவன் ஆவல். ஆகையால், ஆண்டு தோறும் ஆலயத்துக்கு அளவிலா நிலங்களையும் தோட்டங்களையும் எழுதிவைப்பான். அந்நாளிலே அக்கடல் பக்கத்தில் முத்துக்குளி மிக விசேஷம். அம் முத்துக்குளி யின் வருவாய் அவனுக்குச் சொந்தம். ஓராண்டு கிடைத்த முத்து அனைத்தையும் ஆண்ட வனுக்கே அவன் சமர்ப்பித்து விட்டான்.

விஜய ரகுநாதன் பரமபக்தன், பாகவத சிரோன்மணி என்பது பாரெங்கும் பரந்தது. மதுரை நாய்க்க மன்னவனை விஜயரங்க சொக்கநாதன் என் பான், நம் சேதுபதியின் தெய்வ பக்தி கண்டு மெச்சி, அதன் பல னாக அழகிய துர்க்கா விக்கிர மொன்று பரிசளித்தான். அதனை ராமநாதபுரத்திலே ஆடம்பர மாகப் பிரதிஷ்டை செய்தான் விஜய ரகுநாதன். அச்சமயம் பாண்டிய நாட்டு மக்கள் அனை வரும் லட்சக்கணக்கில் திரண்டு வந்து, கும்பாபிஷேகங் கண்டு களித்தனர்.

நம் சேதுபதியின் காலத்திலே கிறிஸ்து மதம் அங்கே தலை தூக் கத் தொடங்கிற்று. கிறிஸ்து மதப் பாதிரிமாரும் உபதேசிகளும் தோன்றி, ஏசுமதப் பிரசாரஞ் செய்யலாயினர். கிழவன் சேது பதியும் சரி, விஜய ரகுநாதனும் சரி, சமரஸ நோக்கமே கொண் டவர்கள். ஆதலின், அம்மதப் பிர சாரத்தில் அன்னார் தலையிட வில்லை. என்றாலும், நாளடை விலே சேதுநாட்டில் கிறிஸ்தவ ரின் தொகை பெருத்தது. மக்க ளில் பலர் மதங்கெட்டு வந்த னர். அது கண்டு மறக்குல மக் கள் மனஞ் சகிக்கவில்லை.

விஜயரகுநாதனுக்கு ஒரு தமை யன் உண்டு. இவன் பெயர் வடுகநாதன். இவனே ஏசுமத போதங்களில் ஆழ்ந்து முடிவிலே அம்மதத்திலும் சேர்ந்துகொண் டான். சேதுபதியின் அண்ணனே நம் மதத்தைத் தழுவினான் என்று பாதிரிமாரும் உபதேசிகளும் தருக்கு மிகக் கொண்டனர்; சிலர் தலைகால் தெரியாமல், பலரையும் மதங்கெடுக்க முயன்றனர். அதன் மேல் விஜயரகுநாதன் வாளா இராமல் சமரஸத்தைச் சற்றே கட்டிவைத்துத் தலையிடலானான். இடவே, வைதிகரும் பிறரும் ஆறு தல் அடைந்தனர்.

போகபாக்கியங்களிலும் விஜய ரகுநாதன் மோகங் கொண் டவன். ஆதலின் பல மனைவியரை மணந்து கொண்டும், அவன் மோகம் தணியவில்லை. நாட்டிலே நல்லெழிலும் சாயலும் வாய்ந்த மாதர் பலரைக் காதல் மனைவிய ராகக் கொண்டான். அவன் அந் தப்புரத்திலே அழகு மிக்க முந் நூற்று அறுபதின்மர் இருந்தனர். புத்திர பாக்கியத்திலும் அவன் குறையவில்லை. ஒரு நூறு பேர் ஆணும் பெண்ணுமாக — அவனுக் குப் பிறந்தனர். இவ்வளவு பாக் கியம் படைத்தும் என்ன? அவ னுக்குப்பின் பட்டமேற மைந்தர் ஒருவர்கூட இல்லாது போயினர். இதன் காரணம் பின்பு புலப்படும்.

கிழவன் சேதுபதியால் முடிசூட்டப் பெற்றும், அரியணையை இழந்தான் அல்லவா பவானி சங்கரத்தேவன். இவன் சூழ்ச்சியில் மிக்கவன். மறவர் குலம் மறுத்துத் தள்ளியும், அரசின் மீதிருந்த ஆசை இவனை விட்டகல வில்லை. ஆதலின், சூழ்ச்சி புரிவதற்காகத் தஞ்சை சேர்ந்தான். தஞ்சை வேந்தன் சரபோஜியும் தஞ்சம் அளித்தான். ஆயினும், படைத்துணை தர அவன் ஒப்பவில்லை. பவானியோ தஞ்சைப் பெருமக்களில் சிலரைக் கண்டு, ஆசைவலை வீசினன்; படைத் துணை தரின், அறந்தாங்கிச் சீமையை அளிப்பதாக உரைத்தான். மண்ணாசை, யாரை விட்டது? சரபோஜி மன்னவன் ஒருவாறு இசைந்தான்.

பின்னர் அப்பவானி சங்கரன், புதுக்கோட்டை சேர்ந்து தொண்டைமானிடமும் துணைப் படை வேண்டினன். கிழவன் சேதுபதியே புதுக்கோட்டையை நிலைக்கவைத்தவன். ஆதலின், அக்கிழவனின் அபிமான புத்திரனுக்குத் துணை போதல் கடமையெனக் கொண்டான் தொண்டைமான். பவானிக்கோ பூரிப்பு மிகுந்துவிட்டது. இரண்டு வேந்தரின் துணையிருக்கையில் காரியம் கைகூடும் எனும் உறுதியும் பிறந்தது. 1722-ஆம் வருஷம் தஞ்சைச் சேனை கிளம்பிற்று. இதற்கு ஆனந்த ராவ் பேஷ்வா தலைமை பூண்டான். புதுக்கோட்டைப் படைக்கோ தொண்டைமானே தளபதியாக அமர்ந்தான்.

இரண்டு சேனைகளும் எக்காளமாகச் சென்றன; தஞ்சைக்கும் ராமநாதபுரத்துக்கும் எல்லையான அறந்தாங்கியில் பாடி கொண்டன படாடோபமாக. விஜயரகுநாதனின் ஒற்றர் வாளா இருக்கவில்லை. முன்னதாகவே, அறிவித்தனர் சேதுபதிக்கு. ரகுநாதனது நேர்மை கண்டு களித்து நின்ற அத்தனை பாளையக்காரரும், தம் தம் படையுடன் சிறி எழுந்தனர். மகிமை மிக்க நம் மன்னவனை எதிர்க்கும் பகைவனைச் சும்மா விடுவதோ என்று மக்களும் ஆவேசத்துடன் கிளம்பினர்.

இரு திறத்துப் படைகளும் அறந்தாங்கிக்கு அப்பால் சந்தித்தன. மண்ணாசை கொண்ட தஞ்சை வீரர் தணியா வீரங்காட்டிச் சமர் தொடுத்தனர். நன்றியைப் புலப்படுத்தத் தொண்டைமான் படையும் மண்டிப் பொருதது. மறவர் சேனையோ மகா உக்கிரத்துடன் சமரணகளத்தில் இறங்கிக் கொடும்போர் முறுக்கிற்று. பிறவிப் பெருவீரனை விஜய ரகுநாதனே முன்னின்று தன் சேனையை நடத்தினன். அறந்தாங்கி ஒரு பெரும் படுகளமாயிற்று. முதல் நாள் சண்டையிலேயே மகாராஷ்டிரர் களைத்து நின்றனர்; மறுதினம் நடந்த போரிலோ தொண்டைமான் வீரரும் வேசாரிப் போயினர். பவானி சங்கரனே அது கண்டு பதைத்தழிந்தான். எனினும், முனைந்து பார்க்கலாமென மூன்றாவது தினமும் மொய்யமர் செய்தான்.

விஜய ரகுநாதன் வீராவேசங் கொள்வது கண்டு, பாளையக்காரரும் மறவர் மரபாரும் மூர்க்கமாய்ப் போர் துவக்கினர். மறவரின் வாள்வலியும் தோள்வலியுங் கண்டு, தஞ்சை வீரர் செயலழிந்தனர்; புதுக்கோட்டையின் படை ஒரே பரிபவம் எய்தியது. பவானியும் படுகாய மடைந்து மண்ணில் சாய்ந்தான். முடிவில் அவனைத் தூக்கிக்கொண்டு, வந்த வழி நோக்கினர் பகைவர். முதுகு

காட்டி ஓடும் பகைவரைத் துரத்தி வாட்ட விஜய ரகுநாதன் விரும்ப வில்லை. ஆதலின், எஞ்சிய பகைவர் உயிரிழவாமல், குலதெய்வத்தை வணங்கி விரைந்தனர். வெற்றி மாலையுடன் விஜய ரகுநாதனும் அவன் பாளையக்காரரும் படு களத்தை விட்டு அகன்றனர். சற்றே அவர்கள் அறந்தாங்கிக் கோட்டையில் தங்கிக் களையாற நேர்ந்தது. படுகளத்தில் நேர்ந்த உயிர்ச் சேத மிகுதியும், காலத்தின் கோலமும் கூடிக்கொள்ளவே அறந்தாங்கியில் வைசூரி தோன்றியது.

கொள்ளை நோய் தோன்றவே, வீர மறவரில் பலர் அதற்கு இரையாயினர். அது கண்டு பெரிதும் வருந்தினன் விஜய ரகுநாதன். இந் நிலையில் அந்நோய் நம் சேதுபதியின் குடும்பத்தையும் பற்றிக் கொண்டது. கொள்ளவே, அவன் மனைவியரில் எண்மரும் மக்களில் பலரும் உயிரிழந்தனர். அவ்வேளை விஜய ரகுநாதனும் அந்நோய்க்கு ஆளானன். மரணத் தறுவாயில் அவனை ராமநாதபுரத்திற்குத் தூக்கிச் சென்றனர். சென்றதும் அவ் வீர வேந்தனின் ஆவி பறந்து விட்டது. காதல் மனைவியரில் பலர் உடன்கட்டையேறி உயிரை விடுத்தனர். ராமநாதபுரத்தின் துர்ப்பாக்கியம் அத் தீர வேந்தன் காலகதி யானன். அவனுக்குப் பின்புதான் ராமநாதபுரம் மூன்று துண்டாகிறது. ஒன்று ராமநாதபுரமாக நிலைக்க, மற்றென்று சிவகங்கையாக மாறுகிறது. இன்னெரு பாகம் தஞ்சையைச் சேர்கிறது.

ராமேசுவர யாத்திரிகருக்கு விஜய ரகுநாதன் வசதி பலவும் தேடித் தந்தனன் அல்லவா? அதனுல் வடக்கே காசியிலிருந்தும் பற்பலர் சேதுவுக்கு வரலாயினர். பதினுயிரக் கணக்கில் அன்னர் வருதல் கண்டு களித்தான் ரகுநாதன். தன் மருமகர் இருவரையும் அன்னவருக்கு வசதி தேடித் தரும் வேலையில் அமர்த்தினன். தோணித் துறையில் ஒருவனும் பாம்பனில் ஒருவனுமாக இருந்து அவ் விருவரும் யாத்திரிகருக்குத் தொண்டாற்றி வந்தனர். அச்சமயம் பாம்பனி லிருந்து தனுஷ்கோடிக்கு நல்ல பாதை போட வேண்டி, அவர்கள் யாத்திரிகரிடமிருந்து சிறிது தொகை வசூலிக்கலாயினர்.

அது கேட்டு விஜய ரகுநாதன் பொறுக்கவில்லை. "சேதுபதி என்று பெயர் பெற்ருேம். யாத்திரிகருக்கு ஊழியம் புரியவே சத்திரம் சாவடிகள் அமைத்தோம்; போக்குவரவுக்கு ஓடங்களும் அமைத்தோம். இதற்குக் கூலி வாங்கிக் கொண்டால், தொண்டின் பெருமை போய் விடுகிறது; தர்மத்தின் நற்பெயரும் மாசடைகிறது. இவ்வளவுக்கும் காரணமான மருகர் இருவரையும் உயிர் வாங்கிவிட வேண்டும்" என்று ஆணை யிட்டுவிட்டான். புத்திரிகள் இருவரும் வந்து வேண்டிக்கொண்டும், ஆணை ஆணைதான், அதனை மாற்ற இயலாது என்று சொல்லிவிட்டான். குலதெய்வத்தை வணங்க வருவோரிடமா கைக் கூலியாகக் காசு வாங்குவது என்பதே அவன் கருத்து!

✲

"கல்யாணம் என்பது ஒரு லாட்டரிச் சீட்டு. அதில், ஆண்கள் தங்கள் சுதந்தரத்தையும் பெண்கள் தங்கள் சந்தோஷத்தையும் இழந்து விடுகிறர்கள்."

—ஸ்ரீமதி ரியோ

தமிழ் நாட்டிலும் பெங்களூரிலும்

பல்லாயிரக்கணக்கான மக்கள் - -

- - - பார்த்து மகிழுகின்றனர் !

நடிகர்கள் : நாகையா, கமலா கோட்னீஸ்

தயாரிப்பு : தமிழ் நாடு டாக்கீஸ்

டைரக்ஷன் : எஸ். சௌந்தரராஜன்

தமிழ் நாட்டிற்கும் மைசூர் சமஸ்தானத்திற்கும் விநியோகஸ்தர்கள் :

சௌத் இந்தியா பிக்சர்ஸ்

லிமிடெட்

காரைக்குடி

தேயிலையின் சரிதம்—5



தேயிலை உலர்த்தும் இயந்திரத்திற்குள் தள்ளப்படுதல்

தொழிற்சாலை உண்மைகள்

சுருட்டும் இயந்திரத்திலிருந்து வரும் தேயிலைகளை ஒரு அளவுக்குட்பட்ட உஷ்ணமுள்ள இடத்தில் பரப்பப்படுகிறது. இதன் மூலம் புளிக்க வைக்க ஸௌக்கியமாகிறது.

இந்த நிலைமையில் இலைகள் பள பளவென்று உயர்ந்த செம்பு நிறமாகிறது. வேண்டிய அளவு புளிப்பை அடைந்ததும் இலைகள் உலர்த்த தயாராகிறது. உலர்த்துவதால் தேயிலையின் வாசனை பானமாக்கும் வரையில் காப்பாற்றப்படுகிறது.

உலர்த்தப்படும் அறைகளில் மெள்ள நகரும் தாம்பாளங்களில் நிரப்பப்பட்டு உஷ்ணக் காற்று ஊதப்படுகிறது. இந்தக் காற்றின் உஷ்ணம் படிப்படியாய் குறைக்கப்படுகிறது. இங்கு தான் சாதாரணமாய் நாம் பார்க்கும் தேயிலையின் நிறத்தை அடைகிறது.

வெகு சீக்கிரமே இந்தத் தேயிலை உங்கள் கோப்பைக்கு வரத் தயாராகிறது.

ப்ரூக் பாண்ட்

ஓடிப்போன மனிதன்

தஞ்சன்

நாங்க ளெல்லாம் கூடி யொரு
நவ மனிதன் செய்திட்டோம்.
தூங்கி யவன் விழாமலே
துண்டுக் கோலே முட்டிட்டோம்.

குதித் தவனும் ஓடிடாமல்
குறைத் தொரு கால் வெட்டிட்டோம்.
மதிப்பிலாத சள்ளுப் பேச்சுப்
பேசும் நாவை அரிந்திட்டோம்.

பல்லேயிளித் தங்கே அவன்
பாதுகாவல் செய்து நிற்க,
உல்லாச மாய் நாங்கள் வீட்டில்
உறங்கி மயங்க ஓடிட்டோம்.

அன்றிரவே மாய மாக
அந்த நபர் மறைந்திட்டான்.
சென்று நாங்கள் பார்க்கையிலே
சிதறிக் கிடந்த மண் கண்டோம்.

மாயப் பென்சில்

பரதன்

ராமன் நான்காம் வகுப்பு வாசித்துக் கொண்டிருந்தான். அவன் கெட்டிக்காரன். கணக்கைத் தவிர, எல்லாப் பாடங்களிலும் அவன் வகுப்பில் முதலாவதாய் இருப்பான். ஆனல், கணக்கு மாத்திரம் வராது. அதன் மேல் அவனுக்கு ரொம்ப வெறுப்பு. அதில் அவன் கவனம் செலுத்துவதே இல்லை. பத்துக்கு இரண்டு அல்லது மூன்றுக்கு மேல் மார்க் எடுக்க, அவனல் முடியவில்லை.

ஒரு நாள் அவன் பள்ளிக்கூடம் போய்க் கொண்டிருந்த போது, தற்செயலாய் ஒரு பென்சிலை வழியிலே கண்டெடுத்தான். அது ஒரு மாயப் பென்சில்; ஒரு மந்திரவாதியின் பென்சில். அவர் நடந்து போகும்போது, தவறிக் கீழே போட்டு விட்டார். பார்ப்பதற்கு அந்தப் பென்சில் மிக்க அழகாய் இருந்தது. ராமன் யாருக்கும் தெரியாமல் அந்தப் பென்சிலைத் தன் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டு, பள்ளிக்கூடத்துக்குச் சென்ருன்.

அது மாயப் பென்சில் என்பது அவனுக்குத் தெரியாது. உபாத்தியாயர் கணக்குப் போட்டதும், பென்சிலை எடுத்து எழுத ஆரம்பித்தான். என்ன ஆச்சரியம்! பென்சில் தானகவே கூட்டல், பெருக்கல் எல்லாம் செய்து, கணக்கைப் போட்டு, விடையையும் எழுதிவிட்டது! அவனுக்கு உண்டான ஆனந்தத்துக்கு அளவே இல்லை. அவன் பென்சிலைக் கொஞ்சி அதற்கு ஒரு முத்தமும் அளித்தான்.

உபாத்தியாயர் அவனுடைய நோட்டுப்புத்தகத்தை வாங்கி, அவன் போட்ட கணக்கைப் பார்த்தார். கணக்குச் சரியாய் இருந்தது. வழி, முறை எல்லாம் அழகாய் இருந்தது. அதை நம்ப அவரால் முடியவே இல்லை. அவர் ராமனைத் தட்டிக்கொடுத்து, பத்துக்குப் பத்து மார்க் கொடுத்தார்.

அடுத்த பாடம் சித்திரம். உபாத்தியாயர் ஒரு யானை வரையச் சொன்னர். ராமன் பென்சிலை எடுத்துக் கடுதாசியில் வைத்ததும், பென்சில் தன்னிச்சையாய் வளைந்து நெளிந்து ஓர் அழகான யானைப் படம் வரைந்தது. அதைப் பார்த்துப் பார்த்து ராமனே மயங்கினன். ஆசிரியர் அந்தப் படத்தைப் பார்த்துப் புகழ்ந்தார். ராமனுக்கு உண்டான சந்தோஷத்துக்கு அளவே இல்லை. அவன் மறுபடியும் பென்சிலுக்கு ஒரு முத்தம் தந்தான்.

அடுத்த பாடம் கதை. ஆசிரியர் பையன்களுக்குக் கதை

சொல்லிக் கொண்டிருந்தார். எல்லோரும் மௌனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால், ராமனின் பென்சிலுக்கு, பேசாமல் சும்மா இருக்க முடியவில்லை. அது குதித்து வந்து, ராமனின் கையில் உட்கார்ந்தது. மேஜை, நாற்காலி, சுவர்- எல்லா இடங்களிலும் பலவிதமான யானைகளின் படங்களை வரையத் தொடங்கியது. ஆசிரியர் ராமனைத் திட்டினார். ராமன் நிறுத்த முயன்றான். ஆனால், அது மாயப் பென்சில் அல்லவா? அது தன் இஷ்டப்படியெல்லாம் படங்களை வரைந்துவிட்டு, கடைசியில் தானாக நின்றதே யொழிய, ராமனைச் சற்றும் பொருட்படுத்த வில்லை.

அவன் மிக்க வருத்தத்துடன் வீட்டுக்குப் போனான். அவன் தங்கை புதிதாய் ஒரு நோட்டுப் புத்தகம் வாங்கிக் கொண்டு வந்திருந்தாள். மாயப் பென்சில் அந்த நோட்டுப் புத்தகம் முழுவதிலும் படம் வரைந்து நாசமாக்கிற்று. அவள் அழுதாள். தன் தந்தையிடம் சென்று முறையிட்டாள். அவர் ராமனை அழைத்து விசாரித்



யானை எவ்வளவு அழகாய் இருக்கிறது! யார் போட்டது? ராமனின் பென்ஸில்தான் போட்டது. அப்படியானால், ராமனா போட்டான்? அதுதான் இல்லை. அது அந்த மாயப் பென்ஸிலின் வேலை. படியுங்கள், கதையை; தெரிகிறது.

தார். ராமன் பென்சிலைக் கொண்டுபோய், அவரிடம் காட்டி, "எனக்கு ஒன்றும் தெரியாது, அப்பா. இத்தனையும் இந்தப் பென்சில் செய்த வேலை" என்றான். அது தனக்கு நடுவழியிலே அகப்பட்ட விவரத்தையும் சொன்னான். அவர் பென்சிலை வாங்கிப் பார்த்தார். அதில் மந்திரவாதியின் பெயர் எழுதியிருந்தது. அவர் பார்த்துக்கொண்டிருந்த போதே, பென்சில் அவர் கையிலிருந்து நழுவிக் குதித்து, சுவர் முழுவதிலும் கோடு போட்டு, அதை நாசமாக்கிற்று. அவர் ரொம்பப் பயந்துபோனார். பென்சிலை ராமனிடம் கொடுத்து, "முட்டாள், இதை ஏன் நீ எடுத்தாய்? ஓடிப்போய் மந்திரவாதியிடம் கொடுத்துவிட்டு வா. நம்மிடம் இருந்தால் ஆபத்து" என்றார்.

ராமன் அழுதுகொண்டே மந்திரவாதியின் வீட்டுக்குப் போய், பென்சிலை அவரிடம் கொடுத்து, நடந்த விஷயத்தை யெல்லாம் சொல்லி, "பென்சிலை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்" என்றான்.

மந்திரவாதி சிரித்தார். பின்பு, அவர் ராமனை நோக்கி, "பென்சிலை வாங்கிக்கொள்ளுகிறேன். ஆனால், நீ ஓர் உறுதி கொடுக்க வேண்டும். இன்று முதல் நீ கணக்குப் பாடத்தை, கஷ்டப்பட்டுக் கற்க வேண்டும்; சரியாய்க் கணக்குப் போட வேண்டும். அப்படியானால் தான், பென்சிலை வாங்கிக் கொள்ளுவேன்" என்றார்.

"ஆகட்டும், அப்படியே செய்கிறேன். இதை மட்டும் நீங்கள் வாங்கிக் கொண்டு விடுங்கள்" என்று ராமன் கெஞ்சினான்.

மந்திரவாதி, பென்சிலை வாங்கிக் கொண்டார். ராமனும் அன்று முதல், சிரமப்பட்டு, கணக்குகளைக் கற்றான். அடுத்த வருஷம் பரிட்சையில், கணக்குப் பாடத்திலே, அவன் நூற்றுக்கு நூறு மார்க் வாங்கி விட்டான். அப்போது அவனுக்கே, ஆச்சரியமாய்ப் போயிற்று. ஒருவேளை அந்த மாயப் பென்சில் திரும்பவும் தன் பையிலே வந்திருக்கிறதோ என்று பயந்து அதைத் தொட்டுப் பார்த்தான். இல்லை; அது சாதாரணமான அவன் சொந்தப் பென்சில்தான். அவன் களிப்படைந்தான்.

✲

விசித்திரக் கணக்கு

கேள்வி: ஒரு மிருகக் காட்சி சாலையில் ஒருவன் 36 தலைகள் எண்ணினான்; 100 கால்கள் எண்ணினான். அங்கே இருந்த பட்சிகள் எவ்வளவு? மிருகங்கள் எவ்வளவு? சொல்லுங்கள் பார்க்கலாம்.

விடை: 22 பட்சிகள்: 14 மிருகங்கள்.

புத்தக உலகம்

நீலமணி (சிறுகதைகள்): ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன். வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர். விலை: சாதா பைண்ட் ரூ. 2—0—0; அட்டை பைண்டு ரூ. 2—8—0.

படிப்பதற்கினிய பதினாறு சிறு கதைகள் அடங்கிய ஒரு தொகுப்பு இது. 'விடுதலை' என்ற சோகக் கதையும், 'சாதித் தடை,' 'பிராயச்சித்தம்' என்ற இன்பக் கதைகளும் உருக்கமான உணர்ச்சிகள் நிறைந்திருக்கின்றன. 'ஜகத்மித்யை,' 'துப்பறிபவன்,' 'அஹிம்சை', 'ஆபீஸ் மானேஜர்' போன்றவை, நல்ல வாழ்க்கைச் சித்திரங்களாகும். பற்பல விதமான கதைகள். தளுக்கோ, மெருகோ, வீண் வர்ணனையோ இல்லாமல், நேருக்கு நேரே கதை சொல்லுவதைப் போல, சுவாரஸ்யமான முறையில், மிக்க எளிய நடையில், ஆசிரியர் இவைகளை வரைந்திருக்கிறார்.

நமது பிற்போக்கு: ஆசிரியர்: வெ. சாமிநாத சர்மா. வெளியிட்டோர்: சக்தி காரியாலயம், ஜி. டி., சென்னை. விலை: ரூ. 1—0—0.

நாம் சீரழிந்து கிடக்கிறோம்; அடிமைப் பட்டுக் கிடக்கிறோம்; உயிரற்றுக் கிடக்கிறோம்; உலக ஓட்டத்திலே பின் தங்கி நிற்கிறோம் – இதற்கெல்லாம் என்ன காரணங்கள்? அரசியலிலே சரியான தலைவர்களில்லை; வாழ்வைப் பண்படுத்தி ருசியூட்டும் கலைகளில்லை; உணர்ச்சிகளைப் பதன்படுத்தி உள்ளத்தை உருவாக்கும் இலக்கியமில்லை – எதிலும் ஓர் அலங்கோலம் நிலவுகிறது. அந்த அலங்கோலத்திலிருந்து நிமிர வழியில்லையா? நம் குறைகளை ஆவேசத்தோடும், ஆனால் மிகுந்த தெளிவோடும் அலசி, வளர்ச்சி மார்க்கங்களை, ஒரு விறு விறுப்புடன் இந்த நூல் எடுத்துச் சொல்கிறது. தேச பக்தியும் கலைவளர்ச்சி ஆர்வமும் உள்ள அனைவரும் படிக்கவேண்டிய நூல்.

இசைத் தமிழ்: ஆசிரியர்: நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை. வெளியிட்டோர்: தமிழ்ப்பண்ணை, தியாகராய நகர், சென்னை. விலை ரூ. 1—8—0

தமிழிசை இயக்கம் வலுத்து வரும் இந்த நாளில், அதை ஆதரிப்பவர்களும் சரி, எதிர்ப்பவர்களும் சரி, வழி தவறி வாதிப்பது சர்வசாதாரணமாயிருக்கிறது. தமிழ் நாட்டிலே சங்கீதத்தை நன்றாய் வளர்க்கவேண்டுமானால், தமிழ் சாகித்தியங்கள் புதிது புதிதாய்த் தோன்றவேண்டியது அவசியமாகும். ஆனால், கர்னாடக சங்கீதம் வளர்ந்துள்ள வரலாற்றையும் அதன் ஐதீகங்களையும் மறந்து, புதிதாய்ச் சங்கீதக் கலை ஒன்றைத் தமிழிலே சிருஷ்டித்து விட முடியாது. தமிழிசையின் அவசியத்தை வற்புறுத்தும் நாமக்கல் கவிஞர், தமிழ் நாட்டுச் சங்கீதக் கலை, சிலப்பதிகார சங்க நூல்களின் காலத்திலிருந்து, இன்று வரை எப்படியெல்லாம் வளர்ந்து வந்திருக்கிறது என்ற வரலாற்றை, இதில் எழுதியிருக்கிறார். முக்கியமாக, இன்று நடை முறையிலிருக்கும் கர்னாடக சங்கீதம் உருவான விதத்தை நேர்த்தியாய் விவரித்திருக்கிறார். தமிழிசையை எதிர்ப்பவர்கள் மட்டுமல்ல, தமிழிசைக்காரர்களுமே, விருப்பு வெறுப்பற்ற இந்தப் புத்தகத்தை அவசியம் படிக்கவேண்டும்.

காதற் கதை: மொழிபெயர்த்தவர்: க. நா. சுப்ரமண்யம். வெளியிட்டோர்: ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி, சென்னை. விலை: ரூ 0-8-0.

இது ஓர் இத்தாலியக் கதை. கிரேஸியா டெலடா என்ற ஆசிரியை எழுதியது. ஒருவனை நேரே பாராமலே அவனுடைய கதையைப் பார்த்து ஒருத்தி அவனிடம் காதல் கொண்டு விடுகிறாள். கடைசியில் அவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்க, காதல் பூர்த்தியும் பெறுகிறது. இதுதான் கதையின் மூலக் கருத்து. கண்டு பழகி நீண்டகாலம்

இன்ப துன்பங்களை யெல்லாம் கலந்தனுபவித்த பின் ஏற்படும் உடன் உணர்வும் அன்பும் பாசமும் முதிர்ந்த காதல் அல்ல; கண்டதும் காதல் கூட அல்ல; காணுமலே காதல். இதை வெகு சாமர்த்தியமாகவே சித்திரித்திருக்கிருள் ஆசிரியை. மொழி பெயர்ப்பு நன்ருய் இருக்கிறது.

காதலர் உள்ளம்: மொழிபெயர்த்தவர்: எம். எல். சபரிராஜன். வெளியிட்டோர்: நவயுகப் பிரசுராலயம், காரைக்குடி. விலை: ரூ 1—12—0.

பிரபல ஜெர்மன் நாவலாசிரியர் லியானுர்ட் பிராங்க் என்பவர் எழுதிய ஒரு சிறு நாவல். ராணுவத்தில் உள்ள இரு நண்பர்களில் ஒருவன், தப்பி வீடுவந்து சேருகிருன். மற்றவனின் மனைவியைக் காதலிக்கிருன். அவளோடு வாழ்க்கையும் நடத்துகிருன். கணவன் திரும்பிவந்து பார்க்கிருன். ஆத்திர மடைகிருன். நண்பனைக் கொல்ல எண்ணுகிருன். மனைவி தலையிட்டுக் கெஞ்சவே, பச்சாதாபங் கொண்டு அந்த எண்ணத்தைக் கணவன் கைவிடுகிருன். நண்பனும் காதலியும் ஊரையே விட்டு வெளியேறுகிருர்கள். இந்தியாவின் பல பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு விட்டதாம் இந்தக் கதை. தமிழிலும் இப்பொழுது வந்திருக்கிறது. கதை மிகவும் ரசமான முறையிலே எழுதப்பட் டிருக்கிறது. சபரிராஜன் அருமையாய் மொழிபெயர்த் திருக்கிருர்.

இலக்கிய விருந்து: ஆசிரியர்: வி. ஆர். எம். செட்டியார், பி.ஏ. வெளியிட்டோர்: பாரதசக்தி நிலையம், புதுவை. விலை ரூ 0—10.—0

கதை, கட்டுரை, விமர்சனம், மொழி பெயர்ப்பு முதலியன அடங்கிய ஒரு கதம்பம் இந்த நூல். "முதிர்ந்த காதல் உணர்ச்சிக் கோபுரம். சிந்தனைத் தீபம் போல் எண்ணங்கள் சுடர்விட் டெரிகின்றன. உயர்ந்த உண்மைக் காதலின் இதயத்திலே கவிதை மின்னி மின்னி கர்ஜிக்கிறது. காதலை விளக்கும் சொற்கள் கவிதா சன்னதச் சிகரத்தில் விந்தைச் சிறகு பெற்றுப் பறக்கின்றன. கண்கள் மின்னுகின்றன. கண்ணிற் கவிதை தாங்கித் தீ விழிக்கும் கவிராஜசிங்கம் ஆத்ம விமர்சனம் செய்யும்போது, கவிதை வீர சௌந்தரியம் அடைகிறது" என்ற மாதிரி நடையில், தற்கால மறுமலர்ச்சித் தமிழ் இலக்கியத்தை யெல்லாம் விமர்சனம் செய்கிருர் ஆசிரியர்.

ஜயபேரிகை: வெளியிட்டோர்: இளைஞர் சங்கம், ஆழ்வார் திருநகரி.

கதைகள், கட்டுரைகள் அடங்கிய ஒரு தொகுதி. டி.கே.ஸி., எஸ். வையாபுரிப் பிள்ளை, ஏ. என். மகரபூஷணம், அ. சீனிவாச ராகவன் போன்ற பல அறிஞர்களுடைய கட்டுரைகள் இதில் காணப்படுகின்றன. தொகுதி முழுவதும் ஓர் இலக்கிய மணம் கமழ்கிறது. தினுசு தினுசான கட்டுரைகள், புதுமையான கதைகள், பழமையும் புதுமையுமான கவிகள் முதலியன இந்தத் தொகுதியை அலங்கரிக்கின்றன.

தமிழ் மலர்: பதிப்பாசிரியர்: தி. மு. ரா: வெளியிட்டோர்: தமிழ் மலர் நிலையம், திருமானூர், திருச்சி. விலை: ரூ 1—0—0.

மாதம் ஒரு புத்தக வரிசையிலே தோன்றியிருக்கும் புதிய மலர்களில் இதுவும் ஒன்று. சுவாமி சுத்தானந்தர், க. நா. சுப்ரமண்யம், சு. குருசாமி முதலிய பல எழுத்தாளர்கள் இதில் கதைகளும் கட்டுரைகளும் கவிதைகளும் எழுதி யிருக்கிருர்கள். எட்டுக் கதைகளும் ஐந்து கவிதைகளும் அடங்கி யிருக்கின்றன. கஷ்டப்பட்டுப் படித்துப் பொருள் விளங்கிக் சிரமப் படவேண்டிய முறையில் இல்லாமல், எளிதில் ரசிக்கத்தக்க கதைகளும் கட்டுரைகளுமே பூராவும் அடங்கி யிருப்பதால், இது பொழுது போக்குவதற் கேற்ற ஒரு சாதனமாகும்.

நமது தாய்நாடு: வெளியிட்டோர்: ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை. விலை: ரூ 1-0-0.

ஸ்ரீ விவேகானந்தர் வேதாந்த மார்க்கத்திலே பல அரிய தத்துவங்களை எடுத்துக் கூறியிருப்பது போலவே

தேச முன்னேற்றத்துக்கான பல சிறந்த யோசனைகளையும் கூறியிருக்கிறார். அவர் அன்று கூறிய விஷயங்களில் பல, இன்றைய பாரத நாட்டுக்கும் பொருத்தமானவையா யிருப்பது, அதிசயிக்கத்தக்க விஷயம். நாம் எத்தகைய சீர்திருத்தம் செய்து கொண்டாலும், அது நம்முடைய புராதன நாகரிகத்துக்கு முரண்படாததாய் இருக்க வேண்டுமென்பதை, சுவாமிகள் பல இடங்களில் வற்புறுத்திக் கூறுகிறார். அவர் அருளியிருக்கும் உபதேசங்கள் ஒவ்வொன்றிலும் தேசபக்தி ததும்புகிறது. "தீரச் சிறுவர்களே, நீங்கள் அனைவரும் அரும்பெருங் காரியங்களைச் செய்யப் பிறந்தவர்களென்று நம்புங்கள்" என்று அவர் உறுதியாகக் கூறும்போது, நம்மையும் அறியாமல் நமக்கு ஒரு தெம்பு உண்டாகிறது. அருமையான வாக்குகள் நிறைந்த ஒரு நூல்.

ஜயமணி: ஆசிரியர்: ஸ்ரீ சுத்தானந்த பாரதியார். வெளியிட்டோர்: அன்பு நிலையம், ராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா. விலை: ரூ 1—4—0.

இது ஒரு நாடகம். ஸ்ரீ பாரதியார், தம்முடைய பதினேழாவது வயதில் கண்ட ஓர் அனுபவத்தைக் கொண்டு இந்த நாடகத்தை எழுதியிருக்கிறாராம். இது சமூக சம்பந்தமான நாடகம்; சமூகத்தின் உயர்வு தாழ்வுகளைக் குறிப்பிட்டு, ஆண் – பெண் இருவரின் குணதோஷங்களையும் எடுத்துக்காட்ட முயலுகிறது. கதாநாயகி ஜயலட்சுமியும் கதாநாயகன் மணியும், உலக இன்பங்களில் மூழ்கி மெய்ப்பொருளை மறந்து போகிறார்கள். இறுதியில், புத்துணர்வு பெற்று, 'சுத்த சக்தி'யைத் துணையாகக் கொண்டு, உலகத்துக்குச் சேவை செய்யத் தொடங்குகிறார்கள். ஆரம்பத்திலிருந்து கடைசி வரை, சம்பாஷணையில் வீரச்சுவை பரிமளிக்கிறது. குடும்ப வாழ்க்கையில் தினசரி நிகழும் பல சம்பவங்களிலும் கூட, அந்த வீரச்சுவை ததும்புகிறது. வீரமும் வேதாந்தமும் இழைந்த ஒரு பின்னல் இது.

பெண் தெய்வம்: ஆசிரியர்: பி. எம். கண்ணன். வெளியிட்டோர்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை. விலை: ரூ 4—0—0.

"சொந்தக் கற்பனையைக் கொண்டு ஒரு நாவல் எழுதவேண்டும்" என்ற ஆசையால், ஆசிரியர் இதை எழுதியிருக்கிறார். சாதாரண மனிதர்கள் தான், இதன் பாத்திரங்கள். சாமான்ய சம்பவங்களே இதில் நிறைந்திருக்கின்றன. கதையில் வரும் காட்சிகள் அனைத்தும், ஆசிரியரின் கூர்ந்த அவதான சக்தியைக் காட்டுகின்றன. கதாநாயகி லலிதாவும், கதாநாயகன் சந்திரனும் சந்திக்கும் பல இடங்களும் இயற்கையான அன்பொளியை வீசி நமக்கு இன்பமூட்டுகின்றன. சில இடங்கள் அநாவசிய வளர்த்தல் போலும் மற்றும் சில இடங்கள் அநாவசியக் குறுக்கல் போலும் இருக்கின்றன. விசேஷமாய் உணர்ச்சியைக் கிளரும் கட்டம் எதுவும் இல்லை. 'பெண் தெய்வம்' என்ற சிறப்புப் பெயருக்கான காரணமும் புலனாகவில்லை. என்றாலும், லளிதமான நடையில், எளிய உணர்ச்சிகளைச் சித்திரித்து, மங்களமாய் முடியும் ஓர் அசல் தமிழ் நாவல் இது.

அமெரிக்காவைப் பார்: ஆசிரியர்: எஸ். ஏ. ரஹீம். வெளியிட்டோர்: தமிழ்ப் பண்ணை, தியாகராயநகர், சென்னை. விலை: ரூ 0—8—0.

'அடிமை இந்தியனே, அமெரிக்காவைப் பார். ருஷியாவைப் பார்' என்று ஆத்திரம் நிறைந்த தேசியத் துடிப்போடு, அவ்விரு நாடுகளின் சுதந்தர சாதனைகளையும் முன்னேற்ற அபிவிருத்திகளையும் சுருக்கமாய் வர்ணித்து, நிர்க்கதியான நம் நிலைமைகளை அவைகளோடு ஒப்பிட்டுக் காட்டுகிறார் ஆசிரியர். இந்திய விடுதலை ஆர்வம் கொண்ட அனைவரும் இத்தகைய நூல்களைப் படிப்பது அவசியமாகும்.

கதம்பம் (தமிழ் டைஜஸ்ட்): வெளியிட்டோர்: கதம்பம் காரியாலயம், தியாகராயநகர், சென்னை. விலை: ரூ 0—12—0.

கண்ணையும் மனதையும் கவரும் ஓர் அருமையான மாதாந்தரப் பிரசுரம் இது. ஆங்கிலத்தில் எத்தனையோ

விதமான 'டைஜஸ்'டுகள் வெளியாகின்றன. 'டைஜஸ்ட்' என்ருல், பற்பல பத்திரிகைகளிலிருந்தும் அரிய கதைகள், கட்டுரைகள், குறிப்புகளைக் கொய்து, அழகிய முறையில் சுருக்கிப் பதிப்பிப்பதுதான். 'கதம்பம்' அம் மாதிரி கொய்தவைகளை யன்றி, சுயமான ஒன்றிரு கட்டுரை, கதைகளையும் தாங்கியிருக்கிறது. உள்ளே உள்ள அத்தனை விஷயமும் பொழுது போக்கிக் களிக்கத்தக்கவாறு சுவை தரும் முறையில் அமைந்திருக்கிறது. நாமக்கல் கவிஞரின் பாடல், பொருள் நயமும் இனிமையும் பொருந்தியிருக்கிறது. அழகான சித்திரங்கள், இரண்டு மூன்று வர்ணங்களில் பக்கத்துக்குப் பக்கம் அச்சிடப்பட்டுள்ளன. நேர்த்தியான, புதுமையான ஒரு முயற்சி.

பாசம்: ஆசிரியர்: சங்கரராம். வெளியிட்டோர்: எ. என். பூர்ண அண்டு கம்பெனி, அபிராமபுரம், தேனம்பேட்டைப் போஸ்டு, சென்னை. விலை: ரூ. 2—8—0

ஆசிரியரின் பதினறு சிறுதைகள் அடங்கியிருக்கின்றன இந்தத் தொகுதியில். ஒரு தொழிலாளியிடம் எஜமான் வீட்டுக் குழந்தைக்குள்ள 'பாசம்' ஓர் அழகான சித்திரம். இளமையின் சுதந்தர இச்சையை வர்ணிக்கும் 'இனம் இனத்தோடு' என்ற கதை, நேர்த்தியானது. 'மறவாத இரவு' 'சீர்', 'கடைசி வேட்டை' என்ற கதைகள், நகைச்சுவைக் கேற்றவை. ஆனல், அவைகளிலும் ஆசிரியரின் ஒரே நிதானமான போக்கைத்தான் காண்கிறோம். மொத்தத்தில் பல விதப் பாத்திரங்களையும் எழுவாய்களையும் மேற்கொண்டு, ஏற்ற இறக்க மில்லாமல், ஒரே சுருதியில் அத்தனை கதைகளும் அமைந்திருக்கின்றன.

கதாமணி (முதல் பாகம்): பதிப்பாசிரியர்: என். ராமஸ்வாமி (துமிலன்), தியாகராயநகர், சென்னை. விலை: ரூ. 1.

நீண்ட காலமாய்ப் பத்திரிகைத் தொழிலில் இருந்து கீர்த்திபெற்ற 'துமிலன்', 'நல்ல நாடகங்கள் கதைகள், கட்டுரைகள் முதலியவற்றைத் திரட்டிக் கொடுக்கும்' இந்த முயற்சியைத் தொடங்கியிருக்கிருர். இதில், ராஜாஜி 'சிறு கதை' பற்றி எழுதியுள்ள கட்டுரை அற்புதமான கருத்துக்கள் அடங்கியதாகும். தமிழ் நாட்டின் அத்தனை சிறு கதை எழுத்தாளரும் அதைக் கண்டிப்பாய்ப் படிக்க வேண்டும். இடையே அவர் கூறும் இந்த எச்சரிக்கையை அவர்கள் முக்கியமாய்க் கவனிக்க வேண்டும்:

'இப்போது சில சிறு கதைகளைப் பார்த்தால், நண்பர்கள் தங்கள் மனைவிமார்களைக் கோஷாவில்தான் வைத்துக் காப்பாற்றவேண்டும்போல் இருக்கிறது. ஆணும் பெண்ணும் சேர்ந்து பேசுவதே அபாயம் என்று, இப்போது வெளியாகிவரும் கதைகளினல் ஏற்படும்போ லிருக்கிறது. ஒருத்தியை ஒருவன் கதையில் சந்தித்ததுமே, தருமத்துக்கு அபாயம் நேரிட்டு விடுகிறது. இத்தகைய இலக்கியத்தை உண்டாக்குவது எளிது; விற்பது எளிது. கள்ளிப்பெட்டிப் பலகையில் நச்சுவேலை செய்வது எளிது. ஆனல், அப்படிச் செய்த சாமானில் உறுதியில்லை; பயனும் இல்லை.'

இந்தத் தொகுதியில் கி. சந்திரசேகரன், 'குமுதினி' 'துமிலன்', பி. எஸ். ராமையா' முதலிய பிரபல எழுத்தாளர்கள் எழுதி யிருக்கிருர்கள். ராமையாவின் 'மொட்டைக்கோபுரம்' ஒரு நேர்த்தியான நையாண்டிச் சித்திரம். 'துமில'னின் 'தங்கம்' ஓர் ஏழைக் குடும்ப இளம் பெண்ணின் இதயத்தைப் படம் பிடிக்கும் அடக்கமான உணர்ச்சிச் சித்திரமாகும். மற்றுமுள்ள கதைகள், கட்டுரைகள் பலவும் ரஸமா யிருக்கின்றன. மிக நல்ல பதிப்பு.

குமரன் பஞ்சாங்கம்: கணித்தவர்: சிவராமன். வெளியிட்டோர்: தவசி குப்புசாமி முதலியார், குமரன் அச்சகம், காஞ்சிபுரம். விலை ரூ. 0—7—0.

எவரும் எளிய முறையில் உபயோகித்துக் கொள்ளக்கூடிய முறையில், தமிழ், துலுக்கு, இங்கிலீஷ் மாதம் தேதிகளோடு, திதி, வார, நட்சத்திர, யோக, கரணங்கள், மற்றும் பல விவரங்கள் சேர்த்து, இது பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

-- சுருக்கமான வழி --

ஆவணக்காப்பகம்
88844
சென்னை-600 008.

ராமசாமிக்குத் தன் மனைவி மேல் வெகு அன்பு. கல்யாணமாகி ஐந்து வருஷமாகியும், தம்பதிகள் புதிதாய்க் கல்யாணமானவர்கள் போல அவ்வளவு அந்நியோந்நியமாய் இருந்துவந்தார்கள்.

ராமசாமிக்கு ஒரு காரியாலயத்தில் குமஸ்தா வேலை. மாதம் இருபத்தைந்து ரூபாய் சம்பளம். ஏதோ ஒருவகையில் குடும்ப வாழ்க்கை நடந்து வந்தது. பரஸ்பர அன்பு ஒன்றைத் தவிர, அவர்கள் வாழ்க்கையில் இன்பம் அளிக்கத் தக்கதாய் வேறொன்றும் இல்லை.

அன்பு கண்ணுக்குப் புலப்படாத பொருள். கண்ணுக்குப் புலப் படும் முறையில், மனைவிக்கு ஏதாவது ஒரு நகை செய்து போட வேண்டும் என்று அவனுக்கு வெகு நாளாக யோசனை. பலநாள் வரை யோசித்து யோசித்துப் பார்த்தான். வழி ஒன்றையும் காணோம். அவளை வெறுங் கரத்துடன் பார்க்க அவனுக்கு மிக்க வேதனையாய் இருந்தது. ஏழையாய்ப் பிறக்க நேர்ந்ததற்காக வருந்தினான்.

அவனுக்கு வேலையில் விருப்பம் இல்லை. நாளாகவாக, உற்சாகமும் சந்தோஷமும் குறைந்து கொண்டே வந்தது. யந்திரம் போலக் காலங் கழித்து வந்தான். சகோதரக் குமாஸ்தாக்களில் ஒருவர் அவனுக்கு மிக்க நண்பர். அவர் ராமசாமியின் மனோவேதனையை உணர்ந்தார். என்ன விஷயம் என்று விசாரித்தார். ராமசாமி தன் நண்பரிடம் எல்லா விஷயத்தையும் விவரமாகக் கூறினான்.

நண்பர் சிரித்துக் கொண்டார். "பூ, இவ்வளவு தானா? இதற்காக வா இவ்வளவு கவலை? என்னிடம் முன்னமே சொல்லியிருக்கப் படாதா?" என்றார்.

"சொல்லலாம். ஆனால், சொல்லி என்ன பிரயோசனம் உண்டாகப் போகிறது?" என்றான் ராமசாமி ஏக்கத்துடன்.

"என்ன பிரயோஜனம் உண்டாகப் போகிறதா? ......சுருக்கமாக ஒரு வழி சொல்லுகிறேன் கேள். பணத்திற்குப் பணம் மிச்சம். நகைக்கு நகையுமாச்சு. **திருச்சியில் எம். ராமசாமி செட்டி கம்பெனியார் 'ஒரிஜினல் டைனமோ கல்ச்சர் வைரங்களை' உற்பத்தி செய்கிறார்கள். தோடு சைஸ் வைரம் ரூ. 1-8-0. பேசரி சைஸ் ரூ. 1-0-0.** அதை வாங்கிக் குறைந்த செலவில் ஒரு தோடு செய்து போட்டுவிடு" என்றான்.

ராமசாமியின் முகம் மலர்ந்தது. அவன் நண்பனைத் தழுவிக் கொண்டான்.

கோகுல் சோப்

(மிருகக் கொழுப்பற்றது)

ஆடைகளை தூய
வெண்மையாக்குவதில்
நிகரற்றது.

பெரிய பார்களாகவும், சிறு கட்டிகளாகவும்
குறைந்த விலையில் கிடைக்கும்

தயாரிப்பவர்: **டி. எஸ். ஆர். & கோ**
கும்பகோணம்

ஸ்டாகிஸ்ட்: **புஷ்பவனம் ஸ்டோர்ஸ்**
திருவல்லிக்கேணி, மதராஸ்

வெளிவந்துவிட்டன! வெளிவந்துவிட்டன!!

ஆசிய ஜோதி நூல்கள்

1. கதைக் கொடி

பிரபல தமிழ் எழுத்தாளர்கள் எழுதிய சிறுகதைகளின் தொகுதி.

“ஆசிரியர்களின் சிறப்பிலும் கதைகளின் தன்மையிலும் தற்காலத்திலே தமிழ் நாட்டில் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஒரு சிறந்த கதைத் தொகுதி இது” என்று ‘சக்தி’ ஆசிரியர் தி. ஜ. ர. இதைப் பாராட்டுகிறார்.

விலை ரூ. 2—8—0

2. ஆசியாவின் எதிர்காலம்:

தற்போதைய உலக நிகழ்ச்சிகளை ஆழ்ந்து அலசி விவரிக்கும் ஒரு சரித்திர ஆராய்ச்சி.

ஏ. ஜி. வெங்கடாச்சாரி எழுதியது.

விலை ரூ. 1—4—0

ஆசிய ஜோதிப் பிரசுரம்
மைலாப்பூர் :: சென்னை

வெயில் அதிகமாகி வருகிறது

ஆனால், எரிச்சலைத் தடுக்கலாம்!

கோடைகாலத்திற்கு முன்பும் கோடைகாலத்தின் போதும் தினந்தோறும் கார்டில் பவுடரை உபயோகித்து வந்தால் நிச்சயமாக எரிச்சலைத் தடுக்கலாம். கார்டில் பவுடர் சென்ற முப்பது வருஷமாக ஜனங்களின் நன்மதிப்பைப் பெற்றிருக்கிறது. இன்றும், எரிச்சலைத் தடுக்க அதுவே சிறந்த மருந்து. பவுடர் தூவுவதற்கு வசதியான மேல் மூடியுடன் கூடிய தகரத்தில் கிடைக்கிறது.

தினசரி கார்டில் உபயோகியுங்கள்
அது தலை சிறந்தது!

குழந்தைகளுக்கு மிகச் சிறந்தது

கார்டில் பவுடர் உபயோகித்தால் வேறொரு பவுடர் உபயோகிக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் சுபாவமான வாசனை கலப்பற்ற அந்தப் பவுடரில் குழந்தையின் மெல்லிய தேகத்திற்கு எரிச்சல் தரும் பொருள் ஒன்றும் கிடையாது. குழந்தை பராமரிப்பில் கார்டில் பவுடர் தலை சிறந்தது. வெய்யில் கொடுமையையும் போக்கி சொர சொரப்பான சருமத்தை மழ மழப்பாக்குகிறது.

பெரிய சைஸ் டின் ரூ. 2

ஸ்பென்ஸர் அண்டு கம்பெனி லிமிடெட்

சென்னை

மான்யுபாக்சரிங் கெமிஸ்ட்ஸ்

SPENCER & CO., LTD., MADRAS.

LTK-52

லிப்டன் தேனீர் அருந்துகையில்
ஜாக்கிரதைக் குறைவாய்ப் பேசாதீர்கள்.

போன்: 218-A — தந்தி: "ராஜா" — Post Box 139

வாழையடி வாழையாக வந்த பழக்கம்

இந்தியாவிலே இரண்டு பெரிய பாரம்பரிய சொத்துக்கள் உண்டு. ஒன்று கலை. மற்றொன்று அதிதி உபசாரம். இவ்விரண்டும் வாழ்வின் இன்பத்தோடு பின்னிக் கிடக்கின்றன. சோழர் காலத்து சிற்பங்களை நாம் பார்க்கும்பொழுது நமக்கு மனதில் எழும் ஒரு இன்ப உணர்ச்சி நாம் நமது நண்பர்களுக்கு தேயிலைப் பானம் கொடுக்கும்பொழுது உண்டாகிறது. அதிதி உபசாரத்துக்கு தேயிலைப் பானத்தைத் தவிர வேறு சிறந்தது எது? எந்த நேரத்தில் யார் வந்தாலும் நிமிஷத்தில் தயார் செய்யக் கூடியது அதுவே. உங்கள் பாரம்பரிய பழக்கத்தை மறக்கவேண்டாம். வீட்டுக்கு விரும்பி வந்தோரை தேயிலை கொடுத்து மனகுளிரச் செய்யுங்கள்.

★

"நித்திய கர்மா" என்ற எங்கள் புது சித்திரங்களுடன் கூடிய புத்தகம் எந்தெந்த நேரத்திலெல்லாம் தேயிலை பானம் பருகலாம் என்பதைப்பற்றி விவரிக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து உங்கள் பெயர் விலாசம் முதலியவற்றுடன் கீழ்கண்ட விலாசத்துக்கு அனுப்பவும். இந்தியத்தேயிலைக் கமிஷனர், இந்தியன் டீ மார்க்கெட்டு எக்ஸ்பான்ஷன் போர்டு, தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா.

குடும்பத்துக்கு ஏற்ற ஒரே பானம்



இந்தியத் தேயிலை

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது. I K 204

Printed & Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press)
115-E, Mowbrays Road, Royapettah, Madras
Managing Editor: Vai. Govindan. Editor: T. J. Ranganathan